www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00


දිනමුරසු වාරමලර් மார்ச்.21–27,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 301

# எச்சரிக்கை அதிர்வுகள்!

## தலைநகரில் புலிகள்





## கொலை வழக்கில் ஒரு கொலை

## இந்த வாரம் ஆரம்பம்

## வைர மோதிரப் போட்டி

www.padippakam.com

# முரசம்

## புன்னகையும் முட்களும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

ஜனாதிபதியும்
எதிர்க்கட்சித் தலைவரும்
சந்தித்தனர். வன்முறையை
தவிர்க்கச் சிந்தித்தனர்.
என்றெல்லாம் செய்திகள்
வெளியாகி இருந்தன!

இந்தச் செய்திகள்
பொது மக்கள் மனதில்
செரிமானமாக முன்பே
இரு அணிகளும்
பயங்கரமாக மோதியுள்ளன!

மேலும் மோதல்கள்
நிகழத்தான் போகின்றன!

அரசியல்வாதிகள்
கை குலுக்கிக் கொள்வது
சமயம் பார்த்து
காலைவாரி விடுவதற்காகவே!

அரசியல்வாதிகள்
தமக்குள் பரிமாறும்
புன்னகைகளுக்குள்ளே
இருப்பவை முட்களே!

கைகுலுக்கியபடி
காட்சி தரும்
புகைப்படங்களில்
முட்கள் தெரிவதில்லை!
அதனால்தான் அவற்றை
மெய்யான காட்சிகள்
என்று பலர்
நம்பிவிடுகிறார்கள்.

வட மேல் மாகாணத்தில்
மிகப் பாரிய
தேர்தல் மோசடி நடந்த
சூடுகூட தணிய முன்னர்
அம்மையாரும், ரணிலும்
புன்னகைகளை பரிமாறுவது
எப்படிச் சாத்தியமாக முடியும்?

தம்மை தோற்கடிக்க
ஆளும் அணி
அசுரத்தனமாக முயன்றது
என்று ஆவேசப்பட்ட
ரணில் விக்கிரமசிங்கே
அம்மையாருடன்
நட்புறவாக பேசிவிட்டு
வந்தார் என்பது
நம்பக்கூடிய செய்தியா?

இரு தரப்புக்கும் இடையே
கசப்புத் தணிவதற்கான
கால அவகாசமே
இல்லாத நிலையில்
உளப்பூர்வமாக
ஒத்துழைப்பு பேச்சு
நடத்த முடியுமா?

இல்லை! இல்லவே இல்லை!
சாத்தியமே இல்லை!

அவ்வாறிருந்தும்
தேர்தல் வன்முறையை
தவிர்க்க ஒன்றுபட்டதாக
கைகுலுக்கியது எவ்வாறு?

இரு தரப்புக்குமே
அப்படியொரு
அமர்க்களமான நாடகம்
அவசியமாக இருந்தது!
அவ்வளவுதான்!

அந்த நாடகத்தின்
பின்னணியைக் கூட
புரிந்துகொள்ள முடியாது
வரவேற்றவர்கள்
அனுதாபத்துக்குரியவர்கள்!

'இனப்பிரச்சனை தீர்வுக்கும்
இப்படி ஒன்று பட்டாலென்ன'
என்று அறிக்கைவிட்ட
தமிழ்க் கட்சிகளது
மேதாவிகளும் உள்ளனர்!

இவர்கள்
அனுதாபத்துக்குரியவர்களல்ல!
இரண்டு தரப்பும்
ஒரு போதும் சேராது
என்று நன்கு தெரிந்தும்
தெரியாதது போல
நடிப்பவர்களே இவர்கள்!

இனப்பிரச்சனை தீர்வுக்கு
மட்டுமல்ல,
வேறு எந்த பொதுப்பிரச்சனை
தீர்வுக்கும்
ஆளும் அணியும், எதிரணியும்
ஒன்றுபடப் போவதில்லை!

இடைக்கிடையே
ஒத்துழைப்பு நாடகம்
மட்டும் அரங்கேறும்!

இனப்பிரச்சனைத் தீர்வு
விடயத்திலும்
இரு முறை அத்தகைய
நாடகங்களை கண்டுள்ளோம்.!

தீர்வு யோசனைகளை
அம்மையார் முன்வைத்தபோது
அவரும், ரணிலும்
சந்தித்தனர். ஒத்துழைப்பு
பல்லவி பாடப்பட்டது!

பின்னர் பிரிட்டிஷ்
அமைச்சர் பொக்ஸ்சை
வைத்தும் அற்புதமான
நாடகம் அரங்கேறியது.
இரு தரப்பும் சிறப்பாக
நடித்திருந்தன.

இவ்வாறான சந்தர்ப்பங்களிலும்
பின்னணி புரியாது
போற்றி மகிழ்ந்தவர்களும்
இருக்கிறார்கள்.
பின்னர் யாவும்
கற்பனைகளாகின!

இரு தரப்புமே
அதிகாரத்தை பிடிப்பதை
இலட்சியமாக கொண்டவை!

அடுத்த தேர்தலை
எப்படி எதிர்கொள்வது
என்பதற்கு ஏற்பவே
ஒவ்வொரு அடியாக
எடுத்து வைப்பவை!

பொ.ஜ.முன்னணியை
எதிர்ப்பது ஒன்றே
ஐ.தே.க.வின் கொள்கை!

ஐ.தே.க.வை எதிர்ப்பதே
பொ.ஜ.மு.யின் கொள்கை!

இதனைவிட்டால்
இரு தரப்பிடமும்
தனித்துவமான கொள்கைகள்
தற்போது கிடையாது!

எனவே, ஒருவரையொருவர்
தாக்காது பிரசாரம்
செய்வது எப்படி.
புரிந்துணர்வு ஏற்படுவது
எப்படி? எப்படி?

சாத்தியமே இல்லை
என்பதையே
நடைமுறை அனுபவம்
நமக்கு உணர்த்துகிறது!

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஒருருவே போதும்!

சிவன் என்றும் சக்தி என்றும் விநாயகன், முருகன், நாராயணன் என்றும் இராமர் என்றும் அநுமன் என்றும் எத்தனையோ தெய்வங்களை வைத்து வணங்குகிறோம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று எம் முன்னோர் கடைப்பிடித்த நெறிக்கு முற்றிலும் மாறாகவன்றோ எமது நடைமுறைகள் இன்று காணப் படுகின்றன?' இந்த எண்ணம் எம்மனத்தில் அடிக்கடி தோன்றவே செய்யும்.

உண்மையில் நாம் எல்லாரும் அந்தகர்களே-கண்ணிருந்தும் பார்வையற்றவர்களே! பார்வையற்ற ஐவர் யானையைத் தொட்டுப் பார்த்து, அவர்களுடைய கையில் எது பட்டதோ அதுவே தான் யானை என்று கூறிய கதை எமக்குத் தெரிந்ததே!

அதே போலத்தான், எமது கருத்துக்கு எட்டும் எந்த உருவையும் மனதில் பதித்து பக்தி செலுத்தினால் அதற்குரிய பலன் கிடைக்கும்.

நாம் அனைவருமே ஆழமான அறிவினைப் பெற்றவர்களல்ல; ஆன்மீக அறிவும் தெளிவும் பெற்றவர்களுமல்ல. எமது புலன் எத்தகைய உருவின் மீது ஆழமாகப் பதிகிறதோ, அதனையே மனதில் பதித்து பூஜித்து வரலாம். எந்த உருவத்தில் இறைவனை நினைக்கிறோமோ அதே உருவத்தை திரிகரண சுத்தியுடன் மனதில் பதித்து வழிபடலாம்.

இந்து மதத்தவர்கள் வழிபடும் கடவுள் உருவங்களுக்கும் பலப்பல கதைகள் கூறப்படுகின்றன. அக்கதைகளில் உள்ளே ஆழ்ந்த தத்துவங்கள் பொதிந்து கிடக்கின்றன. ஆகவே அத்தத்துவங்களை-அவை தானாகப் புரியும் வரை-அறிந்து கொள்வதில் காலத்தைச் செலவிடாமல் ஏதோ ஒருருவத்தை மட்டும் உள்ளத்தில் பதித்து பூஜித்துப் பலனடையுங்கள்.

ஞானேந்திரன்.

## ஆன்மீகம்



## அலி (ரலி)யின் அறிவு விளக்கம்

ஒரு நாள் ஹஸுரத் அலி (ரலி) அவர்களிடம் சிலர் வந்து 'செல்வம், அறிவு சிறந்தது எது'வென வினவினார். அதற்கவர்கள் அறிவு தான் சிறந்ததென பின்வருமாறு பிரித்துக் கூறினர்:

* செல்வந்தனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிவாளிக்கோ நண்பர்களே அதிகம்.
* செல்வத்தை கள்வர்களால் கவர்ந்து செல்ல முடியும். ஆனால் அறிவை அவர்களால் கவர்ந்து செல்ல முடியாது.
* செல்வந்தனுக்கு கஞ்சத்தனம்தான் அதிகமாக இருக்கும். ஆனால் அறிவுள்ளவனுக்கோ எப்போதும் தாராளத் தன்மை இருக்கும்.
* செல்வம் உள்ளத்தின் ஒளியைப் போக்கி இதயத்தை இருளடையச் செய்து விடும். ஆனால் அறிவோ இருண்ட உள்ளத்திலும் ஒளியைப் பாய்ச்சி அதை விசாலப்படுத்திவிடும்.
* செல்வத்திற்கு எப்போதும் எல்லையுண்டு, நிறையுண்டு, அளவுண்டு, கணக்கும் உண்டு. ஆனால் அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லைகள் ஏதும் கிடையாது.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.298

### பரிசுக்குரிய கவிதை

#### வாழ்க்கையோட்டம்

கடலுக்குள்ளே மீன்களோட்டம்;
கரைதனிலே எங்களோட்டம்.
அகதிகளின் அவலவோட்டம்
அந்தரத்தில்
வாழ்க்கையோட்டம்....!

ஜெ.சந்திரதாஸ்-
பொகவந்தலாவ.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### தேவைதானா?

ஓடுவதும்
ஓட வைப்பதுவும்
பயிற்சியின்றி
முயற்சியின்றி
நடக்கையிலே...
ஏனிந்த அவசியம்?

சி.கதிர் செல்வன்(சுதன்)-
வவுனியா



#### பயிற்சி

இது படைகளுக்கான
பயிற்சி அல்ல....
பொது மக்களுக்கான
பயிற்சி!

'சாய்ந்தமருது பைறோஸ்'-
சாய்ந்தமருது-11

#### ஒய்ந்திடாதே!

முயற்சியுடையார்
இகழ்ச்சியடையார்...!
பாய்ந்து வா
ஓய்ந்திடாதே!

அ.யாழினி-மட்டக்களப்பு.

#### கைவீசு

கைவீசம்மா
கை வீசு!
கலங்கிப் போகாதே
கைவீசு!
பங்கர் தோண்டலாம்
கை வீசு!
பதுங்கிக் கொள்ளலாம்
கை வீசு!

ஏ.எஸ்.முஹமட் றிபாய்-
காத்தான்குடி-04.

#### திருகோணமலை

"என்ன மாமா....
ஒவ்வொரு நாளும்
கப்பல் வரும்-
காட்டுகிறேன்-என்று
ஏமா(ற்)றுகிறீர்கள்!"

கா.சுஜந்தன், கிளிநொச்சி.

#### புதிய பாதை

உயிரை இழந்தோம்;
உடமை இழந்தோம்.
உறுதி இழக்கவில்லை!

ஏ.விஜி ஆரி-
ஜெயபுரம்,பூநகரி.

#### தலைதப்புமா?

தலைகள் உருள்வது கண்டு
தந்தையைக் காப்பாற்றிடவே
தலைதெறிக்க ஓடுகின்றோம்!
தந்தை தலை தப்பிடுமா?

சி.நித்தியகுமார்-வேப்பங்குளம், வவுனியா.

#### வேறுவழி என்ன?

பாணும் பருப்பு மிங்கே
பவுண் விலையாய் மாறுவதால்,
வாழ்வு வளங்க ளெல்லாம்
வறுமை குடி யேறுவதால்,
நீரும் நெருப்பும் தான்
எம் வழிக்குத் தகுதி இனி!


நிஜந்திக்கா-கனகசிங்கம், கல்லடி,
மட்டக்களப்பு.

#### தலை(மை) யாருக்கு?

மாணவ அமைப்பென்ன-
மாணவ தலைமையும் வேண்டாம்!
வாடா தம்பி
வவுனியாவைவிட்டு ஓடலாம்....!

தம்பி தவம்-காரைதீவு.

## கவிதைப் போட்டி இல.301



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 27.03.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.301
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்பின் முரசே! நீ ஆரம்பித்ததிலிருந்து எம் வீட்டில் ஓர் அங்கத்தவர் நீ! அன்றிலிருந்து இன்றுவரை உன் தரிசனம் தவறாத சூரியோதயம். உன் ஆக்கங்களோ தெவிட்டாத தேன்.

மொத்தத்தில் நீயில்லா வாரம் என் இதயம் காண்பது வெறுமை. இதுவல்லோ உனக்குப் பெருமை!

செல்வி ப்ரியநேசி- களுந்துறை (தெற்கு).

இனிய முரசே!

நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. உன் நேர்மையுள்ள பணி தொடர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

என். இராஜசிறி (ராசி),
மன்னார்.

## புரட்டிய போது.....

300 முரசுகள் என்பது ஆச்சரியமல்ல. 299 முரசுகளையும் என் மனைவி பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார். அவற்றை திரும்ப புரட்டிப் பார்க்கும்போது 'முரசு' வாசகனான எனக்கு பூரிப்பு ஏற்பட்டது. முரசின் கணிப்புக்கள் பின்னர் நிகழ்வுகளால் உண்மையாக்கப்பட்டுள்ளமைதான் ஆச்சரியமான உண்மை.

புலனாய்வு என்ற பெயரில் அயல்நாட்டு சஞ்சிகைகளில் வரும் அரசியல் செய்திகளையும் படித்து வருகிறோம். அவர்களது ஆருடங்களும், கணிப்புக்களும் ஒரு மாதம் சென்று திரும்பப் பார்த்தால் பொய்த்துப் போயிருக்கும்.

அதேசமயம் மேலை நாடுகளில் புலனாய்வு பத்திரிகை இயல் பல உண்மைகளை வெளிக்கொண்டுவருகிறது. நம்நாட்டில் 'முரசு'க்கு அந்தப் பெருமை சேரும்.

தமிழக அரசியல் களத்தைக் கூட முரசு சரியாக மதிப்பிட்டதையும் மறக்க முடியாது. சென்ற பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா வெற்றி பெறமாட்டார் என்றே தமிழக பத்திரிகைகள் கூட ஆருடம் கூறின. 'முரசு' மட்டுமே ஜெயலலிதாவுக்கே ஆதரவுள்ளது என்று குறிப்பிட்டிருந்தது. முரசே உன் பணிதொடரட்டும்.

சா. குமாரலிங்கம், கொட்டாஞ்சேனை.

## பெருமூச்சும் எரிச்சலும்

முரசின் வரவுக்காக இங்கு நானும் என்னுடன் தங்கி உள்ளோரும் காத்திருந்து படிப்போம். இங்கு முரசுக்கு நல்ல மரியாதை. 'முரசை' நேசிப்பவர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டிருப்பதால்தான், சில பத்திரிகையாளர்களுக்கும் பொல்லாத எரிச்சல். அதனால் தங்கள் பத்திரிகைகளை ஒழுங்காக நடத்தக்கூட நேரமில்லாது 'முரசை' பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே பத்திரிகைகளும் 'முரசு' கூறும் கருத்துக்களை அப்படியே வேறு விதமாக கூறுகின்றன.

சி. அருள்சோதி, கனடா.





இனிய முரசே!

நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். ஆனாலும் இளவரசி டயானாவின் சோகமே என்னை மிகவும் கலங்க வைக்கிறது. ஏன் எல்லோரும் டயானாவை ஏமாற்றுகிறார்கள். அவரின் சாதகத்தில் அப்படித்தான் உள்ளதோ என என்னை சிந்திக்க வைக்கிறது.

எஸ். ஜெயமலர், ஆ.மு. குடியிருப்பு.

தித்திக்கும் செய்திகளுடன், திகட்டாமல் வாரம் தோறும் திக்கெட்டும், வலம் வரும் முரசே! உன்னில் அடங்கியுள்ள அனைத்து அம்சங்களும் அருமை. தமிழுக்கும் அமுதென்று பெயர்; அந்தத் தமிழை அமுதமாக, இனிமையாக சொற்சுவை, பொருட்சுவை அனைத்தும் சேர்த்து தமிழ் வாசகர்களை வியப்பில் ஆழ்த்தும் தமிழ் முரசு- அது தான் எம் முரசு!

ஏ. செபஸ்தியன்,
உடுப்பிட்டிய, உக்குவலை.

"தமிழ் மொழி" அதன் இனிமை முழங்கிடும்- முரசு நீ பத்திரிகைக் களத்தில் அரங்கேற்றிடும் அந்த,
ஆம் "ஓயாத முரசலைகள்" மேலும் முழங்கிட
எமது உயிருள்ள வரையான ஆதரவுகள்.

லக்ஸ்மன் நியூஸிலாந்து.

## தொடர்க பணி!

தித்திக்கும் செய்தி பல
தேடித்தரும் தின முரசே!
எத்திக்கும் மதிப்புடனே
எல்லார்க்கும்
முரசொலியால்
புத்திக்கு விருந்தானாய்!
போற்றுமரு மருந் தானாய்!
சித்திக்கும் திசை காட்டு!
தேன்தமிழர் இசை கூட்டு!

புறாவும் பறக்காது;
புண்ணியமும் மலராது;
காகம் தான் பறக்கும்!
கழுகுகளும் இனிப்பறக்கும்!
நாய்கள் ஓலமிடும்;
நரியெல்லாம் நடனமிடும்!"
இத்தகைய பாவெல்லாம்
இனிய பொருளுணர்த்தி
சித்தம் நிலை நிறுத்தத்
தின முரசே செய்க பணி!

பன்குடாவெளி மூர்த்தி.

## இடம்பெயர்விலும்

இங்கு மல்லாவியில் முரசு 30 ரூபா. ஐந்து நாட்கள் பிந்தியே கிடைக்கிறது. நான் விரும்பி கேட்பது வெரித்தாஸ் வானொலி. என்னை மறந்து விரும்பிப் படிப்பது 'முரசு'. 230 முதல்-248வரை முரசை பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். மூன்று இடங்கள் விட்டுவிட்டு இடம் பெயர்ந்தும் என் முரசை மட்டும் பத்திரமாக வைத்திருக்கிறேன். நான் இங்கு மல்லாவியில் நகைக்கடையில் பிரதி முகாமையாளராக இருக்கிறேன்.

கு. சிறிதரன், மல்லாவி.

## மர்ம இடி

ஆசை முரசே!

நீ வாரா வாரம் சுமந்து வரும் சகல அம்சங்களும் பிரமாதம். அதில் உண்மைத்தொடர் இடி அமீனின் அதிர் இடியை வாசிப்பவர் மனதில் மர்ம இடி.

தயாழினி-கே, அக்கராயன்.

## முரசின் தவறு

அன்பின் முரசே!

அதிரடி அய்யாத்துரையார் குறிப்பிட்டதுபோல அறிவிப்பாளர்களின் அரை குறை ஆங்கில புகுத்தல்களை நாங்களும் கண்டிக்கிறோம். முரசும் கண்டித்துள்ளது. நன்றிகள். ஆனால் அதே முரசில் (மு 298-பெப்28-மார்ச்-06,1999) சந்திக்கு வராத சங்கதிகள் பகுதியில் 'ரிப்பேய'ராகியிருக்கிறது என்றும், அலசுவது இராஜதந்திரி பகுதியிலும் இமேஜ், இமேஜ் என்றும் பலமுறை பயன்படுத்தியுள்ளீர்கள். ஆங்கில வார்த்தைகள் ஆதிக்கம் குறைய வேண்டும் என்று எல்லோரும் விரும்புவோம். முரசின் தவறுக்கும் முரசுதான் பதில் சொல்ல வேண்டும்.

முரசின் ஆக்கங்களும், ஆய்வுகளும் உண்மையானவை. தொடரட்டும் முரசின் சேவை. 93ம் ஆண்டில் இருந்து எனது அறிவு வளர்ச்சியின் வேகத்தில் முரசுக்குதான் பங்குண்டு. ஆம் நான் முரசின் அபிமானி.

முரசாயினும் குற்றம் குற்றமே.

கிரிகரன், பெல்ஜியம்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.


படிப்பகம்

www.padippakam.com

## கூடாரம் அமைத்து உறுப்பினர் சேர்ப்பு

### இடம் பெயர்வின் பின்னர் பலர் இணைவு

(நமது நிருபர்)

**வ**ன்னியில் 'யுத்த கோஷ' நடவடிக்கையால் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

படையினர் கைப்பற்றிய இரணை இலுப்பைக்குளத்தை அடுத்துள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றவர்களில் பலர் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளனர்.

'யுத்த கோஷ' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஒரு வாரத்திற்குள் இருநூறுக்கு மேற்பட்ட புதிய உறுப்பினர்கள் புலிகளோடு இணைந்து கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் கூடாரங்கள் அமைத்து, புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் முயற்சிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

மூன்று முறிப்பில் உள்ள படையினர் மேற்கொண்டு முன்னேறலாம் என்று கருதப்படும் பகுதிகளில் உள்ள குடும்பங்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி நோக்கி செல்கின்றன.

அக் குடும்பங்களில் இருந்து இளைஞர்களும், யுவதிகளும் புலிகளில் இணைந்து கொள்ளும் வீதம் மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட இடம்பெயர்வுகளை சந்தித்த குடும்பங்கள் பல உள்ளன.

சமீபத்தில் இடம் பெயர்ந்த 15 ஆயிரம் பேரில் 8210 பேர் துணுக்காயில் தஞ்சமடைந்தனர். இவர்களில் 4210 பேர் ஏற்கனவே இடம்பெயர்வை சந்தித்தவர்கள்.

இப்படியே எத்தனை நாள் ஓடிக்கொண்டிருப்பது? என்று ஆதங்கம் அம்மக்களிடையே காணப்படுகிறது. அதனால் தம் பிள்ளைகள் இயக்கத்தில் சேருவதை பெற்றோர் பலர் முன்னர் போன்று தடுப்பதில்லை.

இதேவேளை, தமது குழந்தைகளை தம் தாயிடமோ, உறவினர்களுடனோ ஒப்படைத்துவிட்டு, குடும்ப பெண்களும் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளனர்.

அவர்களை முகாம்களில் சென்று பிள்ளைகள் பார்வையிடுகின்றனர். முன்பு இயக்கத்தில் சேர்ந்த பிள்ளைகளை தேடி தாய்மாரர் வருவார்கள். இப்போது இயக்கத்திலுள்ள அம்மாவைத் தேடி பிள்ளைகள் வருகின்றனர் என்று புலிகள் கூறுகின்றனர்.

மேலும் பாரிய இடம் பெயர்வு ஒன்றுக்கான சாத்தியம் இருப்பதால், புலிகள் இயக்கத்தில் இணைவோர் எண்ணிக்கை அதிகமாகும் என்று வன்னியில் உள்ள சமூக ஆய்வாளர் ஒருவர் கூறியுள்ளார்.

# யாழ்குடாநாட்டில் காணிச் சுவீகரிப்பு

# பிரச்சனையை தணிக்க தமிழ்க் கட்சிகள் உதவி!

**யா**ழ் குடாநாட்டில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 12 ஆயிரம் ஏக்கர் காணி அரசால் சுவீகரிக்கப்பட உள்ளது.

இத்தகைய பாரதூரமான விவகாரத்தை திசை திருப்ப சில தமிழ்க் கட்சிகளது நடவடிக்கைகள் உதவுகின்றன.

தாம் நீதியமைச்சருடன் பேசியதாகவும் ஜனாதிபதியுடன் பேசித்தடுப்பதாக உத்தரவாதம் அளித்துள்ளதாக தமிழ்க் கட்சி ஒன்று பத்திரிகைகளுக்கு செய்திகொடுத்துள்ளது.

குறிப்பிட்ட விடயத்தில் மக்களது விழிப்புணர்ச்சியை தணித்து திசை திருப்பவே மேற்படி செய்திகள் உதவுகின்றன என்று அரசியல் நோக்கர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நீதியமைச்சர் பீரிசுக்கு மேற்படி காணி சுவீகரிப்பு தொடர்பாக எதுவும் தெரிந்திருக்கவில்லை. சீருடைத்தரப்பும், அதனோடு தொடர்புடைய அமைச்சுமே வடக்கு-கிழக்கு தொடர்பான முக்கிய முடிவுகளை எடுத்து வருகின்றன.

அவ்வாறு இருக்கும்போது நீதியமைச்சர் எப்படி உத்தரவாதம் கொடுக்க இயலும்? பாராளுமன்றத்தில் மேற்படி விவகாரம் பற்றி கேள்வி எழுப்பியபோது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதில் எதனையும் கூற மறுத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

உண்மையிலேயே அரசுக்கு அப்படி ஒரு நோக்கம் இல்லையானால், அதனை எழுத்து மூலமாக தெளிவாக தெரிவிக்குமாறு தமிழ்க் கட்சிகள் கோரியிருக்க வேண்டும். குறிப்பிட்ட பகுதிகளில் அப்பகுதி மக்கள் குடியேற அனுமதிக்குமாறு கேட்டிருக்க வேண்டும்.

அதற்கு மாறாக வாய்மூல உத்தரவாதங்களை நம்பி, பிரதான பிரச்சனைகளில் இருந்து அரசை காப்பாற்ற தமிழ்க் கட்சிகள் முயலக்கூடாது என்று அரசியல் நோக்கர்கள் கூறியுள்ளனர்.

கடந்த காலத்தில் சிங்களக் குடியேற்ற விடயங்களில் தமிழ்க் கட்சிகளுக்கு கூறப்பட்ட உத்தரவாதங்கள் காற்றில் பறந்ததையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

### தயாரில்லை

குறிப்பிட்ட பிரச்சனையில் அரசியல் ரீதியாக அரசை எதிர்த்து போராட தமிழ்க் கட்சிகள் தயாராக இல்லை. அதனால் அரசுடன் பேசி உத்தரவாதம் பெற்றதுபோல மக்களை நம்பவைக்க இவ்வாறு செய்திகள் வெளியிடுகின்றன் என்றும் அரசியல் நோக்கர்கள் கூறியுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் பற்றி ஆராய விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதி கூறியதாக முன்பு தமிழ்க் கட்சிகள் தெரிவித்தன. இன்றுவரை கமிஷன் எதுவும் நியமிக்கப்படவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சூரியக் கதிர் நடவடிக்கையின் பின்னர் பின்னர் காணாமல் போனவர்களை பற்றி ஆராய்வதற்கு பதிலாக, ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் காணாமல் போனோர் பற்றி தற்போது யாழில் விசாரணை நடக்கிறது. இது ஒரு கேலிக்கூத்தாகும். இதனைக்கூட தமிழ்க் கட்சிகள் எதிர்க்கவில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

## தேர்தலுக்காக படை நடவடிக்கை

### பெண் புலிகள் அணி தெரிவிப்பு!

**"ச**ந்திரிக்கா அரசின் சுயலாபத்திற்காக முன்னெடுக்கப்படும் போரின் தலை விதியை மாற்றியமைப்போம். வெற்றியை எமதாக்குவோம்" மேற்கண்டவாறு புலிகளின் மகளிர் பிரிவு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் களத்தில் வெற்றி பெறுவதற்காக தமிழ் மக்களின் வாழ்விடங்களை போர்க்களங்களாக விரிவுபடுத்தும் திட்டத்தை அரசு தீட்டியுள்ளது என்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சமாதானத்திற்கான போர் என்ற போர்வையில் தமிழர்களை அழிப்பதே நோக்கமாகும்.

சிங்கள ஆட்சியாளர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை சட்டங்களையும், போர் பிரகடனங்களையும் வெளியிடுவதன் மூலமே சிங்கள பெரும்பான்மை மக்களின் மனங்களைத் திருப்திப்படுத்த முயன்று வந்துள்ளனர்.

கடந்த நான்கு வருட காலத்தில் எதனையும் சாதிக்க முடியாத சந்திரிக்கா அரசு, மிகுந்த நெருக்கடி மத்தியில் இந்த தேர்தல் ஆண்டை சந்திக்கிறது.

சென்ற தேர்தலில் அரசு அம்பலப்பட்டு போனதால், இம்முறை தேர்தலில் எந்த முகத்தை காட்டுவது? தமது அரசியலின் ஆயுளை நீடிப்பதற்காக தமிழர் மீதான யுத்தத்தை தீவிரப்படுத்துவது தவிர, அரசால் வேறெதனையும் செய்ய முடியாது.

வன்னிக் காடுகளுக்குள் முடங்கிப் போயுள்ள அரச துருப்புக்களை முற்றிலும் அழித்தொழிக்கும் வல்லமை எமது போராட்டத்திற்கு உண்டு. அதற்காக இளைய தலைமுறையினர் எம்மோடு இணைய வேண்டும்" என்று பெண் புலிகள் அணி விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள் கொள்முதல்

**வ**வுனியாவில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பூந்தோட்டம் பகுதிக்கு புலிகளது அணி ஒன்று வந்து சென்றதாம்.

இரவு நேரத்திலேயே வந்து சென்றுள்ளனர். அங்குள்ள கடை ஒன்றை திறக்க வைத்து நாலாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்தனராம்.

மூவாயிரம் ரூபாயை கொடுத்துவிட்டு, மீதிப் பணம் நாம் உயிருடன் இருந்தால் கொண்டுவந்து தருவோம் என்று கூறிவிட்டுச் சென்றனராம். அக் கடைக்கு சற்றுத் தள்ளியே புளொட் முகாம் இருக்கிறது. இரவில் அங்கு யாரும் தங்குவதில்லை.

## சுவீகரிப்பு நடக்கும்

### தேவானந்தாவுக்கு பதில்

**யா**ழ் குடாநாட்டில் 12 ஆயிரம் ஏக்கர் காணி சுவீகரிப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா பா.உ கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு பாராளுமன்றத்தில் பகிரங்கமாக பதிலளிக்கப்படவில்லை. டக்ளஸ் தேவானந்தா பா.உ.வுக்கு மட்டும் குறிப்பொன்று எழுதி அனுப்பப்பட்டதாம்.

புதிதாக எந்தத் திட்டமும் கிடையாது. ஏற்கனவே திட்டமிட்டபடி உள்ள பகுதிகளில் தான் சுவீகரிப்பு நடக்க உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

ஏற்கனவே திட்டமிட்டபடி என்று தந்திரமாக குறிப்பிடுவதும் அதே 12 ஆயிரம் ஏக்கர் பிரதேசத்தையே. நேரடியாகக் கூறாமல் சுற்றிவளைத்துக் கூறப்பட்டுள்ளது.

சூரியக்கதிர் நடவடிக்கையின் பின்னர் குறிப்பிட்ட பிரதேசத்தில் மக்கள் குடியேற அனுமதிக்கவில்லை. படையினர் மட்டுமே நிலைகொண்டுள்ளனர். எனவே, காணி சுவீகரிப்புக்கு திட்டம் போடப்பட்டுள்ளமை உண்மை என்பது நிரூபணமாகியுள்ளது.

## தமிழர் வீடுகளில் சோதனை

### நுவரெலியாவில் பாதுகாப்பு

(கண்டி நிருபா)

**நு**வரெலியா மாவட்டத்தில் சகல நுழைவாயில்களிலும் பாதுகாப்பும் காவல் அரண்களும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகாலவரை பொலிஸார் மாத்திரமே காவலரண்களில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்ட நிலை மாறி அங்கு இராணுவ வீரர்களும் கடமையில் கடந்தவாரம் தொடக்கம் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். நுவரெலியா நகருக்குள் நுழையும் நானு ஓயா-அட்டன் சந்தி, வெளிமடைச் சந்தி, இராகலை, கந்தப்பொல சந்தி, கண்டி-பூண்டுலோயா சந்தி முதலானவைகளில் காவலரண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதே வேளையில் தமிர்களின் வீடுகளும் பலத்த சோதனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன, 17.03.99 அன்று சார்க் வெளியுறவு அமைச்சர்களது மாநாடு நடைபெற்றமையும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட காரணமாகும்.

## நிலாப்தீன்மீது நீண்டகால குறி

### ஒரே நாளில் இரு தாக்குதல் திட்டம்

**கொ**ழும்பு கல்கிசையில் 16.03.99 அன்று இடம்பெற்ற கரும்புலித் தாக்குதல் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தற்போது பொலிசார் தரப்பு தகவல்கள் மட்டுமே வெளியாகி வருகின்றன. நிலாப்தீன் வாகனத்தில் வந்தபோது ஓட்டோ ஒன்றில் காத்திருந்த பெண் கரும்புலி குதித்தோடி, ஜீப்மீது பாய்ந்துள்ளார். ஜீப்பில் அவர் மோத முன்பே குண்டு வெடித்து விட்டதாக கூறப்படுகிறது.

பொலிஸ் புலனாய்வு அதிகாரியான நிலாப்தீன் மீது புலிகளுக்கு நீண்டகாலமாக குறி இருந்தது. புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரை கொழும்பில் கைது செய்ததில் நிலாப்தீன் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

சமீபகாலமாக செவ்வாய்க் கிழமைகளில் கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன என்பது தெரிந்ததே. கல்கிசை கரும்புலித் தாக்குதலும் செவ்வாய்க் கிழமையே நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் குண்டு வெடிக்கும் அதே தினத்தில், கொழும்பு கல்கிசை தாக்குதலுக்கும் திட்டமிடப்பட்டதாக தெரிகிறது.

ஆனால் மட்டக்களப்பு குண்டு இலக்கை எட்ட முன்பாகவே மாட்டுப்பட்டுவிட்டது.

தலைநகரில் நெருக்கடிகளை உருவாக்கும் புலிகளது தொடர் தாக்குதலின் ஒரு கட்டமே மேற்படி கரும்புலித் தாக்குதலாகும் என்று தெரிகிறது.

நிலாப்தீன்தான் முன்னாள் அமைச்சர் அத்துலத் முதலி கொலை தொடர்பாக புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரை கைது செய்திருந்தார். அதனால் தற்போதைய அரசால் இடைநிறுத்தப்பட்டார். அவரால் கைதான புலிகள் இயக்க உறுப்பினரும் பின்னர் விடுதலையாகிவிட்டார்.

கொழும்பில் புலிச் சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் தமிழ் இயக்கங்களது உதவியையும், இயக்கங்களில் இருந்து விலகியோரது உதவிகளையும் நிலாப்தீன் பயன்படுத்தி வந்தார்.

அதனால் எவ்வாறெனினும் அவரை தீர்த்துக்கட்ட புலிகள் திட்டம் தீட்டியதாக கூறப்படுகிறது.

இதுபற்றிய மேலதிக தகவல்கள் பின்பு வெளியாகும்.

## கண்டு பிடித்த குண்டும்....

### மக்களைச் சோதித்த குண்டும்!

**ம**ட்டக்களப்பு-ஏறாவூர்ப் பகுதியில் பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகளில் படையினருடன் சேர்ந்து EPRLF பின் றாசிக் குழுவினர் அவ்வப்போது ஈடுபட்டு வருகின்றனர் என்பது அறிந்ததே.

புலி எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒரு புறமிருக்க பொது மக்களைச் சோதிக்கும் வகையில் பீதி கொள்ள வைக்கும் நடவடிக்கைகளும் அவ்வப்போது அரங்கேற்றப்படுகின்றன என்பது தெளிவான விடயம்.

கடந்த வாரம் புலி உறுப்பினர் ஒருவர் படையினரிடம் சிக்கிக் கொண்டார். அவர் கொடுத்த தகவலின்படி ஏறாவூர்-மைலம்பாவெளியில் பற்றைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சிறிய இரு குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இது உண்மையிலேயே நடந்த விடயம்.

அதன் பின்னர் ஏறாவூர் 5 ஆம் குறிச்சிப் பகுதியில் ஒரு குண்டு கண்டெடுக்கப்பட்டதாகக் கூறி செயலிழக்கச் செய்யப்பட்டது.

இது ஏற்கெனவே திட்டமிட்டு மறைத்து வைக்கப்பட்டு அப்பகுதி மக்களைச் சோதித்துப் பார்க்க எடுத்த நடவடிக்கை என்று பொதுமக்களில் விசயமறிந்தோர் கூறுகிறார்கள்.

குண்டு வைக்கப்பட்டிருப்பதை அறிந்திருந்தும் அந்தப் பகுதி மக்கள் தகவல் தருகிறார்களா என்பதைச் சோதிப்பதே மேற்படி குண்டு கண்டு பிடிப்பின் நோக்கமாகும். இந்தக் குண்டு இருந்ததை அப்பகுதி மக்கள் தெரியப்படுத்தாதிருந்திருந்தால் தம்மீது பல்வேறு கெடுபிடிகள் தொடர்ந்திருக்கும் என்று கூறுகிறார்கள்.

இதேவேளை மட்டக்களப்பு-நாவற்குடாப் பகுதியில் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றதையடுத்து 12.03.99 அன்று குண்டு ஒன்று படையினரால் கண்டெடுக்கப்பட்டது. வாவியைக் கடந்து நகரப் பகுதிக்கு வரும் புலிகள் இந்தக் குண்டை, தருணம் வரும்போது பாவிப்பதற்காக மறைத்து வைத்திருக்கலாம் என்று அப்பகுதியில் விசயமறிந்தோர் தெரிவிக்கிறார்கள்.

## புலிகள் சரண்

**ம**ட்டக்களப்பில் ஒருவரும் திருக்கோவிலில் இருவருமாக பாதுகாப்புப் படையினரிடம் புலிகள் மூவர் சரணடைந்திருப்பதாகவும் கல்முனையில் மேலும் ஒரு புலி உறுப்பினர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். சரணடைந்த இருவரும் புலிகளில் இருந்து விலகியவர்கள் என்று தெரியவருகிறது.

மட்டக்களப்பு- மண்டூரில் ந.குணரெட்ணம் எனும் 16 வயது இளைஞன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரிடம் சரணடைந்திருப்பதாகவும், இவர் சமீபத்தில் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட பாடசாலை மாணவன் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

கல்முனை நகருக்குள் வர்த்தகர்கள் போல் நடமாடிய, தகவல் திரட்டும் புலிகளின் உளவாளியான எம்.சத்திய சீலன் என்பவரைத் தாம் கைது செய்திருப்பதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருக்கோவிலில் எஸ்.தமிழ்ச் செல்வி, சி.கோவிந்தன் ஆகிய இருவரும் தம்மிடம் சரணடைந்திருப்பதாகவும் தாங்கள் இருவரும் திருமணம் செய்ய ஆயத்தமாக இருந்ததால் இயக்கத்தில் இருந்து விலகிக் கொண்டதாகவும் திருமணம் முடிக்க புலிகள் தம்மை அனுமதித்ததாக அவ்விருவரும் கூறியதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கூறியுள்ளனர்.

## வாசலில் சிக்கிய குண்டு

### உயிர் தப்பினார் உயரதிகாரி

**ம**ட்டக்களப்பு உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரை இலக்காக வைத்து புலிகளால் அனுப்பப்பட்ட குண்டு பிடிபட்டுவிட்டது.

மட்டக்களப்பில் சி.வி.எஃப். எனப்படும் பொதுமக்கள் தொண்டர் படைமூலம் காவல் சேவையில் சேர்ந்தவர் நடேசானந்தராஜா.

இவரை புலிகள் தமது குண்டுத்தாக்குதலுக்கு பயன்படுத்த திட்டமிட்டனர். அவரை மிரட்டி தமது திட்டத்துக்கு இணங்க வைத்தனர்.

16.03.99 அன்று கல்லடியில் ஒரு வீட்டில் வைத்து குண்டொன்று நடேசானந்தராஜாவிடம் கொடுக்கப்பட்டது. ஓட்டோவில் அதனை கொண்டு சென்று உயர் பொலிஸ் அதிகாரியின் அறையில் வைக்க வேண்டும் என்று புலிகள் பணித்தனர்.

சோதனை அரண்களில் அறிமுகம் இருந்தமையாலும், காவல்துறை அடையாள அட்டை இருந்தமையாலும் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் வாயில்வரை ஓட்டோவில் சென்றுவிட்டார். வாயிலில் நின்ற பொலிசாருக்கு சந்தேகம் வந்துவிட்டது. ஓட்டோவை சோதனையிட்டனர். அப்போது குண்டு இருந்ததை கண்டுபிடித்தனர்.

குண்டு கண்டுபிடிக்கப்பட்டதும், தன்னை புலிகள் அனுப்பியதாக கூறினாராம் நடேசானந்தராஜா. உடனடியாக அவர் கைது செய்யப்பட்டதோடு, ஓட்டோ சாரதியான சிறி என்பவரும் கைதானார்.

சில காலத்தின் முன்னர் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பாலசுப்பிரமணியம் என்னும் பொலிஸ்காரர் ஒருவர் கைதானார். அவர் புலிகளுக்காக உளவு பார்த்ததாக கைதானார்.

தற்போது கைதாகியுள்ள நடேசானந்தராஜா மூன்றுநாள் விடுமுறையில் இருந்தாராம். பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நடேசானந்தராஜா சமையல் பகுதியில் கடமையாற்றினார்.

## நகருக்குள் புலிகள்

### திடீர் சுவரொட்டிகள்

**ம**ட்டக்களப்பு நகரப் பகுதியில் படையினர், பொலிஸார் மற்றும் படையினருடன் கூடவே சேர்ந்து செயற்படும் தமிழ்க் குழுக்கள் உள்ள பகுதிக்குள் புலிகளின் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்த மர்மம் அனைவரையும் வியப்பிலாழ்த்தியது.

கடந்த வாரம் மட்டக்களப்பு பஸ் நிலையம், மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பகுதிகளில் புலிகளின் பிரசுரம் ஒட்டப்பட்டிருந்தன. "துரோகிகளுக்கு மன்னிப்பில்லை, விடுதலைப் புலிகளுக்கே ஆதரவு" என்ற பிரசுரங்களே காணப்பட்டன என்று விசய மறிந்தோர் கூறுகிறார்கள்.

மேற்படி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது சம்பந்தமாக அப்பகுதியில் உள்ள பலரிடம் "இரவு வந்தவர்கள் யார் என்பது பற்றித் தெரியுமா?" என்று அக்கறையுடன் விசாரிப்பு நடந்ததாம்.

காலையில் அதிகமானோரின் கண்ணில் படாதபடி புலிகளின் சுவரொட்டிகள் இருந்த இடம் தெரியாமல் கிழித்தெறியப்பட்டுவிட்டதாம். வந்தது யார்? போனது யார்? எப்படி உள்ளே நுழைந்தார்கள் என்று காவல் துறையினர் மூளையைக் குடைகிறார்கள்.

## வீட்டுக்குவீடு சோதனை

**ம**ட்டக்களப்பு நகரப் பகுதியில் தம்மால் உறுதிப் படுத்தப்பட்டவர்களைத் தவிர ஏனையோர் அல்லது வெளியார் யாரும் வந்து தங்கியிருக்கிறார்களா என்று பொலிஸாரின் விசேட குழு ஒன்று சோதனை செய்து வருகிறது.

மட்டக்களப்பு நகருக்குள் கடைச் சிப்பந்திகள் போலவும், மற்றும் தொழிலாளர்களைப் போலவும் புலிகள் ஊடுருவி இருக்கலாம் எனும் சந்தேகம் பாதுகாப்புத் தரப்பினரை ஆட்கொண்டுள்ளது.

ஆனால் இவற்றையெல்லாம் புறந்தள்ளி விட்டு, புலிகள் தங்களது தேர்ச்சி பெற்ற பாணியில் நகருக்குள் பிரவேசிப்பதும் அதே வேளை தமது நடவடிக்கைகளை முடித்துவிட்டுத் தருணம் பார்த்து வெளியேறுவதும் நடை பெறத்தான் செய்கிறது என்று கூறுகிறார்கள் பக்கச் சார்பற்ற தரப்பினர்.


படிப்பகம்

www.padippakam.com

# சூழலுக்கு ஏற்படப்போகும் பாதகம்

## மரங்களை அழிக்கும் மின்சார சபையினர்!

பல்வேறு சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதுகாப்புத் தரப்பினரதும் சூழலை மாசுபடுத்துவோரினதும் அழிவுகளிலிருந்து காப்பாற்றப்பட்டிருந்த பல நூற்றுக் கணக்கான மரங்களை இலங்கை மின்சார சபையின் மட்டக்களப்பு நிலையத்தினர் வெட்டி அழித்துள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை வரை சுமார் 20 மைல் தூரம் கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் மருங்குகளில் இருந்த மரங்களே வெட்டிச் சாய்த்து நாசமாக்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு வரையும் 33 ஆயிரம் வோல்ற்ஸ் அதி உயர் மின் வலுக்கொண்ட மின் கம்பிகளைக் கொண்டு செல்வதற்காகவே இவ்வாறான மரங்களை வெட்டிச் சாய்க்கும் வேலையில் இலங்கை மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

அத்துடன் அதி உயர் மின் வலுக்கொண்ட 33 ஆயிரம் வோல்ற்ஸ் மின்சாரம் தாங்கிய மின்கம்பிகளைத் தாங்கும் கம்பங்களைப் பிரதான வீதிக்கு மிக மிக அருகிலேயே நிறுவியுள்ளார்கள்.

இது பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ளதால் பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கும் என்று சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் அஞ்சுகிறார்கள்.

இடப் பற்றாக்குறையுள்ள மலைநாட்டுப் பகுதிகளில்கூட அதி உயர் வலுக்கொண்ட மின் கம்பங்களை பிரதான வீதியை விட்டு சற்றுத் தொலைவிலேயே நிறுவியுள்ளார்கள்.

### தமது வசதிக்காக

சமதரையான அமைப்புக் கொண்ட மட்டக்களப்புப் பகுதியில் மின்சார சபையினரின் சௌகரியம் கருதி வீதிக்கு மிக அருகிலேயே மின் கம்பங்கள் நடப்படுகின்றன.

எதிர்காலத்தில் வீதி அகலமாக்கும் வேலைகள் நடைபெறும்போது, இப்பொழுது நிறுவப்பட்டுள்ள அனைத்து மின் கம்பங்களையும் பிடுங்கி அகற்ற வேண்டியிருக்கும். நன்கு திட்டமிடப்படாத வகையிலும் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் வீதிக்கு அருகிலுள்ள பல நூற்றுக் கணக்கான மரங்களையும் வெட்டியும் பாதுகாப்பற்ற முறையில் வீதியோரங்களில் மின் கம்பங்களை நிறுவியும் வருவது பலராலும் கவலையாகப் பேசப்படுகிறது.

வீதியோரங்களில் பல நூற்றுக் கணக்கான மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டுக் கிடப்பது வேதனை தரும் விடயமாகக் காட்சியளிக்கிறது.

இவ்வளவு பிரயத்தனங்களை மேற்கொண்டு கம்பங்களை நடும் இ.மி.சபையினர் சத்துருக்கொண்டானில் ஒலைக் கொட்டிலால் சிதைந்து போயுள்ள பொலிஸ் காவல் நிலையத்தைத் தவிர்ப்பதற்காக வீதியின் அடுத்த பக்கத்திற்கு மின் கம்பங்களை மாற்றி நிறுவி-அங்கும் மரங்களை அழித்துள்ளனர். ■

# கர்ப்பிணித் தாய்மார் கவலை

## மருத்துவமனையில் அலட்சியம்

(திருமலை நிருபர்)

கர்ப்பிணித் தாய்மார் விடயத்தில் திருக்கோணமலைத் தள வைத்தியசாலை கீழ் நிலை ஊழியர்கள் அலட்சியமாக நடந்து கொள்வதாகப் பல புகார்கள் எழுந்துள்ளன.

தங்கள் தாய்மை நிலையைப் பரிசோதித்துக்கொள்ள மாதாமாதம் நடைபெறும் 'கிளினிக்' பகுதிக்குச் செல்லும் தாய்மார்கள் மீது வாசலில் நிற்கும் ஊழியர்கள் எரிந்து விழுவதாகவும் தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்பதாகவும் தாய்மார்கள் தெரிவிக்கின்றனர்.

தங்கள் செலவில் ஆஸ்பத்திரி கட்டி தாய்மார்களுக்கு மருந்து வழங்குவது போல் இவர்கள் பாவனை செய்து நடந்து கொள்வதாகக் கர்ப்பிணிப் பெண்கள் தெரிவிக்கின்றனர்.

தாங்கள் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் என்பதையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள் என்று கவலையுடன் கூறுகின்றனர்.

அறைக்குள் இருக்கும் மகப்பேற்று நிபுணருக்கோ, தாதியருக்கோ தெரியாமல் தாய்மார்களுடன் சண்டித்தனம் செய்யும் இந்த ஊழியர்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இவ்வாறே கிளை நிலையங்கள் மீதும் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கர்ப்பிணிப் பெண்கள் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் எதிர்பார்க்கிறார்கள். ■

# அக்கரைப்பற்று தொடர்ந்து இருளில்!

## களவாக மின்சாரம் வழங்கும் தரகர்!

பலமாதங்களுக்கு முன்னர் புலிகளால் தகர்க்கப்பட்ட மின்மாற்றிகளுக்குப் பதிலாக புதிய மின்மாற்றிகள் இன்னமும் பொருத்தப்படவில்லை. இதனால் அக்கரைப்பற்றின் ஒரு பகுதி மின்சார வசதியின்றி பல கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி- இருளில் மூழ்கிக் கிடக்கும் மின்மாற்றி தகர்க்கப்பட்ட பகுதிகளுக்கு- கள்ளத்தனமாக மின்சாரம் பெற்றுக் கொடுத்து ஒவ்வொருவரிடமிருந்தும் 500/= ரூபா பெற்றுக் கொள்கிறாராம் அங்குள்ள ஒரு நபர். இவரது நடவடிக்கைகளுக்கு மின்சார சபையினரும் மறைமுக ஆதரவை வழங்குகின்றார்களாம்.

காரணம்- இவர் அறவிடும் தொகையில் ஒரு பகுதியை அங்கும் மறைமுகமாக அனுப்புகிறாராம்.

மின்மாற்றி தகர்க்கப்பட்டதனால் நீண்ட நாட்களாக இருளில் காலங்கழிப்போர் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று விட்டு விடலாம். ஆனால் பாதுகாப்பற்ற முறையில் தொலைபேசி வயர்களுக்கூடாக மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக தொலைபேசி வயர் எது? மின்சார வயர் எது என்ற வித்தியாசம் காணமுடியாத நிலையேற்பட்டுள்ளது.

தொலைபேசி வயர்களில் ஏதும் திருத்தம் செய்ய வேண்டியேற்பட்டாலும் ரெலிகொம் நிறுவன ஊழியர்கள் வயர்களைத் தொட்டுத் திருத்தம் செய்ய அஞ்சுகிறார்கள். எந்த வயரில் தொலைபேசி செல்கிறது-எந்த வயரில் மின்சாரம் செல்கிறது என்ற வித்தியாசம் காணமுடியாதுள்ளதாம். ■

# தமிழ்க் கொலை

தேயிலை சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபை
தேயிலைச் சிறுபற்றுலங்கள் அபிவிருத்தி அதிகாரசசபை
Tea Small Holdings Development Authority

(மன்னார் நிருபர்)

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை தனது கடித உறையில் தமிழை எவ்வாறு எழுதி இருக்கின்றது என்று பாருங்கள். தேயிலைச் சிறு பற்றுலங்கள் அபிவிருத்தி அதிகாரச்சபை

# மண்டேலா தலையீடு

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நெல்சன் மண்டேலா தலையிட்டு தீர்வு காண உதவவேண்டும். இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இந்தியாவில் தமிழகத்தில் ஈழத்தமிழர் ஆதரவு மாநாடுகளை தொடர்ந்து நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பழ.நெடுமாறன், டாக்டர் ராமதாஸ் ஆகியோர் இதில் முன்நிற்கின்றனர். ■


**ஹோமியோபதி**

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

Dr. R. தியாகராஜன் D.H.M.S. AMRSH (LOND)

நாட்பட்ட நீரிழிவு, ஆஸ்துமா, ஆண்மைக்குறைவு போன்ற வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.

ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ் தொ.பே: 585592 - 581986

18.03.1999 - 23.03.1999

இந்தியத் தொ.பே: 0091-431-432946
0091-431-432046

வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.



FOR LONDON RESIDENTS ONLY

**Do you have a BT Line?**

**It is FREE !!**

Weekday Monday to Thursday evening calls from 6.00p.m. to 8.00a.m. are absolutley **FREE** and every individuel 10 minutas of calls are **FREE**

**PLUS**

**Weekend local calls are unbelievably FREE as well.**

(Weekend Local calls from Fri 6.00pm to Mon 8.00am)

All these for the price of **JUST £ 2.00** per month . inc. V.A.T. on your existing BT line.

**To qualifty for this offer**

1> You got to be a BT line subscriber
2 > There will be a £12.00 connection charge
3> Your min. non-local calls should not be less than £5.00 per month.

For more information contact -

**Mr. V.P. Mathan**

(LONDON) 0171-640 2123 0956 958 418




மத்தேசுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
(துரைராஜா)

## மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16.09.1934 | 19.02.1999 |

கீரியன் தோட்டம், சில்லாலை, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், தற்போது கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய கொழும்பு-யாழ்ப்பாணம் தொலைத்தொடர்பு உத்தியோகஸ்தர் ம. அந்தோனிப்பிள்ளை (துரைராஜா) அவர்கள் 19.02.99 அன்று ஸ்கந்தபுரத்தில் இறை பாதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற மத்தேசுப்பிள்ளை றோசமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற அல்பிரட், ராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி யுஸ்தீனா (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயராணி, செல்வராணி,வியாட்னி,டெய்சிராணி, யோகராணி, யோகராஜா, தனராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரான்சிஸ், றெஜி, வரதன்,காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், றோய, றொமியூஸ்ட், தர்ஷிக்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.02.99அன்று ஸ்கந்தபுரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரின் ஆன்ம சாந்திக்காக 09.03.99 அன்று காலை 6.30 மணிக்கு பதுச்செட்டித்தெரு வியாகுல மாதா ஆலயத்தில் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது. 31ம் நாள் வைபவம் ஸ்கந்த புரத்தில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் 21.03.1999 அன்று திருப்பலி நிறைவேற்றப்பட்டு நடைபெறும்.

இத்தகவலை ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் திருப்பலிபூசைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்: அ.ஜெயராணி (மகள்),
யோகராணி வரதன் (மகள்).
51, பெரேரா பிளேஸ்,
கவ்டானா வீதி, தெகிவளை.


**மலையாள மாந்திரிகம்**





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண நடைதீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இந் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி

**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**வவுனியாவில் மார்ச் 13,14,15ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)

(HOTEL VASANTHAM), 40,கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365

**கொழும்பில் மார்ச் 20 முதல் 25 வரை சந்திக்கலாம்**

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனையில் ஏப்ரல் 6,7ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.




**அல்போன்ஸ் அலோசியஸ்**
பிறப்பு : 04.12.1967
இறப்பு : 28.01.1999



**மதுரநாயகம் ராம்குமார்**
பிறப்பு : 13.03.1978
இறப்பு : 28.01.1999



**அந்தோனிப்பிள்ளை கெல்சன்**
பிறப்பு : 01.05.1981
இறப்பு : 28.01.1999

ஓடி மறைந்துவிட்டதோ நாற்பத்தொரு நாட்கள்-ஓடாமல் நிற்பதோ உங்கள் நீங்காத நினைவுகள்!
அன்பையும் பண்பையும் பாசத்தையும்-எங்களுக்கு விதைத்தவர்களே!
அல்லும் பகலும், இன்பத்திலும் துன்பத்திலும் எங்களுக்காக உழைப்பதற்கு உங்கள் உயிர்களை சுலோவாக்கியா ரயில் தண்டவாளத்தில் ஏன் விட்டீர்களோ? எங்களை கண்ணீர் கடலில் ஏன் மூழ்க விட்டீர்களோ? நாற்பத்தொரு நாட்கள் சென்றால் என்ன- நாற்பத்தொரு நூற்றாண்டுகள் சென்றாலும் எங்கள் நினைவில் நீங்கள் அனைவரும் நீங்காத நினைவுகளாய் இருப்பீர்கள்!
இவர்களுடன் உயிர்நீத்த (நவரத்தினம் நவநீதன், சுப்பிரமணியம் சுதாகர், குணபால அன்ரன் பிரேமசிறி) இவர்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

## உயிர்காக்க உதவி கோருகிறார்



மாத்தளை பலாத்வெலையைச் சேர்ந்த கடை ஒன்றின் சிப்பந்தியாகத் தொழில் புரியும் எம்.செல்வரெட்ணத்தின் மகள் சித்திரா மேனகா காயந்தினி (வயது 4) இந்தியாவிற்குச் சென்று இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக நிதி உதவி கோரியுள்ளார்.

இருதய சத்திர சிகிச்சைக்காக சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம்ரூபா தேவைப்படும். எனவே தாராள மனம் படைத்தோர் நிதி உதவி வழங்கக் கோருகிறோம். விரும்புவோர் மாத்தளை தேசிய சேமிப்பு வங்கிக் கிளை 74421 என்ற கணக்கு இலக்கத்திற்கு தம்மால் இயன்றளவு உதவி செய்யும்படி கேட்டுள்ளார்.


**NISACO STEEL FURNITURE**




*Special Discount on This Month Only* · Open on Every Sunday 8.am to 8.pm

நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்

204, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-515169
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
Millagaha Estate, Aturugiriya Road, Hokandara North, Hokandara, Tel: 561367
(Near the telecommunication Exchange Hokandara)




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# செவ்வாய் குண்டுகள்

# இன்னுமொரு தரைப்பாதை

கொழும்பில் 09.03.99 செவ்வாய்க் கிழமை ஒரே இரவில் மூன்று குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றன.

சில காலத்தின் முன்னர் போயா தினங்களில் கொழும்பில் குண்டு வெடிப்புக்கள் நடத்தப்பட்டன. அதனையடுத்து போயா தினமானால் பொலிசாரும், பாதுகாப்பு தரப்பினரும் உஷாராக கண்காணிக்க ஆரம்பித்தனர்.

போயா தினங்களில் படையினர் உஷாராக இருக்க, புலிகள் தமது தாக்குதல் தினத்தை மாற்றினார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் மின்மாற்றிகளை தகர்க்க ஆரம்பித்தனர்.

ஞாயிற்றுக்கிழமைகூட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு ஓய்வு இல்லாமல் போனது. தீவிர ரோந்துக் கண்காணிப்புக்கள் முடுக்கி விடப்பட்டன.

ஞாயிறு விடுமுறை நாளில் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பு விழிப்பாக இருக்க, புலிகள் தமது தினத்தை மாற்றினர்.

இரண்டு செவ்வாய்க்கிழமை தொடர்ச்சியாக கொழும்பில் குண்டுகள் வெடித்தன.

02.03.99 செவ்வாய்க்கிழமை ஓடும் ரயிலில் குண்டு வெடித்தது.

அக் குண்டு ரயில் ஓடும்போது வெடிப்பதற்காக வைக்கப்பட்ட குண்டல்ல.

குறிப்பிட்ட ரயில் புறக் கோட்டையில் பயணிகளை இறக்கிவிட்டு, அன்றிரவு மருதானை தரிப்பிடத்தில் நிறுத்தப்பட வேண்டிய ரயிலாகும்.

அன்று பிறிதொரு ரயில் பழுதடைந்திருந்தமையால் அந்த ரயிலை பிடித்து அவிசாவளைக்கு அனுப்பி உள்ளது ரயில்வே நிர்வாகம். அதனால் ரயில் நாரஹேன்பிட்டியை கடக்கும்போது குண்டு வெடித்தது.

தரிப்பிடத்தில் வெடிப்பதற்காக புலிகள் பொருத்திய குண்டு, இடையே ஏற்பட்ட மாற்றத்தால் ஓடும்போது வெடித்திருக்கிறது.

இதனைக்கூட பொலிசாரால் ஊகிக்க முடியாமல் போனதுதான் வேடிக்கை.

புலிகள் தவறுதலாக ஒரு குண்டை விட்டுச் சென்றிருப்பார்கள் என்றும், அது தான் வெடித்திருக்கிறது என்றும் பொலிசாரை மேற்கோள்காட்டி சண்டே ரைம்ஸ் இக்பால் அத்தாஸ் தகவல் வெளியிட்டிருந்தார்.

பொலிசாரது சந்தேகம் எத்தனை தவறானது என்பது மறுவாரம் செவ்வாய்க் கிழமை தெரிந்துபோனது.

மருதானை ரயில் தரிப்பிடத்தில் இரவு நிறுத்திவைக்கப்பட்ட ரயில் பெட்டியில் குண்டு வெடித்தது.

ரயில் பெட்டியின் மலசலகூடப் பகுதியிலேயே குண்டு பொருத்தப்பட்டிருந்தது. எவ்வகையிலும் பொது மக்களுக்கு சேதம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே மலசல கூடப் பகுதியில் பொருத்தியிருக்க வேண்டும்.

பயணிகளோடு பயணிகளாக அமர்ந்திருந்து, குண்டை வைத்துச் செல்வதைவிட, மலசல கூடப் பகுதிக்கு குண்டை கொண்டு சென்று பொருத்துவது சிரமமான காரியம்.

மலசல கூடத்திற்கு கையில் பொதியோடு சென்றால் காண்பவர்களுக்கு சந்தேகம் ஏற்பட அதிக வாய்ப்பிருக்கும்.

எனவே, சேதத்தை தவிர்க்கும் நோக்கில் அதிக சிரமம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

ஆனால் அதே தினத்தில் புறக் கோட்டை பஸ்நிலையத்தில், தனியார் பஸ் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 12 பேர் காயமடைந்துள்ளனர். உடனடியாக ஒரு பயணி பலியானார்.

பஸ்ஸில் குண்டு வெடித்தபோது நேரம் இரவு 11.05 மணி. அதே நேரம் புறக் கோட்டை காஸ்பேக்ஸ் வீதியில் மின்மாற்றி ஒன்றில் பொருத்தப்பட்ட குண்டும் வெடித்தது. இரண்டும் நேரக் குண்டுகள். ஒரே நேரத்தில் வெடிக்கக்கூடியதாக வைத்துள்ளனர்.

பஸ்ஸில் பயணிகள் காயமடைந்ததால், அக் குண்டு புலிகளால் வைக்கப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்தது.

சமீபகாலத்தில் புலிகளது குண்டு வெடிப்புக்கள் பொது மக்களின் இழப்புக் களை தவிர்க்கும் விதமாக இடம்பெற்று வருகின்றன. அதன் காரணமாகவே மேற்கண்ட சந்தேகம் எழுந்தது.

ஆனால், ஒரே தினத்தில் இரு வேறு விதமான குண்டு வெடிப்பு நடத்தியது மூலம் புலிகள் வெளிப்படுத்த விரும்பிய செய்தி ஒன்று இருக்கிறது.

பொது மக்களின் இழப்பை தவிர்க்கும் விதமாக குண்டு வைக்கவும் இயலும், தாம் நினைத்தால் பொது மக்கள் மத்தியிலும் குண்டு களை வெடிக்க வைக்க முடியும் என்பதையே புலிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த எச்சரிக்கை எப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் கவனிக்கப்படவேண்டியது.

வன்னியில் இரணை இலுப்பைக் குளத்தை படையினர் கைப்பற்றினர். மோதலோ, புலிகளது தாக்குதலோ இங்கு நடக்கவில்லை. அவ்வாறிருந்தும் இரணை இலுப்பைக் குளத்தை சூழ உள்ள பகுதிகளுக்கு ஏவப்பட்ட ஷெல்களால் 12 வயது மாணவி உட்பட பொது மக்கள் பலியாகினர்.

அதன் பின்னரே கொழும்பில் பயணிகள் பஸ் வண்டியில் குண்டு வெடித்துள்ளது.

எனினும் பயணிகள் எண்ணிக்கை மிகவும் குறைந்த நேரமான இரவு 11.05 மணிக்குத்தான் பஸ்ஸில் குண்டுப் பொதி வைக்கப்பட்டது.

அப்போதுகூட சற்று சக்தி பொருந்திய குண்டாக இருந்திருந்தால் பஸ்ஸில் இருந்த அனைவரும் பலியாகியிருப்பர். பஸ்கூட சிதறியிருக்கும். குறிப்பிட்ட குண்டை கொண்டு வர முடிந்தவர்களுக்கு மேலும் சில கிலோ அதிகமான குண்டாக கொண்டுவர முடியாமல் இருக்காது.

அதுதவிர கடும் கண்காணிப்பு நிறைந்த புறக்கோட்டை பகுதியில், ஆள் நடமாட்டம் குறைந்த இரவு 11 மணிக்கு குண்டுப் பொதியுடன் செல்வது கடினமான காரியம். மாட்டுப்பட வாய்ப்புக்கள் அதிகம்.

சன நடமாட்டமுள்ள நேரங்களில் பொதிகளுடன் நடமாடினால் தனியாகத் தெரியாது. சந்தேகம் வராது.

1987ம் ஆண்டில் கொழும்பில் புலிகள் பரவலாக நடத்திய குண்டுத்தாக்குதல்கள் பொதுமக்களை இலக்காக கொண்டிருந்தன. சன நடமாட்டம், வாகன நடமாட்டம் அதிகமுள்ள நேரமாகப் பார்த்தே குண்டு வாகனங்கள் கொண்டு சென்று நிறுத்தப்பட்டன.

கொழும்புக்கு வருவதற்கே முடியாமல் வவுனியா தடைமுகாம்களில் தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பொலிஸ்பதிவு புகைப்படம் கோரல் என்று புதுப்புது விதிமுறைகளை கொழும்பில் தமிழர்கள் எதிர்கொள்கின்றனர்.

இத்தனைக்கும் மத்தியில்தான் தலைநகரின் இதயப்பகுதிக்குள்ளேயே குண்டுகள் வெடிக்கின்றன.

குண்டுகளது சேதம் பெரிதாக இல்லை என்பதால், இவற்றின் விளைவுகளை குறைத்து மதிப்பிட முடியாது.

தலைநகரப் பாதுகாப்பை அரசால் உறுதிப்படுத்த முடியவில்லை என்பதை இந்த நடவடிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

பெரும் நடவடிக்கையைவிட சிறு சிறு நடவடிக்கைகள் பரவலாக நடைபெறும்போது, பாதுகாப்பு பணிக்கு அதிக ஆட்பலம் தேவைப்படுகிறது.

அவ்வாறு ஆட்பலம் கொழும்பில் தேவைப்படும்போது, போர்முனை படைக்குவிப்புக்கு பாதகம் ஏற்படும்.

பொது மக்களின் சேதத்தை குறைக்க புலிகள் தீர்மானித்த பின்னர், தலதாமாளிகை தாக்குதலுக்கும் ஞாயிறு விடுமுறை தினத்தன்றே குண்டு வாகனமும் அனுப்பப்பட்டது.

ஆனால், வன்னியில் படை நடவடிக்கையில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் அதிகமானால், தென்பகுதியில் உள்ள பொதுமக்கள் உயிருக்கு அரசு உத்தரவாதம் கொடுக்க முடியாமல் போகும் என்பதை அரசுக்கு உணர்த்தவும் புலிகள் விரும்புகின்றனர். அதன் பிரதிபலிப்பே புறக் கோட்டை பஸ்ஸில் வெடித்த குண்டு.

கொழும்பில் ஒரே இரவில் மூன்று இடங்களில் குண்டு வெடிப்பது இது முதல் முறையல்ல.

24.01.99 அன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நகரில் மூன்று வெவ்வேறு பகுதிகளில் மின்மாற்றிகளில் குண்டுகள் வெடித்தன.

தலைநகரில் புலிகள் தாராளமாக நடமாடுவதுடன், போதியளவு வெடிமருந்துகளும் அவர்களிடம் உள்ளன என்பதும் உறுதியாகியுள்ளது.

தமிழ் மக்களுக்காக தலைநகரில் பாதுகாப்பு தரப்பு காண்பிக்கும் விட்டுக்கொடுப்பான போக்குத்தான் புலிகள் நடமாட காரணம் என்று தப்பித்தவறிக்கூட கூறமுடியாது.

அலசிப்பார்க்கவோ, தேடுதல் நடத்தவோ இனி இடமில்லை என்னும் அளவுக்கும், கொழும்பில் உள்ள தமிழர்களில் பொலிஸ் நிலையம் செல்லாத தமிழர்களே அரிது என்னும் அளவுக்கும் பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.




கொழும்பு நகரில் பாதுகாப்பு தரப்பு, முழுக் கவனம் செலுத்தும்போது, நாட்டின் ஏனைய பகுதிகளில் புலிகளின் குண்டுகள் வெடிக்கும் அபாயமும் இல்லாமலில்லை.

-★-

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் முன்பாக வன்னிப் போர்முனையில் சில புதிய காட்சிகள் அரங்கேறக்கூடும்.

'யுத்த கோஷ' நடவடிக்கை மூலம் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பூவரசங்குளம், மூன்று முறிப்பு, இரணை இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகள் புதிதாக கைப்பற்றப்பட்டன என்று சரச வானொலி கூறியது.




பூவரசங்குளம், மூன்று முறிப்பு இரண்டும் 'யுத்த கோஷ' நடவடிக்கைக்கு முன்பாகவே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள்.

இரணை இலுப்பைக்குளத்தை கைப்பற்றியதால், புலிகளுக்கு கிழக்குடன் தொடர்பு துண்டிக்கப்பட்டதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியதாக செய்திகள் வெளியாகின.

அவர் கிழக்கு என்று கூறியது வவுனியா யாழ்சாலையின் கிழக்கையா? அல்லது கிழக்கு மாகாணத்தையா? என்பது தெரியவில்லை.

இரணைஇலுப்பைக்குளம் வவுனியா-யாழ் சாலையின் மேற்கே இருக்கிறது. புலிகளது முல்லைத்தீவு தளப் பிரதேசம் சாலையின் கிழக்கே இருக்கிறது. இரணை இலுப்பைக் குளத்தை மட்டுமல்ல, அதன் மேலே சென்று மல்லாவியை பிடித்தால்கூட, சாலையின் மேற்குப் பகுதிக்கும், கிழக்குக்கும் இடையேயான தொடர்பை துண்டிக்க முடியாது.

ஏனெனில் கிளிநொச்சி முழுவதும் புலிகளது கட்டுப்பாட்டிலேயே இருக் கிறது.

கிழக்கு மாகாணத்துடன் தொடர்பை துண்டித்ததாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருப்பாரா, அல்லது குறிப்பிட்ட பத்திரிகையாளர்கள் பூகோளம் தெரியாமல் தவறாக விளங்கிக் கொண்டனரா என்று தெரியவில்லை.

கிழக்கு மாகாணத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தே நிலத் தொடர்பு இருக்கிறது. கடல் தொடர்பும் இருக்கிறது. யாழ் சாலையின் மேற்கே உள்ள பகுதிகளை படையினர் கைப்பற்றுவதற்கும் அதற்கும் ஒரு தொடர்பும் கிடையாது.

வவுனியா-யாழ் சாலையின் மேற்கே உட்புறமாக மூன்று முறிப்பு வரை படையினர் தற்போது நிலை கொண்டுள்ளனர்.

அங்கிருந்து மல்லாவி,• துணுக்காய் பகுதிகளை நோக்கியும், மடுவை நோக்கியும் படைகள் விரைவில் நகரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு நகர்ந்தால் புலிகள் பெரும் எதிர்ப்பை காண்பிப்பார்களா, என்பது சந்தேகம்தான்.

ஏனெனின் படையினர் இப்பகுதிகளை கைப்பற்றி னால் கூட, வவுனியா யாழ் சாலையை திறக்கும் இலக்கை எட்டுவது முடியாது.

பெருமளவு மக்கள் அகதிகளாகும் அவலம் ஏற்படும். இராணுவ ரீதியில் புலிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படாது.

ஆனால், மல்லாவி, துணுக்காய் பகுதிகளை கைப்பற்றினால், மன்னாரில் நிலை கொண்டுள்ள படையினருடன் இணைப்பை ஏற்படுத்த படைத்தரப்பால் முடியும்.

அப்படி நடந்தால் வன்னிப் போர் முனையில் இலக்கு மாறும். காட்சி மாறும்.

வவுனியா-யாழ் சாலையை திறக்கும் முயற் சியை கைவிட்டு, மன்னார் பூநகரி தரைப் பாதையை கைப்பற்ற படையினர் முயலக்கூடும்.

அப்பாதை திறப்புக்கு புலிகள் பாரிய எதிர்ப்பைக் காட்டுவது கடினம். புவியியல் சூழல் காரணமாக கடும் மோதல் தொடர வாய்ப்பு இருக்காது.

ஆனால், பாதை அமைக்கப்பட்ட பின்னர் புலிகள் திடீர் தாக்குதல் நடத்த வாய்ப்புக்கள் உள்ளன.

'ஜயசிக்குறுய்' ஆரம்பமாக முன்னரே இப்பாதை தொடர்பாக இதே பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். தரைப்பாதை திறப்பது மட்டும் நோக்கம் என்றால் அப்போதே படையினர் மன்னார் பூநகரி பாதையை பிடித்திருக்கலாம்.

ஆனால் புலிகளது பிரதான தளத்தை நடுவே ஊடறுத்து, புலிகளது பலத்தை அழிப்பதே பிரதான நோக்கமாக இருந்தது. எனவேதான் வவுனியா,யாழ் சாலையை கைப்பற்ற முன்னேறினர்.

இரண்டு வருடங்களை எட்டியும் அது முடியாத நிலையில், மன்னார் பூநகரிப் பாதையில் தற்போது கண் வைக்கப்படும் போல் தெரிகிறது.

விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதை போன்று, 'எப்படியோ யாழ்ப்பாணத்திற்கு தரைப்பாதை திறந்துவிட்டோம்' என்று கூறத்தக்க ஒரு நடவடிக்கையாக அது அமையலாம்.

கிளிநொச்சி முழுக்க புலிகளின் கையில் இருப்பதால், கிளிநொச்சிக்கு செல்லாமல் பரந்தனுக்கு போக படையினர் நினைக்கக்கூடும்.

மன்னார் பாதையில் பூநகரி சென்று, பூநகரி ஊடாக பரந்தனுக்கு போய்ச் சேரலாம்.

பூநகரி தற்போது புலிகளின் கையில் இருப்பதால் அங்கு ஒரு மோதலை படையினர் எதிர்கொள்ள நேரும்.

எப்படியாவது யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதையை திறப்போம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சமீபத்தில் கூறியிருந்தார்.

எப்படியாவது வவுனியா யாழ் தரைப் பாதையை திறப்போம் என்று கூற வில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

எனவே, மன்னார் பூநகரி பாதையை திறந்துவிட்டு, தரைப்பாதை திறப்பாக பெரும் கொண்டாட்டம் நடத்த அரசு திட்டமிடலாம்.

மாகாணசபை தேர்தலுக்கு முன்பாக அருமையான துருப்புச் சீட்டு ஒன்று அரசுக்கு தேவையாக உள்ளது.

எனவே, வன்னியில் இன்னொரு படை நகர்வை எதிர்பார்த்தேயாக வேண்டும்.

தேர்தலுக்கு முன்பாக மன்னார்- பூநகரி பாதையை வேகமாக கடந்து முடிக்க கள நிலவரம் இடமளிக்காது விட்டாலும், மேற்குறித்த இலக்கில் படை நகர்வு ஒன்றுக்கு சாத்தியம் இருக்கிறது. அதன் முதற்கட்டமாகவே சம்பத்தில் மன்னார் படையினர் உயிலங்குளம் ஊடாக முன்னோக்கி நகர்ந்து புலிகளை ஆழம் பார்த்தனர். புலிகள் தாக்குதல் நடத்திமிருக்கின்றனர்.

உடனடியாக பின்வரும் மூன்று முனைகளில் நகர்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1) மன்னாரிலிருந்து உயிலங்குளம் ஊடாக ஒரு முனை.

2) பூவரசங்குளத்திலிருந்து மடு நோக்கி இன்னொரு முனை.

3) மூன்று முறிப்பிலிருந்து மல்லாவி நோக்கி மூன்றாவது முனை.

இந்த மூன்று முனைகளும் படையினரின் முன்னைய இலக்கான வவுனியா, யாழ் சாலைக்கு மேற்கேதான் உள்ளன. ஆனால் இந்த நகர்வுகளால் மன்னார்- பூநகரி பாதையில் படையினர் நகர்வதற்கான தற்காப்புகளை உருவாக்கலாம். ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**நோர்வே பாராளுமன்றக்** குழுவினர் இங்கு வந்திருந்தனர் அல்லோ? நோர்வே சபாநாயகரும் அங்கம் வகித்திருந்தார். நம் நாட்டு சபாநாயகர் பதவி போல நினைக்கக்கூடாது. நோர்வேயில் மன்னருக்கு அடுத்ததாக மரியாதைக்குரியவர் சபாநாயகர்தான். அவருக்கு அடுத்துத்தான் பிரதமருக்கே மரியாதை. அதனால் இங்கு வந்த குழுவினர் லேசுப்பட்டவர்களல்ல. நீண்டகாலமாக அங்குள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்பும் எண்ணம் கிடையாதாம். ஏனைய நாடுகள் ஊடாக நோர்வேக்குள் சமீப காலத்தில் சென்றவர்களை திருப்பி அனுப்புவது பற்றி ஆராயவே வந்தனராம். இங்கு நிலைமைகளைப் பார்த்த பின்னர் அதற்கும் அவசரப்பட மாட்டினம்போலத்தான் தெரியுது!

**இதுவும் நோர்வே** குழு பற்றிய தகவல்தான். கொழும்பிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு இராணுவ ஹெலியில் அவர்களை அழைத்துப் போனார்களாம். "வாழ்க்கையில் முதன் முறையாக இராணுவ ஹெலிகொப்டரில் ஏறியிருக்கிறோம்!" என்று குழுவினர் கூறினராம். நோர்வேக்காரர்களுக்கு 'ஹெலி' காட்டியதற்காக பெருமைப்படலாம்தானே! நோர்வேயில் குறுகிய தூரம் போவதற்கெல்லாம் ஹெலியைப் பயன்படுத்தி பொருளாதாரத்தைப் பாழடிப்பதில்லையாக்கும்!

**தலைநகரில் பத்திரிகையாளர்** ஒருவர் தாக்கப்பட்டதற்கு பச்சைக் கட்சிதான் காரணமாம். அரச ஆங்கிலப் பத்திரிகையில் நெத்தியடியாக தமாஷ் பண்ணியிருக்கிறது. பச்சை நிறத்தோடு தொடர்புடைய பிரிவினர்தான் தாக்கியிருக்கினம். ஆனால் பச்சைக் கட்சியினர் அல்ல. என்ன குழப்பமாக இருக்கிறதோ? கொஞ்சம் யோசித்தால் உண்மை பளிச் பளிச்!

**தேனகத்தில் ராசிக் குழுவினருக்கு** முன்னாள் முதல்வர் புத்துணர்ச்சியான வழிகாட்டல் கொடுத்திருக்கிறாராம். சீருடை அணிந்து நடமாட வேண்டாம் என்றும் கூறியிருக்கிறாராம். அதனால் இரண்டாம் லெப்டினன்ட் பதவி வழங்கி, அதன் அடையாளமாக தனக்கு வழங்கப்பட்ட பட்டியை ராசிக் திருப்பி அனுப்பியதாகத் தகவல். அடுத்துவரும் தேர்தல்களிலும் ராசிக் தேனகத்தில் குதிக்கப்போகிறாராம். அதற்கும் தயாராகும்படியும் முன்னாள் முதல்வர் பணித்திருப்பதாகக் கூறப்பட்டுகிறது. முன்னாள் முதல்வர் மட்டும் வந்திருக்காது விட்டால், இன்னும் சில காலத்தில் கட்சியே காணாமல் போயிருக்கும் என்றும் உள்ளே அபிப்பிராயம் தலைதூக்கியுள்ளதாம்.

**யாழ் குடாநாட்டில்** நகரில் உள்ள விகாரையைப் புதுப்பிக்கவும், யாத்திரிகர்கள் விடுதி கட்டி, அங்கு சென்று தங்க வசதி செய்யவும் துரித ஏற்பாடுகள் நடக்கின்றன. பாதுகாப்புக் கருதி விகாரை உள்ள தெரு மூடப்பட்டுள்ளது. போய தினங்களில் பூசை களை கட்டுகிறது.

**கூட்டான கட்சிக்குள்** நீலமானவர், சம்பந்தமானவர், சங்கதியார் மூவருக்கும் இடையே முட்டி மோதலாம். சங்கதியாரில் சம்பந்தமானவருக்குப் பிடிப்பில்லையாம். தன் நெருங்கிய வட்டாரங்களிடம் சங்கதியாரைப் பற்றி சாடினாராம். யாழ்ப்பாணத்தில் சங்கதியார் கூத்தடித்து கெடுத்துப் போட்டதாகவும் எதிர்வட்டாரம் பழிபோடுகிறது.

**பி.பி.சி. தமிழ்ச்** செய்தியாளருக்கு மடு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாம். அதே நிறுவனம் சிங்கள செய்தியாளருக்கு அனுமதி தரப்பட்டதாம். இது என்ன நீதி? என்று ஆனந்தமான பெண் செய்தியாளர் போர்க்கொடி உயர்த்தியுள்ளாராம்.

**மரண தண்டனையை** நிறைவேற்ற முடிவு செய்ததால் அலுகோசுகள் பாடு கொண்டாட்டம். என்ன புரியவில்லையோ? மரண தண்டனையை நிறைவேற்றுபவர்கள் 'அலுகோஸ்' என்றுதான் அழைக்கப்படுவர். நம் நாட்டில் அலுகோசுகளுக்கோ பஞ்சம்?

**தலைநகரில் தமிழ்** மக்கள் செறிந்து வாழும் பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதிக்கு நீல அணிசார்பாக பொறுப்பு ஏற்றிருக்கிறார் நீதிக்குப் பொறுப்பான அதிகாரமுடையவர். அங்கு தமிழ் வாக்காளர்களை கவருவதற்காக நடமாடும் சேவைகளும் நடத்தி முடித்துள்ளார். பலாபலன் எதிர்வரும் ஏப்ரலில் தெரியும்!

**இந்த வாரப் பொன்மொழி**

"மணிக்கணக்கில்
உபதேசம் செய்வதைவிட
ஒரு கணப்பொழுதாயினும்
உதவி செய்வது மேல்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# புலனாய்வுக்குழு செய்த கொலை!

ராஜீவ் கொலை தொடர்பான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் தமிழக கடற்கரைப் பகுதிகளிலும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

ராஜீவ் கொலை சூத்திரதாரிகள் தமிழ்நாட்டைவிட்டு கடல் வழியாக தப்பிச் சென்றிருக்கலாமோ? என்ற சந்தேகத்திற்கு விடை தேட புலனாய்வுக் குழு விசாரணைகளை முடுக்கிவிட்டிருந்தது.

தமிழக கடற்கரை பகுதிகளில் கடும் கண்காணிப்பு இருப்பதை அறிந்த புலிகள் படகு எதனையும் அக் கட்டத்தில் அனுப்பவில்லை.

தமிழகத்தில் தேடுதல் தீவிரமானதால் தமிழக புலிப் பொறுப்பாளர் குண்டுச் சாந்தனையும், டிக்ஷனையும் யாழ்ப்பாணத்திற்கு அழைக்க ஏற்பாடுகள் நடந்தன.

குண்டுச் சாந்தனும் டிக்ஷனும் தமிழக கடற்கரை பகுதிகளில் ஒன்றில் படகை எதிர்பார்த்து பல நாட்கள் காத்திருந்தனர்.

படகை அனுப்பக்கூடிய சூழ்நிலை இல்லாமையால், அக்கரையில் காத்திருந்துவிட்டு அவர்கள் திரும்பிச் சென்றனர்.



தமிழக கரையோரங்களில் விசாரணை நடத்திய புலனாய்வுக் குழு, அங்கு புலிகளுக்கு உதவக் கூடியவர்கள், ஆதரவானவர்கள் யார் என்று பட்டியலிட்டது.

அவ்வாறு பட்டியலிட்ட போது முக்கியமான தகவல்கள் சில கிடைத்தன.

தமிழ்நாடு கோடியக்கரை கடற்பகுதியில் புலிகளுக்கு உதவியாக இருந்தவர் சண்முகம். பெரும் பணக்காரரான சண்முகம் புலிகளின் நீண்டகால அனுதாபி. அவரது மாமா முறையான சீதாராமனும் புலிகளது ஆதரவாளர்.

சண்முகம்மீது ஊரில் பகையுள்ள சிலர்தான் புலனாய்வுக் குழுவினருக்கு தகவல் தந்தனர்.

"சண்முகத்தின் உதவியோடுதான் ராஜீவ் கொலையாளிகள் தமிழகம் வந்தனர். அவரது வீட்டில் தங்கியிருந்துவிட்டே சென்னை சென்றனர். சண்முகத்திற்கு சகல உண்மைகளும் தெரியும்" என்று தகவல் கொடுத்தனர்.

புலனாய்வுக் குழு மேலும் பலரை விசாரித்தது. சண்முகம் புலிகளது அனுதாபி. புலிகளுக்காக எதுவும் செய்யக் கூடியவர் என்று தெரிய வந்தது.

சண்முகம் வீட்டில் சிவராசன் பலமுறை தங்கிச் சென்ற விபரமும் கிடைத்தது.

அதனால் 18.07.91 அன்று சண்முகத்தை சிறப்பு புலனாய்வுக் குழுவினர் கைது செய்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லாது வேதாரண்யம் பொலிஸ் அருகே இருந்த பயணியர் விடுதியில் வைத்திருந்து விசாரித்தனர்.

## சித்திரவதை

பொலிஸ் நிலையத்தில் சண்முகத்திற்கு வேண்டப்பட்டவர்கள் இருப்பார்கள் என்பதால்தான், தனியாக வைத்து விசாரித்தனர்.

விசாரணையில் முன்னேற்றம் காணப்பட்டால் சென்னைக்கு கொண்டு சென்று விசாரிக்கவும் திட்டமிட்டனர்.

பயணியர் விடுதியில் வைத்தே சண்முகத்தை தாறுமாறாக தாக்கினார்கள். ராஜீவ் கொலையாளிகள் பற்றி துருவித் துருவி விசாரித்தனர்.

தனது உள்ளூர் எதிரிகள்தான் தன்னை மாட்டிவிட்டிருக்கிறார்கள் என்று ஊகித்த சண்முகம், தன் எதிரிகளை மாட்டிவிட ஒரு திட்டம் போட்டார்.

தனது எதிரிகளது பெயர்களைக் கூறி, அவர்களுக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக கூறினர்.

அதனையடுத்து வேறு சிலரும் விசாரிக்கப்பட்டனர். இந்த விசாரணைக்காக ஒரு டி.ஐ.ஜி தலைமையில் இரண்டு எஸ்.பி.கள் உட்பட 20 பொலிஸ்காரர்கள் சிறப்புப் புலனாய்வுக் குழுவில் இருந்து அனுப்பப்பட்டிருந்தனர்.

உடனடியாக சென்னைக்கு கொண்டு சென்று சண்முகத்தை விசாரிப்பதே நல்லது என்று பொலிஸ் அதிகாரிகள் சிலர் அபிப்பிராயப்பட்டனர்.

20ம் திகதிவரை அங்கு வைத்திருந்து விசாரித்துவிட்டு கொண்டு செல்லலாம் என்று டி.ஐ.ஜி. கூறிவிட்டார்.

சண்முகத்தின் தகவல்களை வைத்து கோடியக்கரை, வேதாரண்யம் பகுதிகளில் தேடுதல் நடத்த வேண்டி இருந்தால் மீண்டும் ஒரு தடவை திரும்ப வரவேண்டும். அதற்கிடையே குறிப்பிட்ட இடங்களில் உள்ளவர்கள் விஷயமறிந்து தப்பியும் சென்றுவிடலாம். அதனால்தான் அங்குவைத்தே இரண்டு மூன்று நாட்கள் விசாரிப்பதற்கு முடிவு செய்தார் டி.ஐ.ஜி.

சண்முகம் அடி தாங்காது கூறிய சில தகவல்கள் மேலும் அவரை அடித்து உதைத்தால் பொன்னான தகவல்கள் கிடைக்கலாம் என்று நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி மருந்துகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பவையும் சண்முகத்தின் தகவலால் தோண்டி எடுக்கப்பட்டன.

## பார்வையிட அனுமதி

பின்னர் என்னதான் அடித்து உதைத்த போதும் மேலதிக விபரங்கள் எதுவும் சண்முகத்திற்கு தெரியவில்லை. சொன்னவற்றையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்.

சண்முகம் தனக்கு தெரிந்த பல தகவல்களை மறைப்பதாக சந்தேகித்தனர் விசாரணையாளர்கள்.

அதுவரை அடி, உதை மூலம் உண்மைகளை கக்கவைக்க முயன்றவர்கள், பின்னர் அன்பான முறையை கையாள உத்தேசித்தனர்.

சண்முகத்தின் மாமா சீதாராமன் அவரை பார்வையிட அனுமதித்ததுடன், வீட்டில் இருந்து சாப்பாடு எடுத்து வந்து கொடுக்கவும் அனுமதித்தனர். 19.07.91 இரவு இது நடந்தது.

சண்முகத்தை தாஜா பண்ணி கைக்குள் போட்டுக்கொண்டு தகவல் கறக்கவே அந்தக் கரிசனை.

சாப்பாடு எடுத்து வந்த சீதாராமனும், சாரதி தாஸ் என்பவரும் சண்முகத்தை அன்றிரவு சந்தித்தனர். அப்போது நேரம் இரவு பத்தரை மணி.

சொந்த விரோதம் காரணமாக புலிகளது ஆதரவாளர்கள் என்று சண்முகம் சிலரை மாட்ட வைத்ததை சீதாராமன் கண்டித்திருக்கிறார். அதன் பின்னர் சீதாராமன் அதிகாரிகளுடன் பேசினார்.

"சண்முகம் பொய் கூறுவதாகவும், தனக்கு சொந்த விரோதம் உள்ளவர்களை மாட்டிவிடுவதாகவும், அதனை நம்பவேண்டாம்" என்றும் சீதாராமன் கூறினார்.

அதிகாரிகளுக்கும், பொலிசாருக்கும் பயங்கரமான கோபம் வந்து விட்டது.

சண்முகத்திடம் சென்றனர். சுற்றி நின்று தாக்கத் தொடங்கினர். அதிகாரி ஒருவர் சண்முகத்தை நெருங்கி, அவனது கழுத்தை நெரித்தபடி உண்மைகளை கூறுமாறு மிரட்டிக் கொண்டிருந்தார்.

அடிகளை தாங்க முடியாமல் திணறிய சண்முகத்திற்கு, அதிகாரி கழுத்தை நெரித்ததும் முச்சுத்திணறியது. நாக்கை நீட்டியபடி துடிதுடித்தார்.

சண்முகம் நடிப்பதாக நினைத்த அதிகாரி கழுத்தை நெரிப்பதை விடவில்லை. உண்மையைக் கூறுமாறு மிரட்டிக் கொண்டிருந்தார்.

சண்முகம் முச்சுத்திணறித் திணறிச் செத்துப்போக, அவரது தலை துவண்டு தொங்கியது.

எப்படியாவது விரைவாக தகவல் பெறும் வெறியில் இருந்தவர்களுக்கு அப்போதுதான் சண்முகம் நடிக்கவில்லை, துடித்திருக்கிறார் என்பது புரிந்தது.

அப்படியே உறைந்து போய் நின்றனர். எல்லோர் முகங்களிலும் பீதி.

## தற்கொலை

விசாரணையில் கொலை நடந்ததாகத் தெரிந்தால், பெரும் பிரச்சனைகள் ஏற்படலாம்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணைகள் நிறுத்தப்படவும் வாய்ப்பு இருக்கிறது.

எனவே, கொலையை தற்கொலையாக்க சிறப்புப் புலனாய்வுக் குழு முடிவு செய்தது.

சென்னையில் மல்லிகையில் இருந்த சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயனுக்கும் இதில் உடன்பாடு என்றே தெரிகிறது.

வேதாரண்யம் பொலிசாருக்கும் தெரியாமல்தான் தற்கொலை நாடகத்தை செய்து முடிக்க வேண்டியிருந்தது.

பயணியர் விடுதிக்கு பின்புறம் உள்ள மரம் ஒன்றில் சண்முகத்தை தொங்கவிட முடிவு செய்தனர்.

சண்முகத்தின் ஆடைகள் களையப்பட்டு, உள்ளாடையுடன் மட்டும், கழுத்தில் கயிறுகட்டி தொங்கவிட்டனர்.

அவசர அவசரமாக அனைத்தையும் செய்ய வேண்டி இருந்ததால் சந்தேகத்துக்குரிய பல தடயங்களை புலனாய்வுக்குழு விட்டு வைத்தது.

தூக்குப் போட்டதாக இருந்தால் நாக்கு வெளியே தொங்கும். தொங்கவில்லை. கால்கள் இரண்டும் தரைக்கு மிக அருகில் இருந்தன. சுருக்கிட்டு குதித்திருந்தால் கால் எழும்பு முறிந்திருக்கும். இரத்த குழாய் வெடித்திருக்கும். அப்படி நிகழவில்லை.

உள்ளாடையுடன் தொங்கிய சண்முகத்தின் கைக்கடிகாரத்தையும் அவசரத்தில் அகற்ற மறந்திருந்தனர்.

இவ்வாறான காரணங்களால் சண்முகம் தற்கொலை செய்து கொண்டதாக சிறப்புப் புலனாய்வுக் குழு கூறியதை இந்தியப் பத்திரிகைகள்கூட நம்ப மறுத்தன.

சண்முகத்தின் உடலை சென்னைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை நடத்தவில்லை. நாகப்பட்டினத்தில் அவசரமாக நடத்தி முடித்தனர்.

காவலில் இருந்தபோது மரணம் அடைந்தாலோ, அல்லது தப்பிச் சென்று மரணம் அடைந்தாலோ அந்த நபரது உடல் உறவினர்களிடம் உடனடியாக ஒப்படைக்கப்படுவதில்லை.

சண்முகத்தின் உடலை உடனடியாக உறவினர்களிடம் ஒப்படைத்து, தகனம் செய்யுமாறு கூறினார்கள்.

## கூறிய கதை

சண்முகம் மரணம் தொடர்பாக சிறப்பு புலனாய்வுக்குழு கூறிய கதை நம்பும்படி இருக்கவில்லை.

காவலாளி ஒருவருடன் பின்புறம் சென்ற சண்முகம், திடீரென்று பின்புற மதில்மேல் பாய்ந்து தப்பிச் சென்றார். பின்னர் மறுநாள்காலை மரத்தில் தொங்கினார் என்று கூறியது.

ஆனால் அப்படி தப்பிச் சென்றிருந்தால் தேடுதல் நடத்தப்படவில்லையா? தேடியிருந்தால் அருகிலுள்ள மரத்தில் எப்படி தாக்கில் தொங்க முடிந்தது? போன்ற கேள்விகளுக்கு புலனாய்வுக் குழு பதில் கூறமுடியவில்லை.

அதுமட்டுமல்ல, சண்முகம் தப்பிச் சென்றதாக வைத்து கொண்டால்கூட, அப்போது பணியில் இருந்த பொலிசார் தற்காலிமாக பதவி நீக்கப்பட்டிருப்பார்.

சண்முகம் தப்பியதற்காகவோ, சண்முகம் கொலையாகி இருக்கலாம் என்று எழுந்த சந்தேகம் தொடர்பாகவோ எவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ராஜீவ் கொலையை ஆராய்வதற்காக சிறப்பு புலனாய்வுக் குழு செய்த கொலை அது.

ராஜீவ் கொலை விசாரணைமீது மக்களுக்கு அவநம்பிக்கை தோன்றினால் தம்மீதும் மக்கள் கோபப்படுவார்களே என்பதால், காங்கிரஸ் தலைவர்களும் கோடியக்கரை சண்முகம் கொலையை முடிமறைக்க ஒத்துழைத்தனர்.



தாயார் இந்திராவுடன் சஞ்சய் காந்தி, ராஜீவ் காந்தி

## தேர்தல்

ராஜீவ் காந்தி பலியாக முன்னரே முதற்கட்ட வாக்குப்பதிவு முடிந்திருந்தது.

ராஜீவ் காந்தி பலியான பின்னர் நடைபெற்ற வாக்குப் பதிவில் அனுதாப அலை வீசியடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்களில்தான் காங்கிரஸ் கட்சியும், அதனோடு கூட்டுச் சேர்ந்த கட்சிகளும் அமோக வெற்றி பெற்றன. இந்தியாவின் வட மாநிலங்களில் காங்கிரசுக்கு முன்பைவிட குறைந்தளவு வாக்குகளே கிடைத்திருந்தன.

1989ல் நடைபெற்ற தேர்தலில் 11 கோடியே 9 இலட்சத்து 95 ஆயிரம் வாக்குகள் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்திருந்தன.

1991ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 9 கோடியே 74 இலட்சத்து 44 ஆயிரம் வாக்குகளே இந்தியா முழுவதும் கிடைத்திருந்தன.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. படுதோல்வியடைந்தது. அதே போல பாராளுமன்ற தேர்தலில் ஒரு ஆசனம் கூட தி.மு.க.வுக்கு கிடைக்கவில்லை.

சட்டசபை தேர்தலில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி மட்டுமே அவர் போட்டியிட்ட துறைமுகம் தொகுதியில் வெற்றி பெற்றார்.

"தி.மு.க. தோல்வி என் தோல்வி. எனது பதவியை துறக்கிறேன்!" என்று கருணாநிதி அறிவித்தார்.

தமிழகத்தில் தி.மு.க. படுதோல்விக்கு ராஜீவ் கொலை முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது.

காங்கிரசும், அ.தி.மு.கவும் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டால் ராஜீவ்கொலை நிகழாது விட்டாலும், தி.மு.க தோல்வியடைந்திருக்கும். ஆனால் படுதோல்வி கண்டிருக்காது.

தமிழக முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றார். புலிகளை தமிழ்நாட்டில் ஒடுக்கியே தீருவோம் என்று சூளுரைத்தார்.

இதன் மத்தியில் சிறப்பு புலனாய்வுக் குழு சிவராசனை தேடிக்கொண்டிருந்தது.

(தொடர்ந்து வரும்)

## "ராஜீவை அடிக்கடி எச்சரித்து வந்தோம்"

ராஜீவ் கொலையாகும்போது இந்திய உள்துறை இணையமைச்சராக இருந்தவர். சுபோத் காந்த் ஹாய், அவர் அப்போது சுடச்சுட அளித்த பேட்டியிலிருந்து:

**கே:** படுகொலை செய்தி உங்களுக்குக் கிடைத்த பிறகு அதிகமாக குழப்பம் இருந்ததா?

**ப:** அதிர்ச்சி இருந்தது. ஆனால், முதலிலிருந்தே ஒரு விஷயம் மிகவும் தெளிவாக இருந்தது. என்ன நடக்கப்போகிறது, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தது. போலெஷ்வரில் இருந்த பிரதமருக்கு செய்தி தெரிவிக்கப்பட்டதும் அமைச்சரவை செயலாளரும், புலனாய்வுத் துறை (ஐபி) இயக்குனரும் உடனடியாக ராஷ்டிரபதி பவனுக்குச் சென்று ஜனாதிபதியிடம் நிலைமையை விளக்கினார்கள். தூரதர்ஷனில் 11.16 மணிக்கு கொலை செய்தி அறிவிக்கப்பட்டபோது, வன்முறை தலைதூக்காதபடி பார்த்துக் கொள்ளுமாறு அனைத்து மாநில அரசுகளுக்கும் செய்தி போயிருந்தது. சேஷன் அதிகாலை 2 மணிக்கு ராஷ்டிரபதி பவனுக்கு வரவழைக்கப்பட்டார். பாதுகாப்புத் துறை செயலரும் உடன் இருந்தார்.

**கே:** ராஜீவுக்கு அபாயம் என்று உங்களுக்குத் தெரியுமா?

**ப:** தில்லியில் மே 18 அன்று சஜ்ஜன் குமார் மீது தாக்குதல் நடைபெற்றதைத் தொடர்ந்து, உயர் மட்டக்கூட்டம் ஒன்றை நடத்தி ராஜீவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை அடியோடு மறுபரிசீலனை செய்தோம். பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை ராஜீவே புறக்கணித்தது தெளிவாகத் தெரிந்தது. தானே பலமுறை இது குறித்து எச்சரித்து அவருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். ஐபி. இன்டலிஜன்ஸ் பீரோ) இயக்குனர் அவரைச் சந்தித்து இது பற்றிப் பேசினார். ஆனால், ராஜீவ் எதையும் பொருட்படுத்தவில்லை.

**கே:** பாதுகாப்பு ஏற்பாடு பயனற்றுப் போனதா?



**ப:** இது குறித்து ஆழமாக ஆராய வேண்டும். அதனால்தான் விசாரணைக் கமிஷன் நியமித்திருக்கிறோம். தற்கொலைப் படைதான் காரணம் என்று வைத்துக்கொண்டால், அந்தப் பெண்ணுக்குப் பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. அவளிடம் செக்யூரிட்டி அனுமதி பேட்ஜும் இல்லை. ஆனால், தான் ஒரு பெண் என்பதை அனுகூலமாகக் கொண்டு அவள் தடுப்புகளை மீறி நுழைந்திருக்கக்கூடும்.

**கே:** இதற்கு விடுதலைப்புலிகள் காரணம் என்று நினைக்கிறீர்களா?

**ப:** விடுதலைப்புலிகள் நேரடியாக இதைச் செய்தார்களோ இல்லையோ, தமிழகத்தில் அவர்கள் இறக்குமதி செய்த வன்முறையின் விளைவுதான் இது. விடுதலைப் புலிகளைத் தமிழகத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று மக்கள் கோருவதற்கு இதுவே போதுமான காரணமாக இருக்க முடியும். கடும் நடவடிக்கை எடுத்து அந்த வட்டாரத்திலிருந்து புலிகளை வெளியேற்றியே தீர வேண்டிய தருணம் வந்துவிட்டது.

**கே:** விடுதலைப் புலிகள் மாநிலத்தை மிரட்டி வைத்து வந்தது உண்மையா?

**ப:** அவர்கள்தான் அரசாங்கத்தையே நடத்தி வந்தார்கள்.

**கே:** ஆனால், அடுத்தடுத்துப் பல அரசுகளும் விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கவில்லையா?

**ப:** பலவீனமான அரசியல் தலைமை, வன்முறை இயக்கங்களை ஊட்டி வளர்க்கிறது. பலன்? பல இராணுவ அதிகாரிகளும் ஜவான்களும் இறந்தார்கள், நற்பெயரை இழந்தோம். இப்போது ஒரு தலைவரை இழந்திருக்கிறோம்.

**கே:** தி.மு.க.வுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருந்ததா?

**ப:** தாராளமாக. முப்தி முகம்மது உள்துறை அமைச்சராக இருந்தபோது, தமிழகத்தில் நடைபெறும் விஷயங்களை நேரில் பார்க்க வேண்டும் என்று இருமுறை விரும்பினார். இரண்டு முறையும், ராஜினாமா செய்து விடுவேன் என்று மிரட்டி கருணாநிதி அவரைத் தடுத்து விட்டார். ஒருமுறை விமானத்தில் ஏறப்போகும் சமயத்தில் வி.பி.சிங் தடுத்தார். கடற்கரையோரங்களில், மத்திய அரசின் செலவில் இயங்கும் அகதிகள் முகாமைப் பார்வையிட விரும்பினோம். ஆனால், எங்களை அனுமதிக்கவில்லை. சமீபத்தில்தான் நாங்கள் செயலில் இறங்கினோம்.

**கே:** சட்டம்– ஒழுங்கு நிலை குறித்து உங்கள் ஒட்டுமொத்தமான கண்ணோட்டம் என்ன?

**ப:** கட்டுப்பாட்டில் உள்ளது. அசாமில் இப்போது கொலைகள் நடப்பதில்லை. பஞ்சாபில் பல குழுக்கள் அரசியல் நீரோட்டத்தில் இணைந்திருக்கின்றன.





படிப்பகம்

www.padippakam.com

# இஸ்ரேலிய பாணியில் இலங்கை ஆட்சியாளர்கள்

அலசுவது - இராஜதந்திரி

மிகப் பாரிய இன ஒதுக்கல் திட்டமொன்றுக்கு யாழ் குடாநாட்டில் அடித்தளமிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசின் கையிலிருந்த ஆட்சி அதிகாரம் சிங்கள பௌத்த ஆளும் வர்க்கத்திடம் கைமாற்றப்பட்டு 51 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

இந்த 51 ஆண்டுகளில் இலங்கைத் தீவு முழுவதையும் பௌத்த சிங்கள நாடாக்கும் திட்டங்கள் பல முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

அவற்றில் ஒன்றுதான் வடக்கு-கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை நடத்தும் திட்டமாகும்.

இதுவே இலங்கைத் தீவு முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக்கும் கொள்கையின் முதுகெலும்பாகவும் விளங்குகிறது.

எந்தவொரு இனத்திற்கும் அதன் தனித்துவத்தையும், பலத்தையும் நிலை நிறுத்தி வைத்திருப்பதற்கு நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பவையே பிரதானமானதாகும்.

இந்த நான்கில் நிலமே மிகவும் பிரதானமானதாகும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். அதுபோல தொடர்ச்சியான நிலப்பகுதி இருந்தால்தான் எந்தவொரு இனமும் பலத்தோடும் தனித்துவத்தோடும் வாழ முடியும்.

இதனை தமிழ் பேசும் மக்களைவிட சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளே நன்குணர்ந்துள்ளன.

அதன் காரணமாகவே தம் கையில் ஆட்சி அதிகாரம் கிடைத்தவுடனேயே, தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிரதேசங்களை அபகரிக்கும் திட்டத்தையும் தீட்டியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து ஆரம்பமான நிலப்பறிப்பு திட்டம் படிப்படியாக விரிவடைந்து வடக்கு நோக்கியும் நீண்டது.

தம்மை விற்பன்னர்கள், படித்த மேதாவிகள் என்று கூறிய தமிழ் பேசும் தலைமைகள் ஆங்கிலத்தில் புலமை காட்டினவே தவிர, சிங்கள பௌத்த ஆட்சியாளரின் சாதுரியமான திட்டங்களை அடையாளம் கண்டு, ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தத் தவறியிருந்தன.

தமிழ் பேசும் தலைமைகளுடன் கைகுலுக்கிக்கொண்டும், அமைச்சர் பதவிகள் போன்றவற்றை அவ்வப்போது வழங்கிக்கொண்டும், அவர்களது தலைக்கு மேலாக தங்கள் நில அபகரிப்பு திட்டத்தை சிங்கள ஆட்சியாளர்கள் முடுக்கிவிட்டிருந்தனர்.

அதன்பின்னரே தமிழ் பேசும் தலைமைகள் சிங்களக் குடியேற்றம் நடக்கின்றன என்று பாராளுமன்றத்திலும், மேடைகளிலும் குரல் எழுப்பத் தொடங்கின.

அவ்வாறு குரல் எழுப்புவதை அரசியல் இலாபம் கருதி செய்தனரே தவிர, குடியேற்றத் திட்டங்களை தடுப்பதற்கான போராட்டங்களையோ, உருப்படியான வேலைத் திட்டங்களையோ தமிழ் பேசும் தலைமைகள் முன்னெடுக்க தவறியிருந்தன.

இத் தலைமைகள் பற்றி நன்கு புரிந்துவைத்திருந்த சிங்களத் தலைமைகள் இவர்கள் குரல் எழுப்பியதையிட்டு கிஞ்சிற்றும் கவனத்தில் கொள்ளாது குடியேற்ற திட்டங்களை திறம்பட நடத்தி வந்தனர்.

வடக்கு-கிழக்கின் நிலத்தொடர்பை துண்டிக்கும் விதமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு பகுதியில் சிங்கள குடியேற்றம் நடத்தப்பட்டமை மிகக் கச்சிதமான திட்டமாக விளங்கியிருந்தது. மணலாறு வெலி ஓயாவாக பெயர் மாற்றப்பட்டதோடு, அங்கு குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக இராணுவ முகாம்களும் நிறுவப்பட்டன.

அதேசமயத்தில் யாழ் குடாநாட்டில் தமிழ் மக்களின் செறிவு அதிகமாக இருந்ததையும், அங்கு பல்வேறு அரசியல் போராட்டங்கள் தோற்றம் பெற்றதையும் கண்ட ஆட்சியாளர்கள் மற்றுமொரு சூழ்ச்சிகரமான திட்டத்தை தீட்டினார்கள்.

யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்வது என்று இனிப்பாகப் பேசியபடி, தங்கள் திட்டத்தை அங்கும் நிறைவேற்ற முயன்றனர்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மையமாக வைத்து சதித்திட்டம் உருவானது.

அத் தொழிற்சாலையில் பணிபுரிவதற்காக என்று சிங்கள இளைஞர்கள் பெருமளவில் சேர்க்கப்பட்டனர். அவர்களது குடும்பங்களை காங்கேசன்துறைப்பகுதியில் படிப்படியாக குடியேற்றி முடிப்பதே ஜே. ஆர். ஜெயவர்த்தனேயின் இறுதி இலக்காக அமைந்திருந்தது.

யாழ் குடாநாட்டிலும் தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையினராக்குவதற்காக வகுக்கப்பட்ட இலக்கே அதுவாகும்.

1977 பொதுத் தேர்தலில் யாழ் குடாநாடு எங்கும் கூட்டணியினரே அமோக வெற்றி பெற்றிருந்தனர். அவர்களாலும் அந்த திட்டத்தை தடுக்கவோ, தள்ளிப்போடவோ செய்ய இயலவில்லை.

ஆயினும், அத் திட்டம் பூரணமாக நிறைவேற முன்பாக ஆயுதப்போராட்டம் முனைப்பு பெற்றிருந்தது. எனவே, ஜே. ஆரின் திட்டத்தை யாழ் குடாநாட்டில் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாமல் போயிருந்தது.

அப்போது ஜே. ஆர். அரசு செய்ய முடியாது கைவிட்ட திட்டத்தைத்தான், இப்போது மறுபடி சந்திரிக்கா அரசாங்கம் கையிலெடுத்துள்ளது.

கிட்டத்தட்ட 15 வருடங்களின் பின்னர் அத் திட்டம் தூசு தட்டப்பட்டு வெளியே கொண்டுவரப்பட்டுள்ளது.

இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வைக் காண்பதில் இரு பிரதான சிங்களக் கட்சிகளிடமும் பொதுவான கொள்கை எதுவும் இருந்ததில்லை.

ஆனால், இன ஒதுக்கல் விடயத்தில் இரு பிரதான கட்சிகளிடம் பொதுக் கொள்கை இருந்து வருகிறது.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமக்கு முன்பிருந்த ஆட்சியாளர்களது இன ஒதுக்கல் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து வந்துள்ளன.

அந்த வகையில் தற்போது ஜே. ஆர். அரசின் திட்டத்தை சந்திரிக்கா அரசும் தன் கையில் எடுத்திருக்கிறது.


ஆனால், முன்னைய திட்டத்திற்கும், தற்போதைய திட்டத்திற்கும் ஒரே ஒரு வித்தியாசம் காணப்படுகிறது.

முன்பு காங்கேசன் சீமெந்து ஆலையை மையமாக வைத்து குடியேற்றம் நடத்த திட்டமிடப்பட்டது.

தற்போது இராணுவ பிரதான தளமான பலாலியை மையமாக வைத்து குடியேற்றம் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இந்தியாவில் சேது சமுத்திரத் திட்டம் பற்றிய பேச்சு எழுந்துள்ள சந்தர்ப்பத்தில், யாழ் குடாநாட்டில் குடியேற்றத் திட்டம் தீட்டப்படுவதையும் உற்று நோக்க வேண்டும்.

சேது சமுத்திர திட்டம் பூர்த்தியானால்,




## குடியெழுப்பலும், குடியேற்றமும்

காங்கேசன் துறைமுகத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கும். கொழும்பு, காலி துறைமுகங்கள் முக்கியத்துவத்தை இழக்கும்.

எனவே, காங்கேசன் துறைமுகப் பகுதி உள்ளடங்கிய பிரதேசத்தை சிங்கள மயப்படுத்தி வைத்திருந்தால், எதிர்காலத்தில் நன்மை பயக்கும் என்பதும் நோக்கமாக இருக்கலாம்.

ஏற்கனவே திருமலையை குறிவைத்து சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டமைக்கு அங்கிருந்த இயற்கைத் துறைமுகமும் முக்கிய காரணியாக அமைந்திருந்தது.

வடக்கு-கிழக்கில் கேந்திர முக்கியத்துவமிக்க பகுதிகளை தமிழ் பேசும் மக்களிடம் இருந்து பிரித்துவிடுவதும் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற இலக்குகளில் ஒன்றாகும்.

யாழ் குடாநாட்டில் உள்ள படையினரின் குடும்பங்களை கொண்டு சென்று குடியேற்றுவதுடன், அவர்களுக்கான கடைத் தொகுதிகள், பாடசாலைகள், விகாரைகள் போன்றவற்றையும் அமைப்பதற்கே தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக பலாலி இராணுவ தளத்தை சுற்றியுள்ள 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதியில் தமிழ் மக்கள் மீளக் குடியேறுவதை படையினர் தடுத்து வருகின்றனர்.

காங்கேசன்துறை, தெல்லிப்பளை, வசாவிளான், பலாலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாரிய பிரதேசமே குடியேற்ற திட்டத்திற்கு பறிபோகவுள்ளது.

படைமுகாம்களது பாதுகாப்பு என்ற போர்வையில் அப்பகுதிகளில் தமிழ் மக்கள் தம் சொந்த வீடுகளுக்கு திரும்புவது தடைசெய்யப்பட்டது. இதனால் யாழ் குடாநாட்டில் நலன்புரி நிலையங்களிலும், வேறு பகுதிகளில் உள்ள உறவினர்கள் வீடுகளிலுமே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கியிருக்கின்றன.

அக் குடும்பங்களை மீளக்குடியேற அனுமதியாது, அவர்களது சொந்தப் பகுதிகளை நிரந்தரமாக சுவீகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசத்தை இராணுவ ரீதியான பலத்தால் ஆக்கிரமிக்கும் அப்பட்டமான நடவடிக்கையாகவே இது விளங்குகின்றது. பாலஸ்தீன மக்களை நாடற்றவர்களாக்க இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் கையாண்ட அணுகுமுறைக்கு ஒப்பான நடவடிக்கையே இதுவாகும்.

**வலிகாமம் வடக்கில் 30 கிராம சேவையாளர் பிரிவுகள் அடங்கிய 38 சதுரகிலோமீட்டர் பகுதியும், வலிகாமம் தென் மேற்கில் நான்கு கிராமசேவையாளர் பிரிவை உள்ளடக்கிய 6.8 சதுரகிலோமீட்டர் பகுதியும், வலிகாமம் கிழக்கில் ஒரு கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கிய 3.2 சதுர கிலோமீட்டர் பகுதியுமாக மொத்தம் 12 ஆயிரம் ஏக்கர் பிரதேசம் குடியேற்ற வெள்ளத்தால் அள்ளுண்டு போகும் நிலை தோன்றியுள்ளது.**

கடந்த கால அரசுகள் முதலில் குடியேற்றம் நடத்திவிட்டுத்தான், பின்னர் பாதுகாப்புக்காக அப்பகுதிகளுக்கு இராணுவத்தை அனுப்பின.

அதுமட்டுமன்றி வெறுசாக கிடந்த காணிகளில்தான் குடியேற்றங்கள் நடந்தன.

ஆனால், இன்றைய அரசுதான் இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களை சொந்த பகுதிகளில் இருந்து வெளியேற்றிவிட்டு, அப் பகுதிகளை சுவீகரிக்கும் முறையை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது.

வன்னியில் தரைப்பாதை திறப்பு என்றெல்லாம் கூறிய அரசு, இப்போது அப்பாதை திறப்புடன் தொடர்பே இல்லாத வவுனியா மாவட்ட தமிழ்க் கிராமங்களை நோக்கி படைகளை நகர்த்தியுள்ளது. இதனால் பல்லாயிரம் தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாகியுள்ளனர்.

எவ்வித எதிர்ப்புமில்லாமல் தாம் கைப்பற்றிய ஒட்டிசுட்டான், இரணை இலுப்பைக் குளம் பகுதிகளை சுற்றியும் படையினர் ஷெல் மழை பொழிந்தனர். இதனால் படையினர் கைப்பற்றிய பகுதிகளை சுற்றிலும் உள்ள கிராம மக்களும் இடம்பெயரச் செய்யப்படுகின்றனர்.

தமிழ் மக்களை அகதிகளாக அலைய வைத்தால்தான் வழிக்கு வருவார்கள் என்ற மனப்போக்குத்தான் இவ்வாறான இடம்பெயரவைத்தல்களுக்கான காரணமாகும்.

ஏற்கனவே கைப்பற்றப்பட்ட நெடுங்கேணி பகுதிகளில் தமிழ் மக்களது வயல்களில் சிங்கள விவசாயிகள் பயன் அனுபவித்து வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

கடந்த டிசம்பர் மாதம் ஒட்டிசுட்டானை கைப்பற்றியபோது, அங்கும் முத்தையன் கட்டுப் பகுதியிலும் வயல்கள் செழிப்புற்று காணப்பட்டன. படை நடவடிக்கையால் ஒட்டுசுட்டான் மக்கள் இடம்பெயர்ந்தனர். அங்கிருந்து ஏவப்பட்ட ஷெல்களால் முத்தையன் கட்டு பகுதி மக்களும் இடம்பெயர்ந்து சென்றனர்.

வன்னியில் படை நடவடிக்கைக்கு உள்ளாகும் பகுதிகளும், தற்போது யாழ் குடாநாட்டில் சுவீகரிக்கத் திட்டமிடப்படும் பகுதிகளும் விவசாய, தோட்டக் காணிகள் மற்றும் மீன்பிடி வளம் சார்ந்த பகுதிகளாகும்.

எனவே, தமிழ் பேசும் மக்களது பொருளாதார வளத்தையும், அதனைச் சார்ந்த வாழ்க்கையையும் சீர்குலைப்பதும் படை நடவடிக்கைகளது விளைவுகளாகவுள்ளன.

விடுதலைப்புலிகளையும் யுத்தத்தில் வெற்றி கொண்டுவிட்டால், இனிமேல் தமிழ் பேசும் மக்கள் எக்காலத்திலும் போராட்டம் நடத்த எண்ணாதளவுக்கு ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்கிவிட்டே ஓயும் என்பதற்கான சகல முன்னறிவிப்புக்களையும் தெளிவாக கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது.

கடந்த ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்ட, இலங்கை முழுவதையும் பௌத்த சிங்கள நாடாக்கும் திட்டமே புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் இன்று உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது.

புலிகளது இராணுவ பலம் தடையாக இருப்பதால், தாமும் பதிலுக்கு இராணுவ பலத்தை மூர்க்கமாக பயன்படுத்துகிறது அரசு. எதிர்ப்பு இல்லையெனில் எப்போதோ நாசூக்காகவும், வெறும் மிரட்டலோடும் வடக்கு-கிழக்கை பேரினவாதப் பூதம் விழுங்கி ஏப்பமிட்டிருக்கும் என்றே கருத வேண்டியுள்ளது.

இதேவேளை யாழ் குடாநாட்டில் வகுக்கப்பட்டுவரும் சிங்கள குடியேற்ற திட்டம் பற்றி டக்ளஸ் தேவானந்தா பா.உ பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்திருந்தார். அத்திட்டம் உண்மையா? என்று சபையில் அமர்ந்திருந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சரை நோக்கி பலமுறை கேள்வி எழுப்பினார். தான் பின்னர் பதில் கூறிகிறேன் என்று சைகை காட்டியிருந்தார் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்.

ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரது உரையில் மேற்குறிப்பிட்ட பாரதூரமான விடயம் பற்றி ஒரு வார்த்தைகூட இடம்பெற்றிருக்கவில்லை.

ஈ.பி.டி.பி தலைவரது வினாவுக்கு சபையில் பதிலளிக்காதது மூலம், தம்மோடு விரோதமில்லாத தமிழ்க் கட்சிகளுக்கும் இன்றைய அரசு மதிப்பளிப்பதில்லை என்பதும் வெளிப்படையானது.

பகிரங்கமாக பதிலளிக்க அரச தரப்பு முன்வராதது மூலம், அத்திட்டம் அரசுக்கு இருப்பது உண்மை என்பது தெளிவாகியுள்ளது. எனவே, சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு இந்த பாரிய பிரச்சனையை தமிழ்க் கட்சிகள் கொண்டு செல்ல வேண்டும்.

தீர்வுப்பொதியை முன்வைத்திருப்பதாக கூறியபடி, தமிழ் பேசும் மக்களையே சிங்கள மயமாக்கும் தீர்வை நோக்கியே நிகழ்வுகள் அமைவதை உலக அரங்கில் சுட்டிக்காட்டத் தக்க பல தருணங்களை தமிழ்க் கட்சிகள் தவறவிட்டுள்ளன. இப்போதும் தவறவிடலாகாது.

சூரியக் கதிரின் பின்னர் யாழ் குடாநாட்டில் மனிதர்கள் காணாமல் போயினர். தற்போது மண் பறிபோய்க் கொண்டிருக்கிறது. இப்போதும் அரசுக்கு தமிழ்க் கட்சிகள் துணைபோய்க் கொண்டிருக்கின்றன. ●

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா பா.உ பாராளுமன்றத்தில் எழுப்பிய பிரச்சனை சாதாரணமானதல்ல.

யாழ் குடாநாடு நோக்கியும் குடியேற்ற வெள்ளம் பாயப் போகிறதா? என்று கேட்டிருந்தார்.

அரசுக்கு மடியிலே கனமில்லை, மனதிலே அப்படியொரு திட்டம் இல்லையானால், அமைச்சர் எழுந்து நேராகப் பதில் சொல்லியிருக்கலாம். சொல்லவில்லை. தன் உரையிலும் பதில் கூறவில்லை.

அமைச்சர் தன் உரையில் பதில் கூறாது நழுவியபோது, பதில் கூறுமாறு எழுந்து கேட்க ஈ.பி.டி.பி.யும் தவறிவிட்டது. சபையில் இருந்த ஏனைய தமிழ்க் கட்சிகளும் தவறிவிட்டன.

பதில் அளிக்காதது மூலம் மதில் மேல் பூனையாக இருக்கிறது அரசு. குதிக்கலாம். குதிக்காதும் இருக்கலாம்.

பெரும் எதிர்ப்பு ஏற்பட்டால், அப்படியொரு திட்டம் இல்லை என்று நாளை கூறவும் கூடும். அப்படிக் கூறியதும் தமிழ்க் கட்சிகள் வரவேற்று அறிக்கையும் விடக்கூடும்.

ஆனால், விஷயம் அதுவல்ல. அரசுக்கு அப்படியொரு நோக்கம் இல்லையானால், வலிகாமத்தில் மக்கள் தம் சொந்த பகுதிகளுக்கு திரும்புவதை அரசு அனுமதிக்க வேண்டும்.

பாதுகாப்புப் பிரச்சனை என்று அரசு கூறுவதை நம்பும் அளவுக்கு தமிழ்க் கட்சிகளது காதுகள் ஒன்றும் அவ்வளவு நீளமல்ல என்று நம்புவோமாக.

வடக்கு-கிழக்கில் சிங்கள மக்களது குடியிருப்புக்கள் மத்தியில் பெரும் இராணுவ முகாம்கள் உள்ளன. தமிழ் மக்கள் மட்டும் குடியிருக்கக் கூடாது என்பது என்ன நியாயம்?

முகாம்களுக்கு அருகே குடியிருக்க யாரும் அனுமதி கேட்கவில்லை. முகாம்களுக்கு பல மைல் தூரமுள்ள கிராமங்களிலும் குடியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அது ஏன்?

★★★

உருவப் படச் சட்டங்களை (கட் அவுட்) உடன் அகற்றுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாக செய்திகள் வந்தன.

ஆனால், கொழும்பில் பொது ஜன முன்னணியினரால் கட்டப்பட்டுள்ள உருவப்படச் சட்டங்களே பெருமளவு காணப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, மருதானையில் இரவு நேரத்தில் உருவப்படச் சட்டத்தை பத்திரமாக இறக்கி வைத்துவிட்டு, காலையில் மறுபடி கட்டிவிடுகிறார்கள்.

அந்த உருவப்படத்தை பார்த்தபோது சற்றே ஆச்சரியம். உருவப்படச் சட்டத்தில் சிரித்துக் கொண்டிருப்பவர் நமது மாண்புமிகு ஜனாதிபதி.

ஜனாதிபதியின் உத்தரவு வெளியானதாக செய்திகள் வந்து நான்கு நாட்களின் பின்னர் கண்ட காட்சியே இது.

பேசுவது எதுவும் இங்கு நடப்பதே இல்லையே. அதைவிட, எதனை தவிர்க்கவேண்டும் என்று உரத்துப் பேசுகிறார்களோ அதனையே செய்து கொண்டும் இருக்கிறார்கள்.

'பேச்சை வைத்து எடைபோடக் கூடாது. செயலை வைத்து எடை போட வேண்டும்' என்று முன்னோர்கள் சொன்னதும் ஞாபகம் வருகிறது.

மாமேதை லெனின் பின்வருமாறு கூறியிருக்கிறார் "ஒருவர் என்ன பேசுகிறார் என்பதை விட, அவர் என்ன செய்கிறார் என்பதே அரசியலில் முக்கியமானது!"

எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் தமிழ் பேசும் மக்களது வாக்குகளை குறிவைத்து இனிப்பாக பேசுகிறது.

இனப்பிரச்சனை தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்கிறோம் என்று அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

ஆனால் இனப்பிரச்சனைக்கு ஐ.தே.கட்சியிடமும் திட்டம் கிடையாது. வட்டம் இருக்கிறது. பூச்சியம்!

•••

## சீருடை அணிய மறுத்தால்...?

**யா**ழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் ஊர்காவல் படை சீருடை அணிய வேண்டும். அவர்கள்தான் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று படைத்தரப்பு கூறியிருந்தது.

மறுத்த கட்சிகள் சிலவற்றின் பொறுப்பாளர்களுக்கு அன்பான எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாம்.

'கைது செய்ய வேண்டி ஏற்படலாம்' என்று உயர் அதிகாரி ஒருவரே எச்சரிக்கை விடுத்தாராம்.

தாம் சொல்வதை கேட்டு நடக்க மறுத்தால் தடி எடுக்கவும் தயங்காது சீருடைத் தரப்பு. ■



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 53

**கடந்தவாரம்**

**எண்டபே விமான நிலைய தாக்குதல் அமீனின் செல்வாக்கை தணிக்கிறது. உள்நாட்டிலும் அதிருப்திகள் வளர்கின்றன. எதிர்ப்புகள் உருவாகின்றன. அமீனிடம் மந்திரவாதிகள் பற்றிக் கூறுகிறார் ஓர் அதிகாரி. அவர்களைச் சந்திக்க புறப்படுகிறான் அமீன்.....**

**இனி....**

# இடி அமீன்

ஜிஞ்சா நகருக்கு ஹெலிகொப்டரில் அமீன் சென்று இறங்கியபோது மந்திரவாதியின் சீடர்கள் வந்திருந்து வரவேற்றனர். மந்திரவாதி பற்றிக் கூறிய உயரதிகாரியும் வரவேற்க வந்திருந்தார்.

சீடர்கள் அனைவரும் ஆண்கள்; பெண்களைக் காணவில்லை. அமீனுக்கு சற்று ஏமாற்றம்தான்.

**"மந்திரவாதி பெண்ணா, ஆணா?"** என்று அதிகாரியிடம் மெல்லக் கேட்டான் அமீன்.

"பெண்தான்! மிகவும் சக்தியுள்ளவர். நினைத்த காரியத்தை பலிக்க வைப்பதில் இவரைவிட்டால் ஆளில்லை!" என்று மளமளவென்று கூறிமுடித்தார் அதிகாரி.

**"பெண் மந்திரவாதிக்கு கண்ணைக் கவரும் கட்டுமஸ்தான சீடர்கள்!"** என்று ஆச்சரியப்பட்டான் அமீன்.

அதைவிட ஆச்சரியம் மந்திரவாதியை நேரில் கண்டபோது ஏற்பட்டது.

மந்திரவாதி அழகாக இருந்தாள். நடுத்தரவயதில் இருந்தாள். உடலை மிகக் கவனத்துடன் பராமரிக்கிறாள் என்பதை கட்டுக் குலையாத மேனி வனப்பு எடுத்துக் காட்டியது.

பெரிய மார்புகள்; அவற்றின் பரிமாணம் தெரியத்தக்கதாக மேலாடை அணிந்திருந்தாள். மிக மெல்லிய துணி. அமீனின் கண்கள் ஊடுருவின.

அவளது கால்கள் இரண்டு தூண்கள் போல பருத்து இருந்தன. முழங்காலுக்கு மேலே அதிகமாகவே பருத்திருந்தன. இடுப்பிலே அவள் அணிந்திருந்த ஆடை முழங்காலுக்கு மேலேயே நின்றிருந்தது. தொடை அழகைக் காண்பிக்க வசதியான ஆடை.

இடி அமீன் இப்படியொரு எடுப்பான பெண் மந்திரவாதி இருப்பாள் என்று எதிர்பார்க்கவேயில்லை. 'மந்திரம் போடாமலேயே மற்றவர்கள் இவளிடம் மயங்கிவிடுவார்களே,' என்று தனக்குள் நினைத்தான்.

அவள் எதுவும் பேசவில்லை. வாயால் தான் பேசவில்லை. கண்கள் பேசின. அமீனை முழுதாக விழுங்கின.

அந்தக் கண்களில் ஏதோ ஒரு சக்தி இருப்பதாகத் தோன்றியது. அவள் கண்களில் இருந்து கிளம்பிய ஓர் ஒளிக்கீற்று தனக்குள் ஊடுருத்து உள் நுழைந்தது போல் உணர்ந்தான் அமீன்.

ஒரு பெண்ணின் முன்பாக முதன் முதலில் ஒரு அடிமைபோல தான் மாறி விட்டதையும், அவளது முதல் பார்வையிலேயே ஒரு பயம் ஏற்பட்டுவிட்டதையும் அமீனால் உணர முடிந்தது.

அவள் அமீனை கண்களால் வரவேற்று விட்டு, தன் பிரத்தியேக பீடத்திற்கு சென்றாள். தன் பின்னால் வருமாறு அவள் கண்களால் இட்ட கட்டளைப்படி அவளைப் பின்தொடர்ந்தான்.

அவள் நடக்கும்போது பின்புறங்களின் எடுப்பான தோற்றமும், அசைவும் அமீனை பாடாய்ப்படுத்தின.

அதிகாரி, மெய்க்காவலர்கள் அனைவரும் பிரதான மண்டபத்தோடு நின்று கொண்டனர். மந்திரவாதியின் பிரத்தியேக அறைக்குள் செல்ல அமீனுக்கு மட்டுமே அனுமதியிருந்தது.

அவளது மந்திரக் கூடத்திற்குள் நுழைந்ததுமே புகை முகத்தில் மோதியது. வாசனை கலந்த புகை. அந்தக் கூடம் முழுவதும் புகையால் நிரம்பியிருந்தது.

அவள் ஒரு பீடத்தில் சென்று அமர்ந்து கொண்டாள். புகை சூழ அவள் அமர்ந்திருந்த காட்சி, மோகினிப் பிசாசு ஒன்று அமர்ந்திருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

தன் எதிரே அமரும்படி அவள் சைகை காண்பித்தாள். மறு பேச்சின்றி அமீன் அமர்ந்து கொண்டான்.

அப்போதுதான் அமீன் கவனித்தான். அந்தக் கூடத்தில் மண்டை ஓடுகளும், மனித எலும்புக்கூடுகளும் ஆங்காங்கே கிடந்தன. புகை அடர்த்தியாலும், அங்கு மெல்லிய வெளிச்சமே இருந்தமையாலும், கண்கள் பழக்கப்பட்ட பின்னரே அவைகள் தென்பட்டன.

புலி, சிங்கம் போன்றவற்றின் பாடம் பண்ணப்பட்ட தலைகளும் ஒரு மூலையில் கிடந்தன.

முதல்முதலாக அமீனுடன் அவள் பேசினாள். "மனது முழுக்க சஞ்சலத்தையும், சபலத்தையும், நம்பிக்கையீனத்தையும் நிரப்பிக்கொண்டு என்னிடம் வந்திருக்கிறாய். திரும்பிச் செல்லும்போது உன் மனதில் திருப்தி குடிகொண்டிருக்கும்!" என்றாள்.

அவள் அழகுக்கும், மேனி வனப்புக்கும் நேர்மாறாக இருந்தது குரல். ஆண் தன்மையுடன், மிரட்டும் தோரணையில் அவள் குரல் ஒலித்தது. அந்தக் குரலுக்கு கட்டளையிடும் சக்தி இருந்தது.

மந்திரவாதிகள் கையாளும் தந்திரங்களில் அதுவும் ஒன்று. முதலில் தங்கள் முன்பாக உள்ளவனை பணிய வைத்து விடுவார்கள். பயத்தையும் ஏற்படுத்தி விடுவார்கள். வருபவனின் பலவீனத்தை எடை போட்டு அதற்கு ஏற்பவும் வேலை காட்டி விடுவார்கள்.

அமீனின் பலவீனம் பெண் மோகம் என்பது அவளுக்கு நன்கு தெரியும். அதனால் வழக்கத்திற்கு மாறாக கவர்ச்சியாக தன்னை அலங் கரித்திருந்தாள்.

சபலமும், சூழ்நிலையும் வாசனைப் புகை மயக்கமும், பிரமைகளும் அமீனை அவள் என்ன சொன்னாலும் நம்ப வைத்தன. அவள் என்ன செய்தாலும் நம்ப வைத்தன.

தன் அருகே பாத்திரம் ஒன்றில் கிடந்த நீரை எடுத்து அமீன்மீது தெளித்தாள். "உனது துன்பம் என்னும் சுமை விரைவில் கரைந்து போகும். உன்னைப் பிடித்துள்ளது கடும்பிணி. அதனால் மெல்ல மெல்லத்தான் கரைய வேண்டும். உன் ஆட்களில் ஒருத்தனே உனக்கு கெடுதல் பண்ண, சூனியம் செய்திருக்கிறான்.



அவன் ஏவிவிட்ட மாய பிசாசுகள்தான் உனக்கு கெடுதல் பண்ணத் தொடங்கியுள்ளன."

அவள் கூறக் கூற அமீனுக்கு அது உண்மை போன்று தெரிந்தது. 'அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இப்படியெல்லாம் நெருக்கடிகள் திடீரென்று தோன்றுமா?' என்று எண்ணினான்.

**"அவன் யார் என்று கூறமுடியுமா? அடையாளம் கூறினால் உபகாரமாக இருக்கும்"** என்றான் அமீன்.

அவள் தன் மார்புகள் குலுங்கக்கூடியதாக சிரித்தாள். அமீனும் குலுங்கிப் போனான்.

"உன் அவசரம் ஆகாதப்பா. இன்றுதானே இங்கே வந்திருக்கிறாய். உடனடியாகவே உச்சி வரை போய்விடவா முடியும்? இன்று உனக்கு சாந்தி சிகிச்சை தரப்போகிறேன்!" என்றாள்.

பெரும் வசதியுள்ளவர்களுக்கு மட்டுமே அவள் நடத்தும் பூசை அது. அமீனை தனக்கு நெருக்கமாக நகர்ந்து அமரச்சொன்னாள்.

"சட்டையைக் கழற்று!" என்று ஆணையிட்டாள். அமீன் பணிந்தான். அவனுக்குள் எதிர் பார்ப்பும், பரபரப்பும் தொற்றிக் கொண்டு உடலைத் தணலாக்கின.



அமீன் சட்டையைக் கழற்றியதும் அவன் தேகத்தை உற்றுநோக்கினாள். கறுப்பாக இருந்தாலும், மினுமினுப்பாகவும், திடமாகவும் விரிந்த மார்பு அவளையும் சலனப்படுத்தியது.

கண்களை மூடிக்கொண்டு நீரை எடுத்து தெளித்தாள். அது வெறும் தண்ணீர்தான். விசேஷ மந்திர நீர் என்று ஏமாற்ற வசதியாக பொடிகலந்து நீறமூட்டியிருந்தாள். அதனால் நீர் மஞ்சள் நிறமாக மாறியிருந்தது.

அமீனின் உச்சந்தலையில் தன் கைகள் இரண்டையும் வைத்தாள். அவள் கைகளை உயர்த்தியதால், அவளது நெஞ்சத்து எழுச்சிகள் அமீனை மோதுவதுபோல நெருக்கத்தில் தெரிந்தன.

"கண்களை மூடிக்கொள்! மனக் கண்களால் அனுபவி. கண்களை இறுக மூடிக் கொள்!" என்றாள் அப்போது அவளது குரலில் இரகசியம் பேசும் தொனியும், கட்டளையிடும் குரலும் பின்னிப் பிணைந்திருந்தன. அவளது விரல்கள் அமீனின் இமைகளை மூடி அழுத்தின.

அமீன் கண்களை மூடிக்கொண்டான். கண் திறந்திருப்பதை விடவும், மூடியபடி அவள் அடுத்து என்ன செய்யப்போகிறாள் என்ற எதிர்பார்ப்பில் தவிப்பது புதுவிதமான, கிளர்ச்சியூட்டும் அனுபவமாக இருந்தது.

அமீனின் தலையை வருடிய அவளது கரங்கள் மெல்ல இறங்கி அமீனின் தோள்களில் நின்றன. தோள்களை அழுத்திவிட்டன. அவள் ஏதோ மந்திரத்தை முணுமுணுத்துக்கொண்டிருந்தாள்.

இப்போது அவளது கரங்கள் அமீனின் பரந்த மார்பை நீவிவிடத் தொடங்கின. அந்த வருடலில் ஒரு இதம் இருந்தது. அமீனுக்கு தேகமெல்லாம் புல்லரித்தது.

கண்களை திறக்க எத்தனித்தான். அவள் கரம் எழுந்து படபடத்த இமைகளை அழுத்தியது.

"மனதை ஒரு முகப்படுத்து. உள்ளேயே ஒளி தெரியும். மனக் கண்ணிலே என்னைப் பார். மனதால் என்னோடு இன்பம் நுகர்!" அவனது காதருகே கிசுகிசுத்தபடி மார்பை தனது உள்ளங்கைகளால் தேய்த்தாள்.

"உனக்குள் இருக்கிற மாயப் பிசாசை விரட்ட, உனக்குள் என் ஒளியைபாய்ச்சுகிறேன்!" என்றபடி அமீனை அமர்ந்திருந்த படியே இறுகத் தழுவிக் கொண்டாள்.

"உணர்ச்சிவசப்படாதே! அப்படியே இரு. பிசாசைக் கட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்று அமீனது காதுக்குள் முணுமுணுத்தாள்.

அவளது மார்புகள் அழுத்தியதாலும், அவளது தழுவலாலும் மெய் மறந்து போனாலும், அவளது கட்டளைக்கு கீழ்ப்படிந்து, தான் எந்தச் செயலிலும் ஈடுபடாமல் அவளது தழுவலுக்குள் கட்டுண்டு கிடந்தான் அமீன்.

அவள் முணுமுணுப்பதை நிறுத்திவிட்டு, பாம்பு மாதிரி மூச்சுவிட்டாள். அவனது காதுக்குள் மூச்சுக் கேட்டது.

"நீ அதிபருமல்ல, நான் பெண்ணு மல்ல; இருவரும் பிசாசுகளுடன் போர் புரியப் போகிறோம். இதுதான் சாந்தி பூசையின் உன்னத கட்டம்!" அவள் அப்படியே அமீனை தரையில் சாய்த்தாள்.

"கண்களைத் திறக்காதே!" என்று திரும்பத் திரும்ப கூறியபடியே தன் ஆடைகளை முற்றிலுமாக துறந்தாள். அமீனையும் முழு வெற்றுடம்பனாக மாற்றினாள்.

அமீனுக்கு தன்னை மறக்க முடியவில்லை. தனக்கு நடப்பதெல்லாம் தெரிந்தது.

"உனக்குள் வரப்போகிறேன். உனக்குள் உள்ள சஞ்சலப் பேயை விரட்டப் போகிறேன். அனுமதி. என்னை அனுமதி. நீ ஆண்மகனாக என்னை எதிர்கொள்ள வேண்டும். என்னை திருப்தி செய். என்னை திருப்தி செய். உன் சுமை கரையும்."

அவளது முணுமுணுப்புடன் இப்போது அவளது பாரம் அமீனை அழுத்தியது. அமீன்மீது முற்றாகப் படர்ந்து, மூடிக்கொண்டாள்.

பின்னர் நடந்தது எல்லாம் அமீனுக்கு பழக்கமானவையே என்றாலும், அவள் கையாண்ட முறைகள் புதுமையானதாக, எங்கோ புதிய உலகத்துக்கு அவள் இழுத்த இழுப்பில் செல்வதுபோல இருந்தது.

அவள்தான் முழு மூச்சுடன் அவனை ஆட்கொண்டாள். அதனால் அவள்தான் மிகவும் களைத்துப் போய் துவண்டு, அவன் மீதிருந்து உதிர்ந்தாள்.

அப்போதும் அமீன் கண்களைத் திறக்கவில்லை. அவள் வேகமாக ஆடை அணிந்து கொண்டு, பீடத்தில் ஏறி முன்புபோல அமர்ந்து கொண்டாள்.

"கண்களைத் திற, எழுந்து அமர்ந்து கொள்!" என்று உத்தரவிட்டாள்.

### தருவது ரசிகன்

அமீன் கண்களைத் திறந்தான். புதிதாக வெளிச்சத்தை, புற உலகைப் பார்ப்பது போல இருந்தது.

அவளா இவள், தன்மீது படர்ந்து, தன்மீது ஆக்கிரமிப்பு நடத்தியவள் இவளா? என்பது சந்தேகமாக இருந்தது.

எதுவுமே நடவாதது போல அவள் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

"இங்கு நடந்தது எதுவுமே மனிதச் செயல்களல்ல. எல்லாமே ஆவிகள் செயல்கள் தான்! நடப்பதுபோல் இருப்பன நடப்பன அல்ல. நடவாதது போல இருப்பன நடவாதவையும் அல்ல. எல்லாமே மாயை. இங்கு மேலும் மூன்று நாட்கள் வந்து போ! உன் பீடைகள் போகும். உன்னை சக்தியுள்ளவன் ஆக்குகிறேன்."

எங்கோ வெறித்துப் பார்த்தபடி அவள் பேசினாள். செல்லலாம் என்பதற்கு அடையாளமாக சைகை செய்தாள்.

அமீன் எழுந்து தன் உடைகளை அணிந்து கொள்வதை, எவ்வித சலனமும் இல்லாதவள் போல, உள்ளே மோகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அமீன் வெளியே வந்தபோது அவன் முகத்தில் வண்டி வண்டியாக சந்தோசம் இருந்தது.

அன்றே தலைநகர் திரும்பிய அமீன், தன்னை மந்திரவாதியிடம் கூட்டிச் சென்ற அதிகாரிக்கு பதவி உயர்வும், கார் ஒன்றும் பரிசளித்தான்.

அதேசமயம் மற்றொரு விபரீதத்திற்கான செய்தியும் வந்தது.

(இடி தொடரும்)

# ஜோடி சேர்ந்தாச்சு



'மின்சாரக் கனவு' படத்தின் மூலம் தமிழ்ப் பட ரசிக மகாஜனங்களுக்கும் அறிமுகமானவர் கஜோல்.

இந்திப் பட உலகில் முதலிட நடிகைகளில் ஒருவர். கஜோலும் இந்தி நடிகர் அஜய் தேவகனும் நீண்டகாலமாக காதலித்தனர்.

இருவருமே அதனை மறுத்தபோதும் பத்திரிகைகள் மோப்பம் பிடித்து செய்திகள் போட்டபடிதான் இருந்தன.

சமீபத்தில் கிசு கிசு உண்மையாகியது. இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

அமிதாப்பச்சன் முன்னிலையில் மிக எளிமையாக திருமணம் நடந்தேறியது.

கஜோல் தொடர்ந்து நடிப்பாரா? என்று ரசிகக் கண்மணிகள் கண்கலங்கத் தேவையில்லை.

"கஜோல் தொடர்ந்து நடிப்பார். அவர்தான் தனது தொழில் பற்றி முடிவு செய்யவேண்டும்" என்கிறார் புதுமாப்பிள்ளை அஜய்தேவ்கான்.

# நடிகைகளை கிள்ளிய ரசிகர்கள்

சினிமா நடிகர்கள் படத்தில் என்றால் எத்தனைபேரை வேண்டுமானாலும் புரட்டி எடுப்பார்கள். ஆனால் நிஜத்தில் என்றால் என்ன பண்ணுவார்கள்? சமாதானம் பேசுவார்கள்.

சமீபத்தில் சென்னையில் பிரபு, மீனா நடிக்கும் 'மனம் விரும்புதே உன்னை' படப்பிடிப்பு பங்களா ஒன்றில் நடந்தது. அதே பங்களாவில் விஜய், அஜித் ஆகியோர் நடிக்கும் படங்களும் படப்பிடிப்பு நடந்தன.

அப்போது ரசிகர்கள் என்று கூறிக்கொண்டு உள்ளே புகுந்த சிலர் மீனாவிடமும், மாளவிகாவிடமும் 'ஒட்டோகிராஃப்' வாங்கினார்கள்.

அவர்களில் சிலர் சட்டென்று மீனாவின் இடைப்பகுதியில் கிள்ளியதுடன், மாளவிகாவின் பின்புறத்தில் கிள்ளியும் விஷமம் பண்ணினார்கள். மீனா கூச்சல் போட்டதால் நடிகர்கள் பிரபு, ஆனந்தராஜ், மணிவண்ணன் ஆகியோர் ஓடிவந்தனர்.

விஷமம் செய்த கும்பலை விலக்கி சமாதானமாக பேசினர். அவர்களோ கெட்ட வார்த்தைகளால் மீனாவை தொடர்ந்து கிண்டலடித்தனர். 'தேக்குமர அதிபர் கொடுத்த பணத்தை எங்கு வைத்திருக்கிறாய்..' என்று ஆபாசமாக கேலி செய்தனர்.

அதனால் கோபமடைந்த படப்பிடிப்புக் குழுவினர் அந்தக் கும்பலை தாக்க முற்பட்டனர். பயந்துபோய் ஓட்டம் பிடித்த கும்பல், பின்னர் மேலும் பலரை தம்மோடு சேர்த்துக் கொண்டு வந்தது.

படப்பிடிப்பு நடந்த மாளிகைக்கு கல்வீச்சு நடத்தியபடி உள்ளே புகுந்தது. உருட்டைக் கட்டைகளால் கதவுகளை தாக்கியது.

இதனால் நடிகைகள் ஒரு அறைக்குள் புகுந்து உள்ளே பூட்டிக்கொண்டு



ஒளித்தனர். பொலிசுக்கு உடன் தகவல் போனது. பொலிஸ் வரப்போவதை அறிந்த கும்பல் அங்கு நின்ற கார்களை நொறுக்கிவிட்டு ஓட்டம் பிடித்தது. இந்த வில்லன்களை விரட்டியடிக்க நடிகர்களால் முடியவில்லை.

# எலிசபெத் ராணியின் இரகசிய மருந்து சீட்டு

இங்கிலாந்தில் ஆற்றங்கரை ஓரத்தில் கத்தை கத்தையாக மருந்து சீட்டுக்கள் காணப்பட்டன.

அப்பக்கமாக நடந்து சென்ற ஒருவரிடம் அவை சிக்கின. அவற்றை ஆராய்ந்த போது அவர் திடுக்கிட்டார்.

அத்தனையும் எலிசபெத் மகாராணி மற்றும் அவரது குடும்பத்தினரின் மருந்துச் சீட்டுக்கள்.

உடனே அவற்றை அவர் பொலிசில் ஒப்படைத்தார். அந்த மருந்துச் சீட்டுக்களை படித்துப் பார்த்த பொலிசார் அதிர்ந்தனர்.

மகாராணி மற்றும் அவரது குடும்பத்தினருக்கான இரகசிய நோய்கள் சில வற்றுக்கான மருத்துவக் குறிப்புக்கள் அவற்றில் இருந்தனவாம்.



நல்லவேளையாக வேறு யார் கையிலாவது சிக்கியிருந்தால் பத்திரிகைகளில் வெளியாகி பெரும் பிரச்சனைகளை கிளப்பியிருக்கும்.

அந்த மருந்துச் சீட்டுக்கள் எப்படி, எவரால் வெளியே கொண்டு வரப்பட்டன? என்று விசாரணை நடப்பதாக அரண்மனை வட்டாரங்கள் கூறியுள்ளன.

அரச குடும்பத்தின்மீது கோபம் கொண்ட பணியாளர்கள் யாராவது இதற்கு காரணமாக இருக்கலாம் என்றும் சந்தேகம் நிலவுகிறது.

# விவேகானந்தரின் தலைப்பாகை

சுவாமி விவேகானந்தர் எழுதிய 2 கடிதங்கள் மற்றும் அவர் பயன்படுத்திய தலைப்பாகை ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அந்தக் கடிதங்களை அவர் இந்தியாவிலுள்ள ராஜஸ்தான் மாநில கேத்ரியின் முன்னாள் அரசருக்கு எழுதியுள்ளார். அந்தக் கடிதங்களும், தலைப்பாகையும் ராமகிருஷ்ணா மட நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அது தொடர்பாக ராமகிருஷ்ண மடம், நிர்வாகிகள், ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலர்டுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர். தலைப்பாகையை அரச குடும்பத்தினரே நேரடியாக ராமகிருஷ்ணா மடத்திடம் ஒப்படைக்கவுள்ளனர்.

# முதல் பிள்ளை

இரண்டாயிரம் ஆண்டில் பிறக்கப்போகும் முதல் குழந்தை யார்? எந்த நாட்டவர்? இந்த சுவாரசியமான கேள்விக்கு விடையளிக்க 'செல்' நகர மக்கள் சுறுசுறுப்பாகியுள்ளனர்.

நோர்வே நாட்டில் இருக்கிறது 'செல்' நகரம். இரண்டாயிரம் ஆண்டில் பிறக்கும் முதல் குழந்தை தமது நகரைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்று இந்த நகர மக்கள் விரும்புகின்றனர்.



கணவன் மனைவி எப்போது உறவு கொண்டால் குழந்தை 2000ம் ஆண்டு மலரும்போது பிறக்கக்கூடியதாக இருக்கும்? என்று அங்கு ஆராய்ச்சிகள் நடத்தினார்கள்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 மற்றும் 11ம் திகதிகளில் கணவன் மனைவி உடலுறவு கொள்வது உகந்தது என்று ஒரு சாரார் கருதுகின்றனர். இன்னொரு பகுதியினர் ஏப்ரல் 30ம் திகதிதான் உகந்த நாள் என்று கருதுகின்றனர்.

இதனால் மேற்கண்ட மூன்று தினங்களிலும் 'செல்' நகரில் உள்ள பிரதான விடுதிகளில் அறைகள் இலவசமாக விடப்படுகின்றன.


குறிப்பிட்ட தினங்களில் இங்கு வந்து தங்குவோர் செல் நகரைச் சேர்ந்த கணவன் மனைவியாக இருந்தால் போதும். ஹோட்டலுக்கு வாடகை கொடுக்காது 2000ம் ஆண்டுக்கான முதல் குழந்தையை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டு விட்டு செல்லலாம்.


படிப்பகம்

www.padippakam.com

தகவல் பெட்டி

## வேகமான ஏற்றம்




▲ உலக சாதனைகளையும் சாதனை புரிந்தவர்களையும் பட்டியலிட்டுப் பதிவு செய்யும் புத்தகம் கின்னஸ் சாதனைப் புத்தகம் என்றழைக்கப்படுகிறது. இப்புத்தகத்தை வெளியிடும் கின்னஸ் புத்தக நிறுவனத்தினரும் சில போட்டிகளை வைத்து அப்போட்டிகளில் சாதனை புரிவோரையும் உலகுக்கு அறிமுகப் படுத்துகிறது.

தீ அணைக்கும் படையினர் பயன்படுத்தும் ஏணியை செங்குத்தாக நிறுத்தி, அதில் வேகமாக ஏறும் குழுவினர் கடக்கும் தூரத்தை கணக்கிடுகிறார்கள். ஒவ்வொரு குழுவும் ஒரு நாளில்- 24 மணி நேரத்தில்- ஏறும் தூரமே கணக்கிடப் படுகிறது. இப்போட்டியை இந்நிறுவனம் 1993ல் முதன் முதலில் ஆரம்பித்தனர்.

முதல் வருடம்- 1993ல் நடைபெற்ற போட்டியில் பிரிட்டனிலுள்ள ரோயல் பேக்ஷயர் தீயணைக்கும் படையினர் வெற்றி பெற்றனர். ஆகஸ்ட் 13ம் திகதி தொடங்கி 14ம் திகதிவரை இக்குழுவினர் ஏறிய மொத்தத் தூரம்- 48.17 கிலோ மீட்டர் (29 மைல் 1,639 யார்)

நியூ போட் நகரில் மற்றுமொரு போட்டி 1994 ஆகஸ்ட் 26ம் 27ம் திகதிகளில் க்வென்ற் தீயணைக்கும் படையைச் சேர்ந்தவர்கள் 61.58 கிலோமீட்டர் (38 மைல் 547 யார் தூரத்தை ஏறி வெற்றிகண்டனர். இதுவே உலக சாதனையாக தற்போதுவரை இருக்கிறது.

தீயினால் ஏற்படும் அபாயங்களிலிருந்து மக்களைக் காக்கும் தீ அணைப்புப் படையினர், மிகச் சிறந்த உடலுறுதியுள்ளவர்களாக விளங்கவேண்டும். இத்தகைய பணிகளில் ஈடுபடுபவர்களை ஊக்கப்படுத்துவதற்காகவே தீயணைக்கும் படையைச் சார்ந்தவர்களுக்கு இத்தகைய போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.



## பெறுமதியான நோட்டு

பெரும்பாலான நாடுகளில் அதிக பெறுமதியுள்ள பண நோட்டுகளை அச்சிட்டுப் புழக்கத்தில் விடுவதை நிறுத்தி விட்டனர். இத்தகைய பெறுமதியான நோட்டுகளை பெரும் தனவந்தர்கள் பிடிப்பதால் கலபமாக பதுக்கி வைத்துக் கொள்வர் என்பதாலேயே தடை விதிக்கப்பட்டது.

அமெரிக்காவில் பத்தாயிரம் டொலர் பெறுமதியான பண நோட்டுகள் இன்றும் புழக்கத்தில் உள்ளன. இருப்பினும் அமெரிக்க நாடு முழுவதும் இத்தகைய நோட்டுகள் ஆக 345 மட்டுமே புழக்கத்திலிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இது தவிர, அமெரிக்கக் கூட்டாட்சி நிறுவனம் அமெரிக்கத் திறை சேரித் திணைக்களத்துடனான பணப் பரிவர்த்தனைக்கு மட்டும் ஒரு இலட்சம் டொலர் பெறுமதி யான நோட்டுகளைப் பயன்படுத்துகிறது. நம் நாட்டு மதிப்பில் 70 இலட்சம் ரூபாய். இதுவே இன்று உலகின் மிகக் கூடுதலான பெறுமதியான நோட்டாகும். ஒரு நோட்டை சுருட்டினாலே போதும்.

## சாதனையான சேகரிப்பு

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொழுது போக்கு இருக்கும். புத்தகங்களைச் சேகரித்து அலமாரிகளில் அடுக்கி வைத்து அழகு பார்ப்பவர்களும் இருக்கிறார்கள்.

விளையாட்டுப் பொம்மைகள், வாழ்த்து அட்டைகள், விளம்பர வெளியீடுகள் ஆகியவற்றையும் சிலர் சேகரிப்பார்கள். பலவகையான பறவைகளின் இறகுகளையும் சிரமம் பாராது சேகரித்துப் பாதுகாப்போரும் உள்ளனர்.


அவர்கள் சேகரித்தவற்றில் சில அபூர்மானவையாக அமைந்து பலரையும் வியக்க வைப்பதும் உண்டு.

இப்படத்தைப் பாருங்கள். இந்தியாவின் வரைபடம் தான் இது. கூர்ந்து கவனித்தால் இதில் உள்ள இந்திய வரைபடத்தின் அமைப்பிலுள்ள வித்தியாசத்தைக் காணலாம்.

இந்தியா அந்நிய ஆட்சியிலிருந்து காலத்தைக் காட்டுகிறது இவ்வரை படம். இப்படம் ஏதாவது சுவரிலோ கடதாசியிலோ வரையப் பட்டதல்ல. உலோகத்தாலான சிகரெட்டப்பா ஒன்றின் மீதுதான் வரையப்பட்டுள்ளது.

1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைய முன்னர் பாகிஸ்தானும் ஒன்றாக இருந்தபோது வரையப்பட்ட படம் இது.

சிகரெட் டப்பாவில் இவ்வாறு வரைபடம் வரையப்பட்டது ஆச்சரியம். அதைவிட ஆச்சரியம் இந்த டப்பாக்களில் ஒன்று மட்டும்தான் பத்திரமாக இருக்கிறது. அதனால் கின்னஸ் புத்தகத்திலும் இது இடம்பெற்றுள்ளது. கொலின்கிறே என்பவர் இதனை சேகரித்து வைத்திருந்தார். சிகரெட் டப்பாக்களை சேகரிப்பது இவரது பொழுபோக்கு.




## சன்மானம் 2 கோடி

இங்கு ஒய்யாரமாக அமர்ந்திருக்கும் ஷரோன் ஸ்டோன் என்ற நடிகை ஹொலிவுட் திரை உலகில் அதிக வருமானம் பெறும் நடிகையாக இன்று திகழ்கிறார். அத்துடன் சொந்தமாகத் திரைப்படங்களைத் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றினையும் நடத்தி வருகிறார்.

ஸ்டோன் 1980ம் ஆண்டுகளில் திரைப்படங்களில் சிறு சிறு வேடங்களையே ஏற்று நடித்து வந்தார். ஆனால் 1992ல் ஸ்டோனின் திரை வாழ்க்கையில் ஒரு பெரும் திருப்பம் நிகழ்ந்தது.

'ஜோ எஸ்ரெஹோஸ்' என்பவர் பேசிக் இன்ஸ்ரிங்ற்' (அடிப்படை உணர்வு) என்ற படத்துக்குரிய கதையை வடிவமைத்தார். இதில் வரும் கதாநாயகிக்கு ஷரோன் ஸ்டோன் தான் பொருத்தமானவர் என்று கண்டறிந்து அப்பாத் திரத்தில் அவரை நடிக்க வைத்தனர்.

இப்படத்தில் ஸ்டோன் காட்டிய கவர்ச்சியான நடிப்பாற்றல் திரைப்படத்தின் உயிர் நாடியாக அமைந்துவிட்டது. காலுக்குமேல் கால்போட்டு அவர் அமர்ந்திருக்கும் காட்சியின் கவர்ச்சிக்காகவும் ஜொள்ளர்கள் கூட்டம் அலைமோதியது.

1993ல் இரண்டு ஒஸ்கார் விருதுகளையும் இப்படம் பெற்றுக் கொண்டது. மைக்கேல் டக்ளஸ் ஸ்டோனுக்கு ஜோடியாக நடித்தார். போல் வெர்ஹோவன் இப்படத்தின் இயக்குநர்.

பேசிக் இன்ஸ்ரிங்ற்' திரைப்படத்தின் திரைக்கதையை வடிவமைத்த ஜோ எஸ்ரே ஹோஸ் என்பவருக்கு இத்திரைக் கதைக்காகக் கொடுக்கப்பட்ட சன்மானமே-ஒரு திரைக் கதைக்காக இதுவரை வழங்கப்பட்ட மிகக் கூடுதலான தொகை என்று கூறப்படுகிறது.




இப்படத்தைத் தயாரித்த 'கரோல்கோ பிக்சேர்ஸ்' நிறுவனம், எழுத்தாளருக்கு வழங்கிய சன்மானம் எவ்வளவு தெரியுமா? 30 இலட்சம் அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு மதிப்பில் 11 கோடி ரூபாய். எழுத்தாளர். ஒருவர் திரையுலகில் பெற்ற மிகக் கூடிய சன்மானம் இதுதான் என்கிறது கின்னஸ்.

## புதுமையான ஆடு

ஆட்டுக்கு நாலுகால் வழமை. ஆறுகால் என்பது புதுமை. இந்த ஆட்டுக்குட்டிக்கு ஆறுகால்கள். இந்த அபூர்வ ஆட்டுக்குட்டி கிரேக்கத்தில் பிறந்துள்ளது. ஆறு கால்கள் இருந்தாலும் நான்குதான் பயன்படுகின்றன. மேலதிகமான இரண்டும் இயங்காது உள்ளன.

இவ்வாறு புதுமையாக பிறப்பவை உடன் இறப்பது முண்டு. ஆனால் இந்த ஆட்டுக்குட்டி எவ்வித குறையுமில்லா மல் துள்ளித்திரிகிறது.



## ருசிக்க ருசிக்க

உணவுப் பண்டங்களை மிகப் பாரிய அளவில் உருவாக்கும் போட்டிகளும் இப்பொழுது நடைமுறைக்கு வந்துவிட்டன. இத்துறையில் சாதனை படைத்த சங்கதிகள் அவ்வப்போது முரசில் இடம் பெற்றுள்ளன அல்லவா?

'சொசேஜ்' என்ற தின்பண்டத்தை இன்று அறியாதவர் எம்மிடத்தில் கிடையாது. மாவினால் செய்யப்படும் நீளமான ரொட்டிக்குள் பதனிடப்பட்ட இறைச்சி புகுத்தி வைக்கப்பட்டு மூடியிருக்கும். அவசர உணவு தேவைப்படும்போது, 'சொசேஜை'த் தான் பெரும்பாலானோர் நாடுவார்கள்.

'சொசேஜ்' ஒன்று ஆகக்கூடியது அரை முழ நீளமிருக்கலாம். ஆனால் படத்தில் காணப்படும் சொசேஜின் நீளம் எவ்வளவு தெரியுமா? 46.3 கிலோ மீட்டர் (28 3/4 மைல்) இதனை 1995ம் ஆண்டு கனடா ஒண்டாரியோவில் உள்ள சிச்செஸர் நகரைச் சேர்ந்த இறைச்சி விற்பனை நிலையமான எம் எம் மீற் ஷொப் உலக சாதனைக்காக தயாரித்தது. சாப்பாட்டு மன்னர்கள் நூறுபேர் சேர்ந்தால்கூட இதனை தின்று தீர்க்க முடியாது.





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 95

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# அதே சாயலில் இன்னொரு நடிகை
# ஒளிப்பதிவாளர் தேடிய புதுமுகம்

பிரபல ஒளிப்பதிவாளர் அவர். அவரால் அறிமுகம் செய்யப்படும் நடிகைகளை சில காலத்திற்கு தன் கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்வார்.

அவ்வாறான நடிகைகளில் சிலருடன் சற்று அதிகமான காலத்திற்கும் உறவை வைத்திருப்பது வழக்கம்.

மகாபாரத கதையில் வரும் முக்கிய பாத்திரம் ஒன்றின் பெயரை ஒத்த நடிகையுடன் நீண்டகாலம் நட்போடு இருந்தார் ஒளிப்பதிவாளர்.

அந்த நடிகையும் 'குரு' பக்தியில் ஒளிப்பதிவாளர் சொல்வதற்கெல்லாம் கட்டுப்பட்டார். பிரகாசமான வாய்ப்புக்கள் சில அந்த நடிகையைத் தேடிவந்தன. அதற்கு ஈடாக சில இரவுகளை தம்மோடு பகிர்ந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டது.

ஒளிப்பதிவாளர்மீது கொண்டிருந்த காதலால், பிறரை அனுசரித்துப்போக முடியவில்லை. அதனால் வாய்ப்புக்களை இழந்தார்.

கதாநாயகர்களுடன் நெருக்கமாக நடிக்க வேண்டும் என்றால், தான் இயக்கி ஒளிப்பதிவு செய்யும் படங்களில் மட்டுமே தன் கண்முன்பாக நடிக்க வேண்டும் என்பது ஒளிப்பதிவாளரது அன்புக் கட்டளை.

நடிகையும் கட்டளைகளை ஏற்று நடந்தார். அப்படியிருந்தும் அவர்கள் உறவு முறிந்தது.

## கண்ட காட்சி

விநோதமான ஒரு நடிகையுடன் ஒளிப்பதிவாளர் கட்டிலில் இருந்தபோது நடிகை கண்டு விட்டார். தன்னை மட்டும் பிற ஆண்களோடு பழக தடைவிதித்து விட்டு, அவர் மட்டும் இளம் நடிகைகளை மேய்வதை நடிகையால் பொறுக்க முடியவில்லை.

அப்போது ஏற்பட்ட விரிசல் படிப்படியாக நிரந்தரமானது. நடிகை இப்போது தனியாக இருக்கிறார்.

நடிகையின் பிரிவை அடுத்து, அந்த நடிகை போன்ற சாயலில் புது முகம் தேடினார். ஒளிப்பதிவாளர்.

தன்னைப் பிரிந்த நடிகைக்கு சவால் விடுவதற்கும், தான் நினைத்தால் அவரைப் போல பலரை உருவாக்கிக் காட்ட முடியும் என்றும் நிருபிக்கவே புதுமுகம் தேடினார்.

பல மாதத் தேடலின் பின்னர் ஒரு புது முகம் கிடைத்தார். இளம் வயதான அந்தப் பெண் ஒளிப்பதிவாளரது பழைய காதலி நடிகை போன்றே இருந்தார். நிறமும் கறுப்பு.

கறுப்பான பெண்களில் அந்த ஒளிப்பதிவாளருக்கு பிடிப்பு அதிகம். கிடைத்த புதுமுகத்திற்கு படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தால், எதற்கும் தயார்.

அந்த ஒளிப்பதிவாளருக்கு மகள் போன்ற வயதில் இருந்தார் புதுமுகம்.

அப்படியிருந்தும் தனியாக ஒரு வீடுபிடித்து, அங்கு தன்னுடன் தங்க வைத்துக்கொண்டார் அந்த ஒளிப்பதிவாளர்.

## அறிமுகம்

ஒரு சில படங்களில் நடித்ததுமே அந்த புது முகத்திற்கு பலர் அறிமுகமானார்கள்.

அவர்களில் இளம் நடிகரும் ஒருவர். பிள்ளையாரது மறுபெயர் கொண்ட அந்த நடிகருடன் ஒரு இரவு தனியாக தங்கினார் நடிகை.

பின்னர் தினமும் நடிகைக்கு அந்த உறவு தேவைப்பட்டது. ஒளிப்பதிவாளரால் தன் இளமை வேகதத்துக்கு ஈடு கொடுக்க முடியாது என்று கண்டு கொண்ட நடிகை, இளம் நடிகரையே நாடினார்.

கட்டுப்படுத்த முயன்ற ஒளிப்பதிவாளரை நடிகை மிரட்டினார். 'என்னை தற்கொலைக்கு தூண்டுவதாக பொலிசில் புகார் செய்வேன். ஏற்கனவே ஒரு தற்கொலை தொடர்பாக உங்கள்மீது சந்தேகம் இருப்பதை மறக்க வேண்டாம்.' என்று நெத்தியடி கொடுத்தார்.

அத்தோடு உறவு முறிந்தது. ஒளிப்பதிவாளர் ஏற்பாடு செய்து கொடுத்த வீட்டை விட்டு வெளியேறினார் நடிகை.

அதன் பின்னர் சிறிது காலம் அந்த நடிகரின் கவனிப்பில் இருந்தார். தற்போது பிரபல தயாரிப்பாளர் ஒருவரது அன்பில் சிக்கி, அவரது படத்திலும் நடித்து வருகிறார்.

***

## துரத்தல்

தயாரிப்பாளர் ஒருவரது பேத்தி முறையானவர் அந்த நடிகை.அந்த நடிகை பற்றி கோடம்பாக்கம் சினிமாவட்டாரத்தில் கிசுகிசுக்கப்படும் சமாச்சாரம் கொஞ்சம் விவகாரமானது.

ஒரு சில படங்களில் மட்டுமே தலைகாட்டிய அந்த நடிகைக்கு நடிகைகள் மீதுதான் ஈடுபாடு.

தன் செல்வாக்கால் நடிக்க வ[...] பெற்றுத் தருவதாகக் கூறி சில [...] களை வசியம் பண்ணியுள்ளா[...]

இந்த நடிகையிடம் அ[...] பட்ட சில நடிகைகள், இ[...] கண்டாலே ஓட்டம் பிடிக்கிற[...]

இரண்டெழுத்து நடி[...] பைத்தியமாக அலைந்தார் [...] பேத்தி நடிகை. மலரின் [...] கொண்ட அந்த நடிகை [...] எதார்த்தமாக பழகினாராம்[...]

பேத்தி நடிகையின் போக்[...] நடவடிக்கைகளிலும் வித்தி[...] தெரிந்ததால் நடிகை உஷாரா[...] இரண்டு எழுத்து நடி[...] உதடுகள் பற்றியும் பேத்தி [...] குழைந்து பேசினாராம். படப்[...] ஒன்றில் பலர் முன்பாகவே அ[...] பேத்தி நடிகை பேச, கதிக[...] போன நடிகை அன்றோடு [...] போட்டுவிட்டாராம்.

## உயிர்த்தோழிகள்

'டைம்' படத்தில் பிரபுதேவா ஜோடியாக சிம்ரான், ராதிகா சவுத்ரி நடிக்கின்றனர். இப்படத்தில் நடிக்கும்போது சிம்ரானும், ராதிகா சவுத்ரியும் உயிர்த்தோழிகளாகிவிட்டனர்.

இருவருக்கும் மும்பாய்தான் பிறந்த இடம். அதுதான் உறவு தழைத்திருக்கிறது.

சிம்ரானின் மனேஜர் அருண்தான் இப்போது ராதிகாவின் மனேஜராகவும் இருக்கிறார். கொடுத்து உதவியவர் சிம்ரான்தான்.

## அழகியின் காத[...]

உலக அழகி ஐஸ்வர்யா ரா[...] போது நெருங்கிப் பழகுவது [...] பட இயக்குநர் சுபாஸ்கையுட[...]

இந்திப் பட உலகில் மு[...] இயக்குநர்களில் ஒருவர் சுபா[...] அவர் கை பட்டு முன்னணிக்[...] நடிகைகள் பலர்.

இப்போது அவர் கைர[...] நம்பி, அவரது கைக்கு வா[...] கொடுத்திருப்பவர் ஐஸ்வர்யா[...]

தனது பிறந்தநாளை இ[...] சுபாஸ்கையுடன் மட்டுமே த[...] மில் கொண்டாடி களிப்புற்றார்[...] பூட்டினார் ஐஸ்வர்யா ராய்.



அஜித்குமார்-தேவயானி படம் தொடரும்



கரிஷ்மா கபூர்



எதிரில் நின்றபோது மனதை பந்தாடும் மாது

மனிஷா கொய்ராலா படம்: முதல்வன்

## முன்னணியில் மூவர்

பிரசாந்துக்கு இது அடை மழைக் காலம். வரிசையாகப் படங்கள். எல்லாம் 'ஜீன்ஸ்' ஷங்கரின் மோதிரக் கையால் குட்டுபட்ட ராசி.

'டைம்' படத்தில்கூட பிரசாந்த்தான் நடிப்பதாக இருந்தது. அவர் பின்னால் அலைந்து வெறுத்துப் போனதால் இயக்குநர் பிரபுதேவாவை நாடினார்.

தமிழ்த் திரையுலகில் இப்போது முன்வரிசை இளம் நாயகர்கள் மூன்று பேர்.

விஜய், பிரசாந்த், அஜித்குமார்.

இந்த மூவருக்கும் ஒரு பொது ஒற்றுமை இருக்கிறது. மூவருமே இடைநடுவே வீழ்ச்சியைச் சந்தித்தவர்கள்.

## நாயகி ராணி

'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தின் மிகப் பெரிய வெற்றியால் இயக்குநர் எழில் உச்சிக்குப் போய்விட்டார். அவர் அடுத்து இயக்கப் போகும் படத்தின் கதை தயார்.

அப்படத்தில் கதாநாயகி மட்டும் முடிவாகியுள்ளார். மும்பை கவர்ச்சிப் புயல் ராணி முகர்ஜிதான் கதாநாயகி. கதாநாயகன் மற்றும் படப்பெயர் இன்னமும் முடிவாகவில்லை.

## தபு அக்கா-ஐஸ்வர்யா தங்கை
### இந்த ஆண்டின் பிரமாண்ட படம்

தமிழ்த் திரையுலகில் தற்போது பரபரப்பாக பேசப்படும் படம், 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்'.

மின்சாரக் கனவு இயக்குநர் ராஜீவ் மேனன் இயக்கும் படம். மம்முட்டி, அப்பாஸ், அஜித்குமார் ஆகியோர் கதாநாயகர்கள். ஐஸ்வர்யா ராய், தபு இருவரும் கதாநாயகிகள். இது ஏற்கனவே நாம் வெளியிட்ட செய்தி.

புதிதாகக் கிடைத்துள்ள செய்திகள் என்னவென்று பார்க்கலாமா?

ஐஸ்வர்யா ராய், தபு இருவரும் அக்கா தங்கை. தபு அக்கா. ஐஸ்வர்யா ராய் தங்கை. இவர்களது கடைக்குட்டித் தங்கையாக ஷாமிலி நடிக்கிறார். அஞ்சலி படத்தின் மூலம் குட்டிப் பாப்பாவாக நெஞ்சத்தை கிள்ளியவர் ஷாமிலி. இப்போது குமரிப் பெண்ணாகிவிட்டார்.

சினிமா உலகப் பக்கமே தலை வைத்து படுக்க விரும்பாத பிரபலங்கள் சிலரையும் நடிக்க வைத்திருக்கிறார்கள். பிரபல நடனக் கலைஞர் அனிதா ரத்னம் ஐஸ்வர்யா ராயின் மாமியாராக நடிக்கிறார். அஜித்குமாரின் அப்பாவாக டாக்டர் மாத்ருபூதம் நடிக்கிறார்.

படத்தில் இரண்டு ஜோடிகளது காதல் கதை இடம்பெறுகிறது. அஜித், அப்பாஸ், தபு, ஐஸ்வர்யாராய் காதல் ஜோடிகள்.

தெலுங்கு படவுலக பிரபல கதாநாயகன் சக்கரவர்த்தியும் இப் படத்தில் நடிக்கிறார்.

ஆங்கிலப் படப்பாணியில் தயாராகும் இப்படம் இந்த ஆண்டின் பிரமாண்டமான படமாக இருக்கப்போகிறது.

இப்படத்தின் இயக்குநர் ராஜீவ்மேனன் அழகான வாலிபர். மணிரத்னத்தின் 'ரோஜா' படத்தில் இவரைத்தான் கதாநாயகனாக நடிக்க வைக்க விரும்பினார் மணிரத்னம். இவர் மறுத்துவிட்டார். பின்னர் மணிரத்னத்தின் 'பம்பாய்' படத்தில் ஒளிப்பதிவாளராக அசத்தினார். மின்சாரக் கனவு' படத்தில் இயக்குநராக வெற்றி உலா வந்தார்.

இப்போது அடுத்த பெரும் வாய்ப்பு. கலைப்புலி தாணு தயாரிக்கும் படம் என்பதால் விளம்பரமும் பிய்த்து உதறும். படப்பிடிப்பு பாதி முடிவுற்றுவிட்டது.

## சினிமா விமர்சனம்
### அடிதடி அரவிந்தசாமி

படம்: 'என் சுவாசக் காற்றே'

நடிப்பு: அரவிந்தசாமி, இஷா கோபிகர், பிரகாஷ்ராஜ், ரகுவரன், வடிவேலு.

இயக்கம்: கே.எஸ். ரவி

இசை: ஏ.ஆர்.ரகுமான்.

ஒளி ஓவியம்: ஆர்தர் வில்சன்

நீண்டகாலத் தயாரிப்பில் இருந்து தற்போதுதான் வெளியாகியுள்ளது. நம்நாட்டில் வீடியோ மற்றும் சீ.டியில் பார்க்கலாம்.

ரகுவரனின் பிள்ளை பிரகாஷ்ராஜ். வளர்ப்பு மகன் அரவிந்தசாமி. பிரகாஷ்ராஜ் கொள்ளை, கொலை, ஆசாமி. ரகுவரனை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிமிரட்டி அரவிந்தசாமியை தன் விருப்பம் போல கொள்ளைகளில் ஈடுபடுத்துகிறார்.

இதற்கிடையே அரவிந்தசாமி, இஷா கோபிகர் காதல் வளர்கிறது. அரவிந்தசாமி திருந்த பிரகாஷ்ராஜ் சீறுகிறார். காதல், மோதல், சோகம் என்று போய் இறுதியில் பிரகாஷ்ராஜை அரவிந்தசாமியும், இஷா கோபிகரும் சுட்டுத் தள்ளுகிறார்கள்.

காதல் நாயகனான அரவிந்தசாமி தமிழில் முதன் முதலில் அடிதடி கலந்த கதாநாயகனாக நடித்துள்ளார். அவரது ரசிகைகள் ஏற்பார்களா என்று தெரியவில்லை.

இஷா கோபிகருக்கு இது முதல் படம்.'காதல் கவிதை' படத்தில் இரண்டாவதாக ஒப்பந்தமாகி முதலில் வெளிவந்துவிட்டது.

அறிமுகம் என்பதே தெரியாதளவுக்கு காதல் காட்சிகளில் இயல்பாக நடித்துள்ளார் இஷா.

ரகுவரனை பின்பற்றி நடிப்பவர் என்று பிரகாஷ்ராஜ் பற்றி விமர்சனங்கள் உண்டு. இருவரும் அப்பா மகனாக நடித்திருப்பது நல்ல பொருத்தம். ஆனாலும் பிரகாஷ்ராஜுக்குத்தான் நடிக்க அதிக வாய்ப்பு.

வடிவேலு, சின்னி ஜெயந்த் நகைச்சுவையும் இருக்கிறது. பாடல் காட்சிகளில் ஒளிப்பதிவை ரசிக்கலாம். பாடல்கள்: வைரமுத்து, வாலி.

இயக்குநர் கே.எஸ்.ரவி, இதற்கு முன்னர் 'மிஸ்டர் ரோமியோ' போன்ற படங்களை இயக்கியவர். முன்னேற்றம் தெரிகிறது.

பிரமாதம் என்று சொல்வதற்கில்லை. அதற்காக மோசமும் இல்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட ரகம். அரவிந்தசாமி இதில் அடிதடி சாமி.

## பெருமை

'பெரியண்ணா', 'மனம் விரும்புதே உன்னை', 'ஆனந்தப் பூங்காற்றே', 'ரிதம்', வாட்டக்குடி இரணியன்' போன்ற படங்களில் நடித்து வருகிறார் மீனா.

சர்வதேச திரைப்படவிழாவை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்ததை பெருமையாகக் கருதுகிறார்.

## சன் மதிப்பீடு

தமிழக 'சன் ரி.வி'யில் 'டாப் 10' என்றொரு நிகழ்ச்சி ஒளிபரப்பாவதுண்டு. இங்கு அது சக்தி ரி.வியில் ஒளிபரப்பாகிறது.

இதில் முதல் பத்து இடத்தைப் பிடித்த படங்கள் இடம்பெறும். ஆனால் இவை எந்த அடிப்படையில் தர நிர்ணயம் செய்யப்படுகின்றன என்பது தெரியவில்லை.

தமிழக திரையரங்குகளில் இருந்து ஐம்பது நாட்களுக்கு முன்னரே தூக்கப்பட்டுவிட்ட படம் 'மன்னவரு சின்னவரு' படமும் பப்படம்தான். அதே படம் 'சன் பாப் 10' இல் இரண்டாம் இடத்தை பல வாரங்களாக பிடித்திருந்தது.

## ஒரே வெட்[...]

'காமா' படத்[...] பார்த்த தணிக்கைக் [...] வுக்கு பயங்கர அதி[...] யாம். நிர்வாணக் கு[...] பாலாபிஷேகம், தேனா[...] கம் என்று பயங்கர கிளு[...]

இது போதாது [...] குரு சிஷ்யர்கள் நட[...] கேளிக்கைகள். கத்த[...] எடுத்து ஆறு, ஏழு ரீல்[...] வெட்டித் தள்ளி விட்[...]

வெட்டிய ரீல்க[...] நியாயம் கேட்டு நிற்[...] இயக்குநர் அசோக்கு[...]



படிப்பகம்

www.padippakam.com

# நக்மாவும் மாயாவும்

'மாயா' படம் தமிழிலும், தெலுங்கிலும் வெளியானது. 'கம்பியூட்டர் கிராபிக்ஸ்' எனப்படும் கணனி தொழில் நுட்ப சாகசத்தை நம்பி எடுக்கப்பட்ட படம். குழந்தைகளை ஓரளவு கவர்ந்தது. ஆனாலும் படம் தோல்வியில் கவிழ்ந்தது.

'மாயா' தோல்வியால் இந்திக்கு சென்றுள்ளார் நக்மா. 'இன்று போய் நாளை வா' படம் இந்தியில் தயாராகிறது. தமிழில் பாக்யராஜ் இயக்கி நடித்த படம். இந்தியில் அப்பாஸ் கதாநாயகன். அவருக்கு ஜோடி நக்மா.

இந்தியில் அந்தப் படம் தோல்வி கண்டால், அங்கும் நக்மாவிடமே 'இன்று போய் நாளைவா' என்று கூறிவிடுவார்கள்.


சாய்குமார்-விஜயசாந்தி
படம்: தளபதி கோட்டை

# மினி சினி

* 'சொல்லாமலே' வெற்றிப்படத்தை இயக்கிய சசி, அடுத்து இயக்கும் படத்தில் நாகார்ஜுனா கதாநாயகனாக நடிக்கிறார்.
* 'பர்தேஷ்' இந்திப் படத்தில் அறிமுகமான மகிமா சௌத்திரி முதன் முறையாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.
* 'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்' என்னும் புதிய படத்தை மதன் என்பவர் இயக்கவுள்ளார். இவர் ஏற்கனவே ஜெய பிரகாஷ் என்ற பெயரில் 'சாதிசனம்' படத்தை இயக்கியவர்.
* அஜித்குமார்-ஷாலினி ஜோடியாக நடிக்கும் 'அமர்க்களம்' படத்திற்காக திரையரங்கு ஒன்றிற்குள் ஒரு வாரமாக படப்பிடிப்புக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.
* ரோஜா-தேவயாணி-ப்ரியா ராமன் ஆகிய மூவரும் 'புதுமைப்பித்தன்' படத்தில் ஒன்றாக நடித்தார்கள். தற்போது இம்மூவரும் 'மக்கள் நண்பன்' படத்தில் மறுபடி ஒன்றாக நடிக்கப் போகிறார்கள்.
* அருண்குமார்-சுவலட்சுமி ஜோடியாக நடிக்கும் 'கண்ணால் பேசவா' படத்தில் நகைச்சுவை வேடத்தில் கவுண்டமணி நடிக்கிறார். படத்தில் இவரது பெயர் கிளின்டன்.
* 'காதல் படுத்தும் பாடு' படத்தின் மூலம் எஸ்.எஸ்.சந்திரனின் மகன் கதாநாயகனாக அறிமுகமாகிறார். முரளி என்ற இவரது இயற் பெயர் சினிமாவுக்காக ரோஹித் என்று மாற்றப்பட்டுள்ளது.
* 'கல்கி' பட நாயகி ஸ்ருதி திருமணத்திற்குப் பின் 'துர்க்கா சக்தி' என்ற படத்தில் நடிக்கிறார். இதில் அவருக்கு நான்கு வேடங்கள்
* 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தை இயக்கிய ரவிச்சந்திரன் அடுத்து கார்த்திக் நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இதில் கார்த்திக் ஜோடியாக இஷா கோபிகர் நடிக்கவுள்ளார்.
* வினீத்-ப்ரீதா விஜயகுமார் தெலுங்கில் நடித்த 'ருக்மணி கல்யாணம்' தமிழில் மொழி மாற்றப்பட்டு 'காதல் சங்கம்' என்று பெயரிடப்பட்டது. தற்போது இதன் பெயர் 'நந்தவனப் பூவே' என்று மாற்றப்பட்டுள்ளது.

# காதோடு சொல்லுகிறோம்

'பூ' நடிகைக்கு பிறந்த குழந்தை அநாதை ஆச்சிரமத்தில் வளர்வதாக புரளி கிளம்பியது. அது அடங்கியதும், இன்னொரு கதை: மூன்றெழுத்து 'கி' நடிகருக்கும், ரோஷமான நடி கைக்கும் பிறந்த குழந்தை அநாதை ஆசிர மத்தில் வளர்கிறதாம். இதுவும் புரளிதானோ?!

இலங்கைத் திருநாட்டின் தலைநகரில் கொடுக்கப்பட்ட வரவேற்பால் புல்லரித்துப் போனாராம். 'பூ' நடிகை. 'கலைச் சேவையை' நன்கு நடத்திவிட்டு திரும்பிப் போயிருக்கிறார்.

நகைச்சுவை மணிக்கு இப்போது வாய்ப்புக்கள் குறைந்துள்ளன. புதியவர்கள் கலக்கத் தொடங்கிவிட்டனர். விசித்ரமான நடிகைக்கு தூதுவிட்டார் மணி. அவர் இன்னொரு வண்ணமான மணியுடன் ஐக்கியமாகிவிட்டார். அதனால் தூது ஏற்கப்படவில்லை. "மீண்டும் என் மவுசு உயரும். அப்போது பார்த்துக் கொள்கிறேன்" என்று பொருமுகிறார் மணி.

**முகப்பில்** | பிரசாந்த், ரம்பா
படம்: 'பூமகள் ஊர்வலம்'

# கீழ்நாட்டு கிளியோபாட்ரா

'நான் கீழ்நாட்டு கிளியோபாட்ரா கிட்ட ந்து பழகு' என்று தொடங்கும் பாடலை கட்டிருப்பீர்கள். வானொலிகள் மூலம் ம்நாட்டிலும் பிரபலமாகிவிட்ட பாடல்.

'கோடீஸ்வரன்' படத்தில் இடம்பெறும் ப்பாடலுக்கு ஆடி அசத்தியிருப்பவர் ஷ்மா கபூர். சித்திரைப் புத்தாண்டுக்கு டீஸ்வரன் வெளியாகும் என்று எதிர் க்கப்படுகிறது. இடையே சில படங்களின் ல்வியால் தயாரிப்பாளர் குஞ்சுமோன் ந்து போயிருந்தார். பணமுடை. என்றென்றும் காதல்' படத்தின் னை விநியோகஸ்தரும் அவர்தான். டத்தை ஒண்ணேகால் கோடிக்கு வாங் ஸ்.ஏ. சந்திரசேகரன் இரண்டரைக் க்கு குஞ்சுமோனுக்கு கொடுத்தார். மின் 'நிலாவே வா' தோல்வியால் போன குஞ்சுமோன், 'என்றென்றும் படத்தின் விலையை குறைக்குமாறு ர். அதனால் பிரச்சனையாகியது. நரம் பார்த்து 'துள்ளாத மனமும் துள்ளும்' வெளியாகி வெற்றி நடை போட்டது. மறுபேச்சின்றி முதலில் ஒப்புக்கொண்ட தொகையை கொடுத்து படத்தை வாங்கினார் குஞ்சுமோன்.

'என்றென்றும் காதல்' தற்போது வெளியாகிவிட்டது. இதில் கிடைக்கும் இலாபத்தை வைத்து 'கோடீஸ்வரன்' பட மீதி வேலையை முடிக்கப்போகிறார்.



நெப்போலியன்-நக்மா
படம்: மாயா


ராணி முகர்ஜி

# குஷ்புவுக்கு குழந்தை உண்டா?

## தமிழக சஞ்சிகை கிளப்பிய சர்ச்சை

தமிழக வார இதழ் ஒன்றில் பரபரப்பான கிசு கிசு ஒன்று வெளியானது.

நடிகை குஷ்புவுக்கும் பிரபுவுக்கும் பிறந்த குழந்தை ஒன்று அனாதை ஆசிரமத்தில் வளர்ந்து வருவதாக மறைமுகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

திட்டமிட்டு பரப்பப்பட்ட வதந்தியாம் அது. பிரபு குஷ்பு இருவரும் இணைந்து வாழ்ந்தது உண்மை. ஆனால் அக் காலகட்டத்தில் இருவருமே பிஸியாக நடித்துக் கொண்டிருந்தனர்.

கர்ப்பமாகியிருந்தால் நடித்திருக்க முடியாது. நடித்தாலும் காட்டிக் கொடுத்திருக்கும். குஷ்பு ஓய்வின்றி தொடர்ந்து நடித்தே வருகிறார். இடையே சிறு சரிவு ஏற்பட்டபோதும் நடித்துக் கொண்டுதான் இருந்தார்.

எனவே, குஷ்புவுக்கு பிள்ளை இருக்குமானால் கர்ப்பமாகாமல் பிள்ளை பெற்றிருக்க வேண்டும் என்று கிண்டலாக பதில் சொல்கிறது குஷ்பு வட்டாரம்.

முன்பு ஜெயலலிதா பிரபல நடிகையாக இருந்தபோதும் இதே போன்ற கதை கட்டிவிடப்பட்டது. பின்னர் அது பொய் என்பது தெரிந்துபோனது. அதைப் போன்ற கற்பனைக் கதைதான் இதுவும்.

அதுமட்டுமல்ல, குஷ்பு தன் பிள்ளையை இரகசியமாக வளர்ப்பது என்றால் எத்தனையோ வழிகள் உள்ளன. அநாதை ஆசிரமத்தில் விட்டு வளர்ப்பானேன்? என்றும் கேட்கிறார்கள்.

# கமலின் ஹே ராம்

## ஜோடி மும்பாய் நாயகி

மருதநாயகத்தை இடைநிறுத்திவிட்டு கமல் சொந்தமாக இன்னொரு படம் எடுக்கப்போகிறார் என்று பல வாரங்களுக்கு முன்னரே செய்தி வெளியிட்டிருந்தோம் அல்லவா.

இப்போது படத்திற்கு பெயரும் சூட்டிவிட்டார். 'ஹே ராம்' என்பதுதான் படத்தின் பெயர்.

மகாத்மா காந்தி கோட்சேயினால் சுடப்பட்டு இறக்கும் தறுவாயில் உச்சரித்த வார்த்தை 'ஹே ராம்'.

மகாத்மா காந்தியின் வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டத்தில் நடக்கும் கதையாம். அக்காலகட்ட ந்கவல்களை திரட்டி கதை எழுதியுள்ளார் கமல்.

காந்தியாக இந்தி நடிகர் நஸ்ருதீன் ஷா நடிக்கிறார். இவர் 'காந்தி' மேடை நாடகத்தில் காந்தியாக நடித்தவர்.

கமலுக்கு பிராமண இளைஞர் பாத்திரம் கமலின் ஜோடியாக இந்தி நடிகை ராணி முகர்ஜி நடிக்கிறார். அவரைத் தெரியாதவர்கள் இங்கு ஜோராக வெளியாகியுள்ள படத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம்.

இந்தியில் 'குச் குச் ஹோத்தா ஹை' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்தவர் ராணி முகர்ஜி. அப்படம் சென்ற ஆண்டின் படுவெற்றிப் படங்களில் ஒன்று.

'ஹே ராம்' படத்திற்கு இசை சுப்ரமணியம். பாடல்கள்: வாலி. ஒளிப்பதிவு: திருநாவுக்கரசு. கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: கமலஹாசன்.


படிப்பகம்

www.padippakam.com

## என் வாழ்வில் நீயும்

**கண்ணீரானாய்**

உயிரின் உயிரே!
தாங்க முடியாத
வேதனையின் தாக்குதலால்
கன்னங்களினூடே
கண்ணீர் வழிந்தோட
எந்த தேசத்திலோ
நிலைத்திருக்கும்
உனக்காக எழுதுகிறேன்!
-0-
கணப்பொழுதுக்கும் மறையாமல்
நினைவில் நிற்கும் வலி
நெஞ்சைப் பிழிகிறது!
துயரக் காற்று
நிம்மதியைப்
பொடிப் பொடியாக்கி
காற்றிலே எறிகிறது!
-0-
உனைக் கண்கள் தரிசித்த
உவகை நிரம்பிய பொழுதுகளில்
என்னையறியாமலேயே
எழுந்து துடித்த
அன்பும் பாசமும்
என்னுள்ளே
அச்சத்தின் சேதியை
மெல்லச் சொல்லியது!
-0-
தூரதேச மொன்றிலிருந்து-நீ
அன்பைச் சொன்ன
வேளைகளிலெல்லாம்
என்னுள்ளம்
ஆனந்தக் கூத்தாடியது!
-0-
அன்பின் அன்பே!
வரவேற்புக்காகவும்
அதன் பின்
வாழ்த்துச் சொல்லவும்
உன் வலிய கரங்களுக்குள்
எனது கரம் உள்ளடங்கி
ஆத்மாவில் பொங்கிய
அன்பைச் சொன்ன
நாட்களின் நினைவுகள்
இதயத்தின் காயங்களைப்
பூக்களால் தடவுகின்றன!
-0-
உனது பார்வை
பாசத்தைத் சுமந்து
என்மீது விழுந்த கணங்களில்
விடைபெறுதலின்
ஏற்க முடியாத சுமையோடு
நிலத்தை வெறித்து
உன்னெதிரில் ஊமையான
பொழுதுகள்
எண்ணங்களில் இடறுகின்றன!
-0-
நேசத்துக்குரியவனே!
உனது கனவுகளும்
வாழ்வின் நம்பிக்கைகளும்
தரைமீது சிதறிய பின்னர்
தொலைதூரம் செல்ல
நீ எடுத்த தீர்மானம்-
உனது துயரங்களுக்கெல்லாம்
தீர்ப்புகளைத் தந்ததா?
-0-
உனைச் சுமந்த விமானம்
ஆகாயப் பரப்பினிலே
புள்ளியாய் மறைந்தபோது
இந்த தேசத்தில்
நீ விட்டுச் சென்ற
ஈடுசெய்ய முடியாத
வெற்றிடத்தின் வேதனையை
அறிவாயா மகானே?

பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## தேன் கிண்ணம்

## போரும் ஒரு கவிஞனும்

ஒரு மனிதன் எழுதிய
கவிதையினை நேற்றுநான்
வாசித்தேன்...

கருப்பொருளின் விசைக்காம்புகளில்
மானுட அலறல்களின் துயரினை
மெல்லிய கண்ணீரால் வடித்தெழுதி
துடிக்கும் உள்ளக் கொதிப்புகளை
தொடராய் எழுதிச் செல்கின்றான்.

கூடி எரிந்த குடிசைகளை- தூக்கம்
கலைக்கும் இரவுகளை-கொதிநீர்
சுட்ட பெரும புண்ணாய் புலரும்
வருகைச் சோகங்களை-'போர்'
என்ற மனிதம்பேசும் சொல்கொண்டு
விரல்கள் தொட்டு...
யதார்த்தம் எழுதி...
சுழலும் நெஞ்ச சுவாசிப்பினை
கவியால் அணைத்து தொட்டெழுதி
நேற்றைய நாளை மறக்காமல்
இன்றுள்ள கதைகளை சொல்கின்றான்.

நினைவு என்ற இருப்பிடத்தில்
நிறைந்துவிட்ட கல்லறைகள்
வாலிபங்கள் மீது போடப்படுகின்ற
கரும்பாறைகள்- மனசு வளர்த்த
எரிமலைகள், இப்படி ஒவ்வொன்றும்
அனுத்தீயாய் எரித்தபோது அவன்
கவிதைகளை அமைதி கொண்டு
மூடியது நாளையின் கைகள்!

ஆம் போர் முடிந்தாலே
கவிஞனுக்கும் அமைதி வரும்!

உவைஸ்கனி.

## அடைகாக்க முடியாத அந்தரங்கங்கள்

மௌனத்துக்குள் ஒரு
பூகம்பம் சுழல்கிறது;
எல்லாம் அன்னியமாய்
சிந்தனை வேர்கள்
பாறிப்போய்விட்டன.
**
என் பூமியோடான
உறவுகள் வலிந்து
நிற்கின்றன.
உதிருகின்ற உயிர்களை
காப்பதும் ஏற்பதும் யார்?
**
இரத்த ஆடைகளால்
என் தேசத்து தாயை
எத்தனை நாட்களுக்குத்தான்
குளிப்பாட்டப் போகிறீர்கள்?
**
வெற்றி யாருக்கு வேண்டும்?
என் தேசம் சந்தோஷப்பட்டு
எத்தனை வருஷங்கள்?
**
மனிதர்கள் இல்லாத மண்ணை
எந்த மன்னர்கள்
ஆளப் போகிறீர்கள்?
அமைதிச் சுவடுகளை
அழித்து விட்டு எந்த
ராஜ்ஜியத்துக்கு
பட்டாபிஷேகம் செய்விப்பதும்
ஆர்ப்பரிப்பதும்....?
**
கொலை...! கொலை...! கொலை...!
என்ன இது?
இதுவா என் தேசத்தின்
வேதம?
**
அன்னியப்பட்டுப்போன
இனங்களிடையே
ஒற்றுமை தூவ
எவருக்குமே சக்தியில்லையா?
**
அன்பு மிளிர ஒரு
ஒற்றுமைப் பூமியில்
வாழ ஆசை!
ஆனாலும்
மௌனத்துக்குள் ஒரு
பூகம்பம் சுழலகிறது;
எல்லாம் அன்னியமாய்
சிந்தனை வேர்கள
பாறிப் போய் விட்டனவே!

ஹரீரா அனஸ்-
இலண்டன்.





இது நிழல் காட்சியல்ல; நிஜககாட்சி. கணவா ராஜ்குமாருடன.



நாட்டியச் சிறுமியாக

## அந்த நாள் ஞாபகம்

சிவாஜி, ரஜினி, கமல் போன்ற தமிழ்த் திரையுலக முன்னணி நடிகர்களோடு ஜோடியாக நடித்து, பரபரப்பாகப் பேசப்பட்ட நடிகை ஸ்ரீப்ரியா- இங்கு பலவிதமாக தோற்றம் தருபவர் அவர்தான். நேற்றைய கனவுக்கன்னி. இன்று குடும்பத் தலைவி.



ரஜினியோடு

## பேனா நண்பர்கள்



**பெயர்:** எம். இஸ்திபார்,
**வயது:** 24
**முகவரி:** 315, காலி வீதி, கொழும்பு-4.
**பொழுது போக்கு:** வழமையானவை.



**பெயர்:** ஏ. டயானா,
**வயது:** 23
**முகவரி:** விஜயதாஸ் வீட்டுத் திட்டம், 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு.
**பொழுது போக்கு:** வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

**ஜோதிடர் 'கானா'**

**21.03.99** முதல் **27.03.99**வரை

### மேடம்:
சனி ஜன்ம வீட்டில் இருப்பதுவும் குரு 12ல் மறைந்து ஆட்சி செலுத்துவதும் குடும் பத்தில் மனக்குழப் பத்தையும், செல வீனங்களையும் கொடுக்கலாம். வார நடுப்பகுதியில் பண வருமானம், உறவினர் சந்திப்பு ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள் எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 24, 27

### இடபம்:
நற்பலன்களை ஓரளவு பெறக்கூடிய வாரம். பணவருவாய், உறவினர்கள் சந்திப்பு, கல்வி வளர்ச்சி, மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 23, 25.

### மிதுனம்:
கிரக நிலைப்படி நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். சனி 11ம் இடத்திலுள்ளதால் தொழில் விருத்தி, தடைப்பட்ட திருமணம் நடைபெற வாய்ப்பு; உறவினர்கள் உதவியும் வருகையும் ஏற்படும், நற்கருமங்கள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள், எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

### கடகம்:
உடலில் சற்று நோய் துன்பங்களும் அவ்வப்போது மன நிம்மதி இன்மையும் ஏற்பட இடமுண்டு. தூர இடத்தில் இருந்து நற்செய்தி கிட்டும், சகோதரர் உதவி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம். எண்: 6
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

### சிம்மம்:
நற்பலன்கள் கிட்டும். தடைப்பட்ட வெளிநாட்டுப் பிரயாணங்கள் கைகூடும். குடும்பத்தில் முயற்சி, வேகம், செயல்பாடு என்பன அதிகரிக்கும். பண வருவாய், உதவிகள் கிடைக்கும். காதலர்கள் சந்திப்பு ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை. எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 23, 24

### கன்னி:
மனக்குழப்பம் உள்ள வாரம். சனி 8ல் உள்ளதும் கிரக நிலைகள் மாற்றம், அடைவதும் உறவினர்கள் இடையேபிரச்சனை கருத்து மோதல், பொருள் நட்டம், குடும்ப அவமானம் ஆகியன ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு, எண் : 2
அதிஷ்ட திகதிகள் : 25, 27.

### துலாம்:
கிரக நிலைப்படி நல்ல வாரமாக அமையும். தடைப்பட்ட வாழ்க்கைப் பலன் கிடைக்கும். பண வருமானம், சகோதரர் உதவி, கல்வி, தொழில் வளர்ச்சி, தடைப்பட்ட காதல், குடும்ப வாழ்க்கை சந்தோஷத்தை ஏற்படுத்தும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : கறுப்பு, எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

### விருட்சிகம்:
தொழில் விருத்தி, தடைப்பட்ட கருமங்கள் கைகூடுதல். குடும்பத்தில் மகிழ்ச்சி, உறவினர்கள் சந்திப்பு, சனி 6லும் குரு 5லும் இருப்பதால் காரியம் கைகூடும், வெற்றிகள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: நீலம், எண் : 9
அதிஷ்ட திகதிகள் : 21, 27

### தனுசு:
சுமாரான பலன்கள். தொழில் சீராக நடைபெறும். கல்வி, குடும்ப வளர்ச்சி ஏற்படும். புதிய தொழில் அமையும், தாய்வழி உதவிகள் கிட்டும், உடலில் சற்று ரோகம் ஏற்படலாம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஆரஞ்சு , எண் : 4
அதிஷ்ட திகதிகள் : 22, 25

### மகரம்:
நல்ல பலன்கள் அதிகம் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்பு, குடும்ப விசுவாசம், திருமணப் பேச்சு, தூரத்து உறவினர்கள் நண்பர்கள் உதவி, எடுத்த காரியங்கள் வெற்றிபெறும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம் : ஊதா, எண் : 7
அதிஷ்ட திகதிகள் : 22, 25.

### கும்பம்:
உடலில் நோய் துன்பங்கள் ஏற்படும். பொருள் அழிவு, புதிய திட்டங்கள் கைவிடப்படும். குடும்பத்தில் பிரச்சனைகள் தோன்றும், வழக்கு கணக்குகள் சாதகமாக அமையாது. எதிலும் தாமதம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, புதன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல், எண் : 5
அதிஷ்ட திகதிகள்: 23, 21

### மீனம்:
இந்த வார அமைப்பின்படி 23ம் திகதிக்கு பின் குடும்பம், தொழில் என யாவும் சீர்சிறப் பாக அமையும். தடைப்பட்ட கருமங்கள் நல்ல நிலை அடையும், குடும்ப ஒத்துழைப்பு, நண்பர் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ் நிறம், எண்: 1
அதிஷ்ட திகதிகள் : 23, 27.

## நில்-கவனி-முன்னேறு

உயர்வதற்குப் பிறந்ததே உயிர்கள்.

எந்தச் சக்தி மனிதனைக் கீழே இழுத்தாலும், பணிய வைத்தாலும் அவன் அதற்கு ஈடு கொடுத்தவாறே தன்னை உயர்த்திக் கொள்கிறான்.

ஒரு செடியின் வேரைப் பூமியின் ஈர்ப்புச் சக்தி கீழே இழுக்கிறது. செடியோ, பூமியின் சக்திக்குப் பணிந்தாலும், மேல் நோக்கி வளரும் தன் இலட்சியத்தை விட்டுக் கொடுப்பதில்லை.

உயிரின் நியதி உயர்வதே; அடிமை போல நடந்து கொள்வதால் ஒரு மனிதன் அடிமையாகிவிட்டான் என்று அர்த்தமல்ல. கீழ்ப்பட்டுக் கொண்டிருப்பது போல் தோற்றமளித்தாலும் அவன் உயர்ந்து கொண்டுதானிருக்கிறான்.

காலம் என்பது உயர்வே. ஒரு விநாடியைக் கூட வளராமல் தடுக்க இயலாது.

நாளை என்பது நம்மை உயர்த்துகிறது. தான் உயரவில்லை என நினைப்பவன் தன்னையும் இயற்கையையும் புரிந்து கொள்ளாதவன்.



அனைத்தும் மேல் நோக்கி வளர்கின்றன. உண்ணும் அன்னமும் தண்ணீரும் கீழ் நோக்கி இறங்குகின்றன. ஆனால் அதைச் சக்தியாக்கிக் கொண்டு மனிதன் உயர வளர்கிறான்.

எது மனிதனைக் கீழே இழுத்தாலும் அதை அவன் பயன்படுத்திக் கொண்டு உயர்கிறான்.

இது இயற்கையின் நியதி.


தான் உயரவில்லை, தன் இனம் உயரவில்லை. தன் மக்கள் உயரவில்லை என்று மனிதர் ஒருத்தரை ஒருத்தர் அடித்துக் கொண்டு சாக வேண்டாம்.

ஜீவராசிகளில் அனைத்தும் இயற்கையின் நியதிப்படி வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இதை உணர்கிற மனிதன் திருப்தியோடு உயர்ந்து கொண்டிருக்கிறான். உணராத மனிதன் திருப்தியில்லாமல் உயர்ந்து கொண்டிருக்கிறான்.

பிரகஸ்பதி

## படிமொழிகள்



→ செய்து முடித்தேன்
→ செய்து முடிப்பேன்
→ செய்ய முடியும்
→ செய்ய முடியும் என்று நினைக்கிறேன்
→ செய்யக்கூடும்
→ செய்யக்கூடும் என்று நினைக்கிறேன்
→ செய்யலாம்
→ செய்தால் நன்றாக இருக்கும்
→ எப்படி செய்வதென்று தெரியவில்லை
→ என்னால் முடியாது



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உங்கள் வீட்டுக் குழந்தை



- குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு சமையல் அறை வேலைகளில் தாய் ஈடுபடுவது ஆபத்திற்குரியது. பலகாரங்கள் தயாரித்துக் கொண்டிருக்கும் போதோ, தேனீர் தயாரிக்கும்போதோ இலேசாகத் தடுமாறினால் கூட குழந்தையின் உடலில் பலத்த காயம் ஏற்பட்டுவிடும்.
- கையில் கிடைப்பதை எல்லாம் வாயில் போடும் பழக்கம் குழந்தைகளுக்குண்டு. அவர்கள் கையில் சட்டைப் பொத்தான்கள், சில்லறைக் காசுகள் போன்றவை கிடைத்தாலும் அதனை வாய்க்குள் போடும். அதனால் அவ்வாறான பொருட்கள் குழந்தைகளின் கையில் சிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- குழந்தைகளுக்குக் காயம் ஏற்பட்டு இரத்தம் வெளியேறினால், அந்த இடத்தில் ஐஸ்கட்டிகளை வைப்பது நல்லது. காயத்தைச் சுற்றி அதிகமாக இறுக்கிக் கட்டக் கூடாது.
- குழந்தைகள் தேவையற்ற மாத்திரைகளை விழுங்கி விட்டால் உடனடியாக வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும். அதற்கு உப்புக் கரைசலைக் கொடுக்கலாம். மாத்திரையை விழுங்கிய 45 நிமிட நேரத்திற்குள் வாந்தி எடுத்து விட்டால் ஆபத்து இருக்காது.
- தீக்காயம் ஏற்பட்டால் அந்த இடத்தில் ஐஸ்கட்டி வைக்கவோ, குளிர்ந்த தண்ணீரை ஊற்றவோ செய்யவோ வேண்டும். ஒரு போதும் துணி கொண்டு காயத்தில் அழுத்தக் கூடாது. தீக்காயத்தினால் குமிழ் ஏற்பட்டால் அதை உடைக்கவும் கூடாது.
- வாய், மூக்கில் ஏதாவது பொருட்கள் சிக்கினால் கையால் எடுக்க முயற்சிக்கக் கூடாது. குழந்தையைக் கவிழ்த்துப் போட்டு, பின் பகுதியில் பலமாகத் தட்டினால் பொருள் கீழே விழுந்து விடும். பின்பு டாக்டரிடம் காட்டி சோதனை செய்து கொள்ளுங்கள்.

## பெண்களின் ஆர்வம்



தம்மை மற்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக அடையாளம் கண்டு கொள்வதில் பெண்களுக்கு விருப்பம்? இதோ ஓர் ஆய்வு..

* அன்பானவர்களாக அடையாளம் காணப்பட விரும்புவோர்: 97%
* புத்திசாலிகளாக அடையாளம் காணப்பட விரும்புவோர்: 90%
* கட்டுப்பாடாக வாழ்பவர்களென அடையாளம் காணபட விரும்புவோர்: 88%
* அழகானவர்களாக அடையாளம் காணப்பட விரும்புவோர்: 64%
* சுறுசுறுப்பானவர்களாக அடையாளம் காணப்பட விரும்புவோர்: 59%

## அழகோ அழகு

### உங்களுக்குத் தொந்தி உள்ளதா?



கவலையை விடுங்கள். அன்னாசிப் பழத்தை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி. 4 தேக்கரண்டி ஓமத்தைப் பொடி செய்து, அதில் போட்டு, நன்றாகக் கிளறி, ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க விடவும். இதை இரவில் செய்து வைத்து விட்டு, மறுநாள் காலையில் பிழிந்து சாறு எடுத்து, வெறும் வயிற்றில் குடிக்கவும். 10 நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தால், தொந்தி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

★★★

வெந்தயத்தைத் தண்ணீரில் ஊறவைத்து, அரைத்து தலைக்குத் தேய்த்து, கால் மணிநேரம் ஊறவையுங்கள். பிறகு குளியுங்கள். இப்படி வாரம் இருமுறை தொடர்ந்து செய்து வந்தால் முடி உதிர்வது நிற்கும். கூந்தல் கறுப்பாகவும், பளபளப்பாகவும் இருக்கும்.

★★★

தினமும் இரவில் படுக்கப்போகுமுன் ஒலிவ் எண்ணெயை சிறிதளவு எடுத்து, கண் புருவம், இமை ஆகியவற்றிற்குப் பூசவும். கருகருவென்று, மினுமினுப்பாக இருக்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FK

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27-03-1999

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

79

புவனா



அல் ஃபாயிட்டுடன் டயானா

இதய நோய் பற்றிய ஆராச்சிகளுக்காக நிதி சேகரித்துத்தர விரும்பினார் அல் ஃபாயிட்.

தன்னுடைய 'ஹரோட்ஸ்' ஹோட்டலில் அதற்கான நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

1996 மார்ச்சில் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது டயானாவும் டாக்டர் ஹஸ்னற் கானும் நண்பர்களாக இருந்தனர்.

இதய நோய் நிபுணர் என்பதால் டாக்டர் ஹஸ்னற் கானுக்கும் சிறப்பு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

டயானாவை அங்கு கண்டதும் ஹஸ்னற் கானுக்கு 'ஏனடா இங்கு வந்தோம்?' என்றாகி விட்டது.

டயானாவுக்கும், டாக்டருக்கும் இடையே ஏற்பட்ட நட்பு பத்திரிகை வாயிலாக பிரபலம் என்பதால், பலரது கண்கள் அவர்களையே கவனித்தன.

ஹஸ்னற் கான் நின்றிருந்த பக்கமே தன் பார்வையை செலுத்தாது ஏனையோருடன் டயானா சரளமாக சிரித்துப் பேசினார்.

பிரபல இருதய நோய் நிபுணரான சேர் மாக்டி யாக்கூப் இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அவருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த ஹஸ்னற் கான், தனக்கு பிறிதொரு அலுவல் இருப்பதாகக்கூறிப் புறப்பட்டுச் சென்று விட்டார்.

டாக்டர் ஹஸ்னற் கானுக்கும், டயானாவுக்கும் இடையே முன்புபோல நட்பு கிடையாது என்பதை பறைசாற்றும் நிகழ்ச்சியாகவும் அது மாறியது.

### மனதில் ஆசை

டாக்டருக்கும் டயானாவுக்கும் இடையே அந்த நிகழ்ச்சியில் பேச்சு வார்த்தை எதுவும் நடக்காததை முக்கியமான ஒருவரும் கவனித்தார்.

அவர்தான் அல் ஃபாயிட். டயானாவை சிறுவயது முதல் அறிந்திருந்தாலும் இடையே பல வருடங்கள் தொடர்பே இருக்கவில்லை.

சாள்ஸுடன் உறவை முறித்துக் கொண்ட டயானாவுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும் என்பதால்தான் 'ஹரோட்ஸ்' ஹோட்டல் நிகழ்ச்சிக்கு டயானாவை அழைத்திருந்தார்.

தனது மகனான டோடியையும் அழைத்திருந்தார். ஆனால் அமெரிக்காவில் இருந்து டோடி வந்து சேரவில்லை.

மொடல் அழகி ஒருத்தியோடு டோடி சுற்றுவதாகவும், அவளுக்காகத் தாராளமாக பணத்தை செலவிடுவதாகவும் அல் ஃபாயிட் அறிந்து வைத்திருந்தார்.

'அல்லைட் ஸ்டார்ஸ்' என்ற பெயரில் ஹொலிவூட்டில் சினிமா பட நிறுவனம் ஒன்றை டோடி ஃபயட் வைத்திருந்தார்.

அந்த நிறுவனம் படம் தயாரித்ததைவிட, ஹொலிவூட் நடிகைகளுக்கு பணம் வாரி வழங்கியதுதான் அதிகம்.

ஹொலிவூட்டில் முன்னணியில் எந்த நடிகை இருந்தாலும், அவளை தன் கட்டிலில் பார்க்க ஆசைப்படுவார் டோடி.

அந்த நடிகைகளைவிட அழகான பெண்களை டோடியின் பணத்தால் வாங்கிவிட முடியும்.

ஆனால், நடிகை என்றால் ஒருவிதமான தனி ஈர்ப்பு. திரையில் பலரது கனவுக் கன்னியாக இருப்பவருடன் கட்டிலை பகிர்ந்து கொள்வதில் திமிர்கலந்த கிறக்கம்.

பெரும்புள்ளிகள் நடிகைகளைத் தேடி அலைவது அதற்காகத்தான். டோடி ஃபயட்டுக்கும் நடிகைகள், மொடல் அழகிகள் என்றால் தனி ஈடுபாடு.

எப்படித்தான் பணத்தைச் செலவிட்டாலும், நீர் ஊற்றுமாதிரி பணம் பெருகிக் கொண்டே இருக்கும். டோடி கேட்கும் போதெல்லாம் அல் ஃபாயிட் பணத்தை இறைத்து வந்தார்.

தன் மகனை பணத்தாலேயே கெடுத்துக் கொண்டிருக்கிறோமோ என்று ஒரு கட்டத்தில் அல் ஃபாயிட் கவலையடைந்தார்.

டயானாவை அன்று பார்த்தபோது, தன் மகன் போலவே டயானாவும் தனிமையில் தவிப்பதாக தோன்றியது.

அப்போதுதான் அல் ஃபாயிட்டின் மனதில் அந்த நினைப்புத் தோன்றியது.

தனது மகனையும், டயானாவையும் ஜோடி சேர்த்துப் பார்த்தால் எப்படி இருக்கும்? என்று நினைத்தார்.

## மகனுக்கு ஜோடிதேடிய தந்தை



தனது மகனுக்கு டயானா பொருத்தமான ஜோடியாகவே அவருக்குத் தெரிந்தது.

அரச குடும்ப மருமகளாக இருந்த டயானாவுக்கு, அந்தஸ்த்தில் சற்றுக் குறைந்த குடும்பமல்ல அல் ஃபாயிட் குடும்பம்.

ஆகவே டயானாவை தன்மகனுடன் ஜோடிப்பொருத்தம் பார்க்க ஆரம்பித்தார் அல் ஃபாயிட்.

அன்று நிகழ்ச்சி முடிந்து டயானாவை வழியனுப்பும்போது, "இனிமேல் அடிக்கடி சந்திக்க வேண்டும்!" என்று தன் விருப்பத்தை கூறியனுப்பினார்.

தன் பெற்றோரின் நண்பரான அலி ஃபாயிட்டுடன் வெகு மரியாதையுடன் நடந்து கொண்டார் டயானா.

அல் ஃபாயிட் தன் தொழில் தொடர்பான முக்கிய பணிகளில் ஆழ்ந்து போனதால் 1996 அக்டோபர் வரை டயானாவுடன் தன் மகனை சந்திக்கவைக்கும் திட்டத்தை செயற்படுத்த அவரால் முடியவில்லை.

### சந்திப்பு

1996 அக்டோபரில் ஹரோட்ஸ் ஹோட்டலில் மற்றுமொரு நிகழ்ச்சியில் டயானா கலந்து கொண்டார்.

அதன்பின்னர் அல் ஃபாயிட் வீட்டுக்கு தன் பிள்ளைகளுடன் சென்று வரத் தொடங்கினார்.

அப்போதும் டோடி அமெரிக்காவில்தான் இருந்தார். டயானாவை சந்திக்கும் பொருட்டு அவரை இலண்டனுக்கு அழைத்தார் அல் ஃபாயிட். டோடி ஏனோ அதில் அக்கறை காட்டவில்லை.

1996 டிசம்பரில்தான் டயானா வாழ்க்கையின் கடைசிக்கட்ட திருப்பத்தின் நாயகனாக டோடி இலண்டன் திரும்பினார்.

'இங்லிஷ் தேசிய நாட்டிய நாடக நிறுவனம்' டிசம்பரில் புதிய கட்டடத் திறப்பு விழா ஒன்று நடத்தியது.

திறப்பு விழாவுக்கு டயானா தான் தலைமை ஏற்றிருந்தார். அல் ஃபாயிட் குடும்பத்தினரும் அந்த விழாவில் கலந்து கொண்டனர். அல் ஃபாயிட் தனது நிறுவனம் சார்பாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பவுண் நன்கொடையாக இந் நிறுவனத்துக்கு வழங்கி இருந்தார்.

இதனையடுத்து தனது மாளிகைகளில் ஒன்றான சென்-ட்ரொப்பஸ் மாளிகைக்கு டயானாவையும், அவரது புதல்வர்கள் இருவரையும் விருந்துக்கு அழைத்தார் அல் ஃபாயிட்.

அங்குதான் டோடியும், டயானாவும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர்.



டயானாவுடனும் அவரது புதல்வர்களுடனும் அல் ஃபாமிட்

அதற்கு முன்னரும் ஒரு சில தடவைகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்திருந்தாலும், அன்றுதான் ஒருவரை ஒருவர் கவரத்தக்க சந்திப்பு நிகழ்ந்தது.

டோடியும், டயானாவும் கைகுலுக்கிக் கொண்டனர். இருவரது கண்களும் கலந்தன.

அதனை அல் ஃபாயிட்டின் கண்களும் அர்த்தத்தோடு நோக்கின.

அதன் பின்னர் டயானாவின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## இறத்தோட்டை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | பி. பரமேஸ்வரி,<br>இல.56, பிரதான வீதி.<br>இறத்தோட்டை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்
## வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாக காத்திருக்கிறது.
- 25 அதிஷ்ரசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு அ வைர மோதிரப் போட்டி





> தொண்டு செய்யும் அடிமை- உனக்குச்
> சுதந்திர நினைவோடா?
> பண்டு கண்ட துண்டோ?- அதற்குப்
> பாத்திரமாவாயோ?
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# சிறப்பாக அமைந்தது எப்படி?

ஜென் என்ற ஓவியர் ஒருநாள் ஓர் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் அவரது பிரதம சீடர் அமர்ந்திருந்தார். அவர், ஜென் ஓவியம் வரையும்போது,

"குருவே! அதற்கு வேறு வர்ணம் தீட்டுங்கள். மற்றப் பக்கத்தில் இருக்கும் மரத்தின் இலைகளுக்கு இன்னும் கருமையான பச்சை வர்ணம் தீட்டுங்கள்!" என்று அடிக்கடி ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தார்.

இடையிடையே, "குருவே படம் அப்படியிருந்தால் நல்லாயிருக்கும்!" என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஓவியம் எப்படியோ ஒரு மாதிரியாக உருவாகிக் கொண்டிருந்தது. இருப்பினும் ஓவியம் சரியாக வரவில்லை என்று இருவருக்கும் கவலை.

அப்படி இருந்ததை அதற்கு முன் அந்தச் சீடர் பார்த்ததில்லை. எதையுமே மிகச் சரியாகச் செய்யக் கூடியவர் குரு. அன்று அவருக்கு என்ன ஆயிற்று என்று சீடருக்கு விளங்கவில்லை.

குருவும் என்னென்னவோ செய்து பார்த்தார். ஓவியம் சரியாக வரவே யில்லை. மேலும் மேலும் அது கெட்டுக் கொண்டே வந்தது.

சீடரும் அது சரியில்லை என்ற அர்த்தத்தில் தலையாட்டிக்கொண்டே வந்தார்.

கடைசியில் வர்ணங்கள் முடிந்து விட்டன. உடனே குரு,

"வர்ணங்கள் முடிந்து விட்டன. போய் கொஞ்சம் வர்ணங்கள் தயாரித்து வா!" என்று கூறி சீடரை அனுப்பினார்.

சீடரும் வர்ணங்கள் தயாரிக்கச் சென்று விட்டார்.

தட்டிலே இருந்த சொற்ப வர்ணங் களைக் கொண்டு ஓவியத்தின் அமைப்பை மாற்றிக்கொண்டிருந்தார் குரு.

சற்று நேரம் கழித்து சீடர் வந்தார். ஓவியத்தைப் பார்த்தார். அவருக்கு ஒரே வியப்பு.

ஓவியம் அற்புதமாக வரையப்பட்டிருந்தது.

"குருவே! ஓவியம் சிறப்பாக அமைந்து விட்டதே, எப்படி?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் சீடர்.

அதற்குக் குரு சிரித்துக்கொண்டே,

"நீ என் அருகில் இல்லாததுதான். நீ அருகில் இருந்தால் ஏதாவது குறை சொல்லிக் கொண்டிருந்திருப்பாய். அதனால் எனக்கு ஒரு உறுத்தலாய் இருந்தது. ஓவியம் சரியாக வரவில்லை. நீ இந்த இடத்தை விட்டுப் போனதும் எனக்கு உறுத்தல் நீங்கியது. என் தனிமை நிலைப் பட்டது. அந்தத் தனிமை நிலைப் பட்டதால் ஓவியம் ஒழுங்காக உருவாயிற்று," என்றார்.



**'எந்தவொரு வேலையைச் செய்யும் போதும் வேறு ஒருவருடைய தலையீடு அதிகமானால், அந்த வேலை சரிவர அமையாது,'** என்பதற்கு இந்தக் கதை ஒரு நல்ல உதாரணமல்லவா?

# அதிசயம் - ஆனால் உண்மை!



அலெக்ஸாந்திரியா பல்கலைக்கழகத்தின் புகழ் மிக்க பேராசிரியர் அமோனியஸ் டிராமாடிகஸ் தினமும் கழுதை மீதேறி பல்கலைக் கழகம் செல்வார். அவர் பாடம் நடத்தும்போது, அந்த மாணவர்ளுடன் சேர்ந்து பாடம் கேட்குமாம் கழுதை.



ரோமாபுரியச் சக்கரவர்த்தியின் அவையில் ஓர் அதிகாரியாக இருந்த ஃபாகன் என்பவர் ஒரு சாப்பாட்டு ராமன். இவன் ஒரே தடவையில் சாப்பிட்டவை இவை: முழுக்காட்டுப் பன்றி ஒன்று, ஓர் ஆடு, ஒரு பன்றி, 100 ரொட்டிகள், ஒரு பீப்பாய் மது.



ஹோலிலாண்டின் அக்ரே கோட்டையைப் பிடிக்க அறவீரர்கள் 2 ஆண்டுகள் முயன்றார்கள். இறுதியில் கோட்டை மதில்களின் மேலிருந்து 100க்கும் மேற்பட்ட தேன் கூடுகளைப் போட்டதும், தேனிக்கள் கொட்ட, அராபிய வீரர்கள் சரணடைந்தார்கள்.

# முதல் பாடசாலை

குகைமனிதன் காலத்திலிருந்தே வயதில் பெரியவர்கள், சிறியவர்களுக்கு, தமக்குத் தெரிந்த விஷயங்களை எல்லாம் கற்றுக் கொடுத்தார்கள். இவர்களின் போதனை எவை உண்பதற்கு ஏற்றவை? எந்த விலங்குகள்- ஆபத்தானவை என்ற ரீதியில் இருந்தன.




எழுத்துக்கலை உருவான பிறகு, மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை எழுதி வைத்து அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டான். அதைத் தொடர்ந்து- அதாவது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு... மெசப்பத்தேமியா விலும் எகிப்திலும் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

ஹீப்ரு இனத்தவர்கள்- தமது சந்ததியினருக்கு- தமது முன்னோர், தமது வாழ்க்கைமுறை, கலாசாரம், மதம் போன்றவற்றைக் கற்றுக் கொடுத்தார்கள்.

இவர்கள் முதலில் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மட்டுமே இவற்றைக் கற்றுக் கொடுத்தனராம். பின் இவர்கள் மீது வேற்று நாட்டினர் படையெடுத்ததைத் தொடர்ந்து எல்லாருக்கும் கல்வி கற்பிக்கப்பட்டதாம்.

தற்போதைய பாடசாலைகளின் முன்னோடி இதுவே என்று நம்பப்படுகிறது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **27.03.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 289**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 287

**பரிசுக்குரியவர்:**
பாத்திமா நௌசி கரீம்,
மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வை. சியாட், அநு/ நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம், நேகம்பஹா. | செல்வி ஷிரோமி விஜேக்குமார், மெதடிஸ்த கல்லூரி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. |
| த. நிரோஷன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | முஹமட் ஸஹீர், அல் இக்மா கல்லூரி, கொழும்பு-12. |
| எஸ்.எம். ரிம்லா, மாறை/ அல்மினா, ம.வி., மீயல்லை, ஹக்மனை. | ச. குணதீபன், நு/ நட்போர்ன் த.வி. டயகம. |
| திருமலர் செல்வி, கனிஷ்ட பாலிகா, நாவலப்பிட்டிய. | ஜி. அஷ்வின், பெல்வ சர்வதேச கல்லூரி, டிக்மன் ரோட், பம்பலப்பிட்டி. |
| பாத்திமா செரிஸா உசைன், ஆமினா தேசிய கல்லூரி, மாத்தளை. | த. நித்தியகுமார், மட்/ கிரான் ம.வி., கிரான். |

# நாக்கு

மனிதனின் நாக்கு சுவையுணர்வை அறியவும், உணவுகளை விழுங்கவும், பேசுவதற்கும் பயன்படுகிறது. ஆனால் விலங்குகளின் நாக்குகள் பல விதங்களில் பயன்படுகின்றன.

* தவளை, பல்லி போன்ற ஊர்வனவற்றின் நாக்கு இரையைப்பிடிக்கப் பயன்படுகிறது. பல்லி, பச்சோந்தி போன்றவற்றின் நாக்குகள் மிக நீளமானவை. இவை தம் நாக்குகளை வாய்க்குள் மடக்கி வைத்திருக்கும். இவை இரைகளைக் கண்டதும் இமைப் பொழுதில் தமது நாக்கை நீட்டி அவற்றைப் பிடிக்கும் திறனுள்ளவை.

* எறும்பு தின்னியின் நாக்கு மிகவும் நீண்டு இருப்பதுடன், ஒருவகைப் பசையுடன் கூடியதாகவும் இருக்கும். இவை கறையான் புற்றில் தன் நாக்குகளை நுழைத்துத் துழாவும்போது புற்றின் அடிப்பாகத்தில் உள்ள கறையான்கள்கூட இவற்றின் நாக்கில் ஒட்டிக்கொள்ளும்.

* கொடிய விஷப் பாம்பு தன் நாக்கை மோப்பம் பிடிக்கும் உறுப்பாகப் பயன்படுத்துகிறது. அடிக்கடி பாம்பு தன் நாக்கை உள்ளேயும் வெளியேயும் இழுக்கும். அப்போது சுற்றுப்புறப் பொருட்களில் இருந்து வரும் வாசனை அணுக்கள் பாம்பின் வாயின் மேற்பகுதியில் அமைந்துள்ள 'ஜேக்கப் சென்ஸ்' என்ற உறுப்பை அடையும். இதன் மூலம் பாம்பு மோப்பம் பிடித்துக் கொள்கிறது.

* ஆபிரிக்காவில் காணப்படும் 'ஒகாபி' என்ற ஒட்டகச் சிவிங்கி இனத்தைச் சேர்ந்த விலங்கிற்கு நீண்ட நாக்குகள் உள்ளன. இது தன்னுடைய நீண்ட நாக்கினால் அதன் உடம்பு முழுவதையும் நக்கி சுத்தம் செய்து விடுமாம். தன் காதின் உட்புற அழுக்கைக்கூட ஒகாபி தன் நாக்கால் நக்கி எடுத்துவிடுமாம்.

* உலகிலேயே அதிக எடையுள்ள நாக்குள்ள பிராணி நீலத் திமிங்கலமாகும். இதன் நாக்கின் நிறை மட்டும் ஒரு யானையின் நிறைக்குச் சமமாக இருக்குமாம்.

# பலூன் பிறந்த கதை

சிறார்களின் விளையாட்டுப் பொருளாக இருக்கும் பலூன் பிறந்த கதை உங்களுக்குத் தெரியுமா?

இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் காகிதத்தால் பலூன் செய்யப்பட்டது. எனினும் இது மேலே பறக்காது. இறப்பரால் பலூன் தயாரிக்கும் முறையை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் இந்தியர்கள்.


இறப்பர் மரத்திலிருந்து வடியும் இறப்பர் பாலை எடுத்துப் புகையூட்டி இளகச் செய்து பலூன் இந்தியர்களால் செய்யப்பட்டது. பின்பு இந்த முறையைப் பின்பற்றி, தென் அமெரிக்கர்கள் சிறிது மாற்றம் செய்து, நவீன பலூன்களைத் தயாரிக்க ஆரம்பித்தனர்.

இவான்ஜிலிஸ்டா டாரிசெல்லி என்ற விஞ்ஞானி 1643ம் ஆண்டு ஹீலியம் என்ற வாயுவை பலூனில் அடைத்தால், பலூனை மேலே பறக்கச் செய்யலாம் என்பதைக் கண்டுபிடித்தார்.

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பர்தலோமியூ-டி- குஸமாவோ, பிரேஸிலியஸ் ஜெஸுயூட் ஆகிய இருவரும் 1709ம் ஆண்டு 33 அடி விட்டமுள்ள பிரமாண்டமான பலூனைத் தயாரித்து, கூடை போன்று அமரும் வசதி செய்து, 'கேஸ் (வாயு) லைட்' மூலமாக எரியச் செய்து வானத்தில் பறந்து காட்டினர்.

ஹைதரசன் வாயுவை நிரப்பினாலும் பலூனைப் பறக்கச் செய்யலாம் என்பது 1783ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது.

உலகிலேயே இறப்பர் அதிகமாக



விளையும் இந்தியா, பர்மா ஆகிய இடங்களில் இருந்து 1830களில் இறப்பரை வரவழைத்து, பெருமளவில் பலூன்கள் தயார் செய்து உலகம் முழுவதும் விற்பனை செய்தனர் அமெரிக்கர்கள்.

## பெயர் வரக் காரணம்?

கொன்ஸ்டபிள் (CONSTABLE) என்றால் பொலிஸ்காரர் என்பது எல்லாருக்கும் தெரியும். இந்த கொன்ஸ்டபிள் என்ற வார்த்தை இலத்தீன் மொழியான 'கொம்ஸ் ஸ்டபுளி' என்ற சொல்லில் இருந்து உருவானது.

'கொம்ஸ் ஸ்டபுளி' என்றால் குதிரை இலாயத்தில் உள்ள குதிரைகளை எண்ணுபவர் என்று அர்த்தம்.

# அதிசய மனிதர்

1884ம் ஆண்டு அமெரிக்காவில் டெக்ஸ்டர் நகரில் வாழ்ந்த ரெனார்ட் பெக் என்பவர் அதிசய மனிதராகக் கருதப்பட்டார்.



காரணம்- அவர் தூங்குவது, சாப்பிடுவது, உட்கார்வது, நடப்பது எல்லாமே தரையிலிருந்து சில அடி உயரத்தில் தான். அவரது கால்கள் தரையைத் தொட்டதில்லை. அந்தரத்தில் நின்றபடி கட்டில், நாற்காலி போன்றவைகளையும் தூக்கிக் காட்டி சாகசம் செய்தார்.

மிதக்கும் மனிதரான இவரது அபூர்வ சக்திக்கு விஞ்ஞானிகளால்கூட சரியான காரணத்தைச் சொல்ல முடியவில்லை. தன்னால் எப்படி இந்த அதிசயத்தை நிகழ்த்த முடிகிறது என்பதை ரெனார்ட் பெக் கடைசி வரை ஒருவருக்கும் சொல்லவில்லை.

தனது அபூர்வ சக்தியை வைத்துப் பல கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பணம் குவித்தார் ரெனார்ட் பெக்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

# டிசம்பர் பௌர்ணமி

## 21

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஸ்குமார்**

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான். இந்நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.

இனி......

விஜயராகவன் காரை விரட்டிக் கொண்டு போய் படப்பை சேர்ந்தபோது ராத்திரி பத்தரை மணி.

பண்ணை வீட்டுக் காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் சாமிதுரை கைகளைக் கட்டியபடி பவ்யமாய்க் காத்திருந்தான். காரை உள்ளே போகவிட்டு கதவைச் சாத்திய சாமிதுரை காருக்குப் பின்னாலேயே ஓடி வந்து போர்ட்டிகோவில் போய் நின்றதும் காரின் முன் பக்கக் கதவைத் திறந்துவிட்டான்.

விஜயராகவன் கீழே இறங்கி ஒரு பெரிய புன்னகையோடு சாமிதுரையை ஏறிட்டார்.

"வா... எம் பின்னாடி..." போனான்.

பங்களாவுக்குள் நுழைந்து சோபாவை-ஆக்ரமித்துக் கொண்டார். எதிரே வந்து நின்ற சாமிதுரையைப் பார்த்து மறுபடியும் புன்னகைத்தார்.

"நான் சொன்னபடி சாந்தாவை முடிச்சக்கட்டிட்டே சாமிதுரை. அதுக்காக பேசின பணத்தை ரெண்டு நாள் கழிச்சு நானே கொண்டு வந்து தர்றேன்."

சாமிதுரை கும்பிட்டான்.

"அய்யா! பணம் வேண்டாங்க!"

"பணம் வேண்டாமா? ஏன்?"

"நீங்க சொன்ன வேலையை நான் செய்யலை."

விஜயராகவனின் அகலமான நெற்றி



மில் குழப்ப வரிகள் உற்பத்தியாயின.

"சாமிதுரை நீ என்ன சொல்றே?"

"அய்யா! மன்னிக்கணும். நீங்க சொன்ன அந்த சாந்தாவோட கதையை நான் முடிக்கலை. செய்யாத காரியத்துக்கு பணம் வாங்கறது தப்பில்லீங்களா?"

"சாயந்தரம் நான் உன்கூட ஃபோன்ல பேசும்போது சாந்தாவோட விஷயத்தை முடிச்சிட்டதா சொன்னே?"

"வாஸ்தவந்தாங்கய்யா... ஆனா, அது பொய்ன்னு அரை மணி நேரத்துக்கு முன்னாடி தானே விஷயம் தெரிஞ்சது."

"பொய்யா?"

"ஆமாங்கய்யா! சாந்தாவோட கதையை முடிக்கச் சொல்லி எனக்கு வேண்டிய தோஸ்து ஒருத்தன் கிட்டே சாந்தாவைக் காட்டி வேலையை ஒப்படைச்சேன். நீங்க இன்னைக்கு சாயந்திரம் எனக்கு ஃபோன் பண்ணி சாந்தாவோட விஷயத்தை முடிச்சுட்டே போலிருக்கேன்னு கேட்டதும் நம்ம தோஸ்துதான் வேலையை முடிச்சிட்டான்னு நினைச்சு உங்ககிட்டே ஆமான்னு சொல்லிட்டேன்ய்யா?"

"நீ சொல்றது நிஜமா சாமிதுரை?"

"ஆமாங்கய்யா!"

"அப்படீன்னா அந்த சாந்தாவுக்கு யாரால என்ன ஆபத்து ஏற்பட்டிருக்கும்னு தெரியலையே?"

விஜயராகவன் யோசனையாய் மோவாயை வருடிக் கொண்டிருக்கும் போதே டீபாயின் மேலிருந்த டெலிஃபோன் தன் தொண்டையைக் கனைத்து குரல் கொடுத்தது.

ரிஸீவரை எடுத்து காதுக்கு பொருத்தினார்.

"ஹலோ..."

மறுமுனையில் நலிந்த குரலைக் கேட்டதும் விஜயராகவனின் முகம் வெகுவாய் மாறியது. அந்தக் குளிரான இரவு வேளையிலும் வியர்வை அரும்பி மினுமினுத்தது.

***

தூக்கம் வராமல் போர்ட்டிகோ வராந்தாவில் நடை போட்டுக் கொண்டிருந்த ருத்ரமூர்த்தி திறந்திருந்த காம்பவுண்ட் கேட் வழியே ஹெட்லைட்டை பளீரென்று உயிர்ப்பித்துக் கொண்டு பொலிஸ் ஜீப் உள்ளே வருவதைப் பார்த்ததும் நடையை நிறுத்தினார்.

பொலிஸ் ஜீப் போர்ட்டிகோவுக்கு வந்து மௌனமாகி நிற்க, உள்ளேயிருந்து இன்ஸ்பெக்டர் குமரனும் நித்தியனும் இறங்கினார்கள். நித்தியன் சோர்ந்து களைத்துப் போயிருந்தான்.

ருத்ரமூர்த்தி ஆர்வமாய் போர்ட்டிக்கோ படி இறங்கியபடி நித்தியனைக் கேட்டார்:

"என்ன சாந்தா கிடைச்சாளா?"

நித்தியன் அவரை முறைப்பாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு மௌனமாய் உள்ளே போக ருத்ரமூர்த்தி இன்ஸ்பெக்டரை தவிப்பாய் ஏறிட்டார்.

"இன்ஸ்பெக்டர்! போன விஷயம் என்னாச்சு? சாந்தா கிடைச்சாளா?"

"கிடைக்கலை. அது சம்பந்தமாய்த்தான் மறுபடியும் உங்ககிட்ட வந்திருக்கேன்."

"ஃபார் வாட்?"

"மிஸ்டர் ருத்ரமூர்த்தி! கொஞ்ச நேரத்துக்கு முந்தி நானும் உங்க சன்னும் சாந்தா தங்கியிருந்த ஹாஸ்டலுக்குப் போயிருந்தோம். சாந்தாவோட அறையை சோதனை செய்து பார்த்தபோது ஒரு முக்கியமான டயரி கிடைச்சுது."

இன்ஸ்பெக்டர் குமரன் சொல்லிக் கொண்டே தன் கையில் வைத்திருந்த டயரியைக் காட்டிப் பிரித்தார். பிரித்துக் கொண்டே கேட்டார்,

"நீங்க சாந்தாவை இது வரைக்கும் எத்தனை தடவை பார்த்து பேசியிருக்கீங்க?"

"ஒரு தடவைகூட கிடையாது இன்ஸ்பெக்டர். ஃபோன்ல கூப்பிட்டு ஒரு தடவை நேர்ல பார்த்து மிரட்டினதோடு சரி..."

"பொய் சொல்லாதீங்க மிஸ்டர் ருத்ரமூர்த்தி. சாந்தாவை நீங்க ஏழுதடவை நேர்ல பார்த்து மிரட்டியிருக்கீங்க?"

"நானா! நெவர்!"

"இப்படி சிம்பிளா சொல்லி தப்பிச்சுக்க முடியாது. சாந்தாவுக்கு டயரி எழுதற பழக்கம் இருக்கு. அந்த டயரியில் எல்லாத்தையும் எழுதியிருக்கா. இதோ பாருங்க. போன மாசம் ஒன்பதாம் தேதி சாயந்திரம் ஆறு மணியளவில் சாந்தா ஒரு ஹோட்டல்ல டிபன் சாப்பிட்டு வெளியே வரும்போது, நீங்க காரைக் கொண்டு போய் அவளுக்கு முன்னாடி நிறுத்தி மிரட்டினதை அப்படியே எழுதியிருக்கா. படிச்சுப் பாருங்க."

குமரன் டயரியை நீட்ட ருத்ரமூர்த்தி கை நடுங்க வாங்கி அந்தப் பக்கத்தில் பார்வையைப் போட்டார்.

குண்டு குண்டான கையெழுத்தில் வாக்கியங்கள் ஓடியிருந்தன.

'இன்று காலை கண் விழித்தது முதலே எனக்கு நேரம் சரியில்லை. மாத வாடகையை ஒழுங்காகத் தரவில்லையென்று ஹாஸ்டல் வார்டன் சண்டை போட்டாள். லாண்டரி சலவைக்குப் போன என்னுடைய புது சேலை கிழிசலோடு வந்தது. குழாயில் தண்ணீர் வராததால் இன்றைக்கு குளிக்காமலேயே வேலைக்குக் கிளம்பிட்டேன். வழக்கமாய் சரியான நேரத்துக்கு வரும் பஸ் இன்றைக்கு அரை மணி நேரம் லேட். சரியான கூட்டம். எப்படியோ ஏறினேன். சரியான சில்லறை இல்லாததால் கண்டக்டரோடு சண்டை. எல்லாவற்றுக்கும் மேலாக சிகரம் வைத்த மாதிரி இன்றைக்கு சாயந்தரம் ஆறு மணியளவில் லஸ் கார்னரில் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு ரோட்டை கிராஸ் பண்ண முயலும் போது பக்கத்தில் கார் வந்து நின்றது. நித்தியனின் அப்பா தலையை நீட்டினார்.

"வணக்கம் சார்... என்றேன்."

"உன் வணக்கத்தைத் தூக்கி குப்பைத் தொட்டியில் போடு!" என்றார். தொடர்ந்து அவரே சுட்டு விரலைக் காட்டி எச்சரித்தபடி பேசினார்.

"இதோ பார்... நான் உன்னை இப்படி சந்திச்சு பேசறது ஏழாவது தடவை. நித்தியன் விஷயமா நீ என்ன முடிவு எடுத்து இருக்கே?"

"ஏற்கனவே எடுத்த முடிவுதான் சார்!"

"அதாவது நித்தியனை விட்டு விலகி நீ போகமாட்டே?"

"ஆமா ஸார்!"

அவர் முறைத்தார். "என்னோட பலம் என்னான்னு தெரியாம என்கிட்டே மோதாதே... நான் நினைச்சா உன்னை நித்தியனோட வழியிலிருந்து மட்டும் இல்லை இந்த உலகத்திலிருந்தே ஒழிச்சுக் கட்டமுடியும்!"

"உங்களுக்கு எப்படி பிரியமோ அப்படி செய்யுங்க. எனக்கு எது விதிச்சிருக்கோ அது நடந்துட்டு போகட்டும். நான் எதைப் பத்தியும் கவலைப்படாதவ... உங்க மகன் பம்பாய் ஜெயில்ல, தான் செய்யாத ஒரு குற்றத்துக்காக தண்டனை அனுபவிச்சிட்டிருக்கார். ஜெயில்லயிருந்தே எனக்கு லெட்டர்ஸும் போடறார். நானும் அவருக்கு பதில் கடிதம் எழுதிக்கிட்டுத்தான் இருக்கேன். என்னை நீங்க சந்திக்கிறது ஏழாவது தடவைன்னு சொன்னீங்க. நான் இதுவரைக்கும் உங்க மகனுக்கு எழுதின லெட்டர்கள்ல ஒரு வார்த்தைகூட உங்களைப் பத்தினது இல்லை..... இனியும் எழுத மாட்டேன். அதே மாதிரி அவர் ஜெயிலிலிருந்து வந்த பின்னாடி கூட உங்களோட வில்லன் தனத்தை பற்றி சொல்லமாட்டேன். உங்களை நானே ஃபேஸ் பண்ணி ஜெயிக்கப்போறேன்."

"என்னை ஜெயிக்க உன்னால முடியாது. விலகிப் போயிடு."

"இப்போ.... நீங்க விலகிப் போங்க. ட்ராஃபிக் கான்ஸ்டபிள் போக்குவரத்துக்கு இடைஞ்சலா இருக்கிற உங்க காரை பார்த்துட்டு வந்திட்டிருக்கார்..."

என் வருங்கால மாமனார் என்னை ஒரு கோபப் பார்வை பார்த்துக் கொண்டே வண்டியை வேகமாய் விரட்டிக் கொண்டு போய்விட்டார்."

டயரியில் இருந்த வாசகங்களைப் படித்துப் பார்த்து விட்டு கலக்கமாய் நிமிர்ந்தார் ருத்ரமூர்த்தி.

குமரன் புன்னகையோடு கேட்டார்.

"இதுக்கு என்ன சொல்றீங்க?"

"ஸாரி... இன்ஸ்பெக்டர்"

"எதுக்கு ஸாரி?"

"நான் சாந்தாவை பார்த்ததே இல்லைன்னு பொய் சொன்னதுக்காக..."

நித்தியன் உள்ளேயிருந்து கோபமாய் வந்தான்.

"இன்னும் இதுமாதிரி எத்தனை பொய்களை உங்க மனசுக்குள்ளே மறைச்சு வெச்சிருக்கீங்க. இப்பவே அதையும் சொல்லிடுங்க."

"இனிமே என்கிட்டே எந்தப் பொய்யும் கிடையாது நித்தியன்...."

"அப்பா! இனிமே நான் உங்களை நம்பமாட்டேன். சாந்தாவை என்ன பண்ணீங்க... அவ உயிரோடு இருக்காளா இல்லையா? உயிரோடு இல்லைன்னா இப்பவே சொல்லிடுங்க. நானும் போய்ச் சேர்ந்துடறேன்."

ருத்ரமூர்த்தி குரல் தழுதழுத்தார்.

"நித்தியன் என்னை நம்பு! நான் சாந்தாவை மிரட்டினதோடு சரி... மத்தபடி நான் அவளுக்கு எந்தக் கஷ்டத்தையும் தரலை."

"உங்களைத் தவிர வேறயார் அவளுக்கு என்ன கெடுதலை பண்ணியிருக்க முடியும்?"

ருத்ரமூர்த்தி குமரனிடம் திரும்பினார்.

"இன்ஸ்பெக்டர்! நீங்களாவது என்னைப் புரிஞ்சுக்குங்க. நான் அவளை மிரட்டினதோடு சரி... அவ காணாம போயிருக்கிறதுக்கு நான் காரணம் கிடையாது."

"நீங்க காரணம் இல்லைன்னா வேற யாரு?"

"அது வந்து... வந்து.."

"சொல்லுங்க..."

"எனக்கு ஒருத்தர் மேல டவுட்."

"யாரு மேல?"

"அது வந்து... நான்தான் சொன்னேன்னு விஷயம் வெளியே வரக் கூடாது."

"வராது! யார்ன்னு சொல்லுங்க!"

"விசாலியோட அப்பா விஜயராகவன்."

(பௌர்ணமி தொடரும்)


---

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

## 33

**ராஜையா**



சதாம் தொடர்ந்தார்:

"பனாமாவைப் போல ஈராக்குலயும் செஞ்சிடலாம்னு அமெரிக்கா நினைக்குது. அதனாலதான் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ், "ரெண்டே நாளில் வளைகுடாப் போர் முடிஞ்சிடும்"னு மார்தட்டிக்கிட்டிருக்கார். அதனால ஈராக்குன்னா என்னன்னு அவருக்குப் புரிய வைக்கணும். ரெண்டு நாள் இல்ல... ரெண்டு மாசமானாலும் ஈராக்கை அடிமைப்படுத்த முடியாதுன்னு எடுத்துக் காட்டணும்!

"வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு! வரப்போற சண்டையில் ஜெயிக்கிறோமா? தோக்குறோமாங்கறது முக்கியமில்லை. எத்தனை எதிரிகள் வந்தாலும் அத்தனை எதிரிகளையும் எத்தனை நாள் வீரத்துடன் எதிர்த்து தாக்குப் பிடிக்கிறோம்ங்கறதுதான் முக்கியம். இதை சாதிக்க எனக்கு பிரியமானவர்களெல்லாம் போர்க்களத்துல குதிக்கணும்னு ஆசைப்படுறேன். நீ என்ன சொல்ற உதய்?"

உதய் யோசிக்கவே இல்லை. சட்டென்று சொன்னான்: "சொல்லுங்கப்பா! நான் எந்தப் போர்முனையில யுத்தம் பண்ணனும்..?"

பரவசத்தில் மகனைக் கட்டிக் கொண்டார் சதாம்...!

"போ... பாஸ்ரா போர் முனைக்கு!"

ஜனவரி 16ந் தேதி. ஐ.நா.சபை விதித்த கெடு முடிந்த மறுநாள். நள்ளிரவு.

கெடு முடிவதற்காகவே தயாராகக் காத்திருந்த அமெரிக்க இராட்சதப் போர் விமானங்கள் பாக்தாத் மீது சரமாரியாக குண்டு வீசி வளைகுடாப் போரைத் தொடங்கின.

சதாம் உசேனையும், ஈராக்கின் இராணுவ பலத்தையும் அழிக்க வேண்டும் என்று நீண்ட நாள் திட்டத்தின் அடிப்படையில், சதாம் உசேனின் மாளிகையை, சொந்த ஊரை, கட்சி அலுவலகத்தை, அவர் தங்கியிருப்பதாக சந்தேகப்படும் பதுங்கு அறையை, முக்கிய ராணுவ கேந்திரங்களை, மனித வாழ்வின் நாகரிக அடையாளங்களை கண்மூடித்தனமாக அமெரிக்கக் கூட்டு இராணுவம் தாக்கி அழித்தது.

பதிலடி கொடுப்பதற்காக 'ஸ்கட்' ஏவுகணையை எடுத்தார் சதாம். "ஹே.. இஸ்ரேல்! என் காலம் வந்தது. நான் குட்டக்குட்ட நீ குனிவாய்...!"

இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவ் மீது ஜனவரி 18ந் தேதி ஈராக்கின் 'ஸ்கட்' ஏவுகணை முதன்முதலாகப் பாய்ந்து வந்து நாசத்தை ஏற்படுத்தியது. இத்தாக்குதலை 'போர்தந்திரம்' என்ற நினைப்பில் இஸ்ரேல் கைகட்டி தாங்கிக் கொண்டது.

உலகெங்கும் இஸ்ரேலின் பாலஸ்தீன ஆக்கிரமிப்பைக் கண்டு பொருமிக் கொண்டிருந்த அரபு-முஸ்லிம் மக்கள் இஸ்ரேலை ஒவ்வொரு 'ஸ்கட்' தாக்கியபோதும் தங்கள் கழுத்தில் பூமாலை விழுந்ததாய் குதூகலித்தார்கள்.

"இரண்டே நாளில் குவைத்தை விடுவித்து விடுவோம்!" என்று தாண்டிக்குதித்த அமெரிக்காவின் கணக்குத் தவறு என்பதை 33 நாடுகளின் முப்படைகளை 43 நாட்கள் தன்னந்தனியே எதிர்த்து நின்று சமாளித்து தாக்குப் பிடித்துக் காட்டினார் சதாம்.

'குவைத்தை விடுவிக்கிறேன்' என்ற போர்வையில் அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமிக்க ஈராக்குக்குள் தரைப்படையை அனுப்பியவுடன் சதாம் குவைத்திலிருந்து ஈராக் படைகள் வாபசாக உத்தரவிட்டார்.

தெற்கு ஈராக்கை கைப்பற்றும் வரை போரை நிறுத்த மறுத்த அமெரிக்கா தெற்கு ஈராக்கை ஆக்கிரமித்துக் கொண்டவுடன் போரை நிறுத்திவிட்டதாக அறிவித்தது. எனினும், சதாம் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற தன் நோக்கம் போரில் நிறைவேறாததால். அதை இப்போது நிறைவேற்றிக் கொள்ள உள் நாட்டில் குர்து தீவிரவாதிகளையும், ஷியா வகுப்பு தீவிரவாதிகளையும் தூண்டிவிட்டு கலகம் செய்து வருகிறது. அதை சமாளிப்பதில் தீவிரம் காட்டி வருகிறார் சதாம்.

ஆக, ஆக்கிரமிப்பு வெறியோடு அமெரிக்கா தொடங்கிய வளைகுடாப் போர் முடிந்துவிடவில்லை. அது இன்னும் நடந்து கொண்டிருக்கிறது- ஈராக்குக்குள்!

ஈராக்கின் அண்டை நாடான ஜோர்தானின் தலைநகர் அம்மான்.

ஹோட்டலிலிருந்து கிளம்பினார் சேகர் குப்தா. 'இண்டியா டுடே' ரிப்போர்ட்டர். அவர் தோளில் காமிராவும், கையில் டேப் ரிக்கார்டரும்.

வளைகுடா போர் தொடர்பான ஒரு கேள்வி அவரை துரத்திக் கொண்டிருந்தது...

போர் தொடங்கியபோது சதாம் உசேனை ஹீரோவாகப் புகழ்ந்து அமோக ஆதரவு கொடுத்தவர்கள் ஜோர்தான் மக்கள். அவரை அரபு இனத்தலைவராகவும், முஸ்லிம் படையின் முன்னணித் தலைவராகவும் புகழ்ந்தவர்கள் அவர்கள். வீரத்தின் விளைநிலமாய் அவரைப் போற்றியவர்கள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மிச்சம்

22

சுபா

### இதுவரை

அரவிந்த் ஒரு பைலட். அவனது மனைவி ஜ்யோதி. அவர்களது நண்பன் விக்ரம். அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை. இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஒடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான்.

அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை- எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.

பொலிஸ் சுடுகிறது. சீனு இறக்கிறான். கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர். அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.

நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார். அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.

இனி....

**தே**வேந்திரன் லேசாக அசைந்தான். மரக்கிளை சத்தமிட்டது.

கோவில் மண்டபத்தின் உச்சியில் மரம் அடர்ந்து மூடியிருந்த பகுதியில் அவன் பதுங்கியிருந்தான். அமைச்சரின் ஆணைப்படி செயல்பட்ட இரக்கமில்லாத புல்டோஸர்கள் கோவிலையும், அதன் பழமையான மண்டபத்தையும் தெய்வ பயம் காரணமாகவோ, சிமெண்ட் மூட்டைகள் அடுக்க வசதியான இடம் என்பது காரணமாகவோ சிதைக்காமல் விடப்பட்டிருந்தன.

தேவேந்திரன் பதுங்கியிருந்த இடத்திலிருந்து ஒடக்கரையின் பின்னணியில் நிமிர்ந்திருந்த மலைக்குன்றங்கள் சௌகரியமாகத் தெரிந்தன. முக்கியமாய் ஹெலிகொப்டர் வந்து மோதப்போகும் அந்தக் குகையை யொட்டிய பாறைகள்... தேவேந்திரன் பார்வையை நாற்புறமும் செலுத்தினான்.

தொழிற்சாலையின் முதல் கட்ட வளர்ச்சியாக அலுவலகக் கட்டடம் ஆரம்பமாக எழுப்பப்பட்டுவிட்டது. இன்னொருபுறம் இளைஞர் முகாம்கள் முடிவுற்ற நிலையில் பொம்மை வீடுகளை அடுக்கி கொலு வைத்ததுபோல் தோன்றின. பார்ப்பதற்கு அழகாகவே இருந்தன. இளைஞர்களைக் கொண்டு குவித்த பஸ்கள் ஒருபுறம் வரிசையாக நின்றன. கண் இடறுகிற திசையெல்லாம் பொலிஸ் வேன்கள். காக்கித் தலைகள். ஒடக்கரை இளைஞன் அமைச்சரைக் கொல்லப்பார்த்தான் என்ற பழைய நிகழ்ச்சி காரணமாகவே இங்கே அதிக அளவு பொலிஸ் கொண்டுவந்து நிறுத்தப் பட்டிருக்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது.. எவ்வளவு அலங்கார ஆர்ப்பாட்டங்கள்?

ஒருவேளை ஹெலிகொப்டர் மோதாமல் இறங்கி விட்டால்? அவர்களுடைய திட்டத்தில் வேறு ஏதாவது எதிர்பாராத தடங்கல் வந்து விட்டால்? அப்படி ஒரு அசம்பாவிதத்திற்கும் அவன் தயாராய் இருந்தான். அதனால்தான் இங்கே காத்திருந்தான்.

குண்டு துளைக்காத மேடை அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் பிரகாஷ் குப்தா மேடை ஏறும்போது அந்தப் பாதுகாப்பு இருக்கப்போவதில்லை. காரிலிருந்து இறங்கி, மேடையை நெருங்குவதற்குப் பத்தடி நடக்க வேண்டும். அந்தப் பத்தடிக்குள் அவனுடைய டெலஸ்கோப் துப்பாக்கி அவரை நெம்பி விடும். நகரும் சிப்பாய்களைச் சுட்டிருக்கிறான்.

டாங்கிகளை வீழ்த்தியிருக்கிறான். ஒரு மனிதனைக் குறிவைப்பது சவாலாயிருக்கப் போவதில்லை. மரக்காலை சற்றே சிரமத்துடன் புரட்டி, தகுந்த கோணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். பொறுமையுடன் காத்திருந்தான்.

❦✣✮

**ரா**ட்சத தும்பியைப் போல ஹெலிகொப்டர் பறந்து கொண்டிருந்தது. தூரத்தில் ஒடக்கரையும், அதைச் சூழ்ந்த மலைகளும் தெரிந்தன.

பிரகாஷ் குப்தா தனக்குத் தயாரித்துத் தரப்பட்டிருந்த பேச்சைப் படிக்கலாம் என்று பிரித்திருந்தார். வானத்தில்தானே இருக்கிறோம் என்ற தைரியத்துடன் காவல் படை மினர் சற்றே தளர்ந்து உட்கார்ந்து ஓய்வு நிலையில் இருந்தார்கள். எல்லோரும் கவனம் பிசகி இருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் ஹேம்நாத் எழுந்தார்.

எதற்காக எழுந்திருக்கிறார் என்று விசாரிப்பது போல படித்துக் கொண்டிருந்த பேப்பர்களைத் தழைத்தார் அமைச்சர்.

"என்ன ஹேம்நாத்?"

"எல்லோரும் கவனியுங்கள்!" என்றார். ஹேம்நாத் திடீரென்று அவர் குரல் உயர்ந்திருந்தது. அவர் கையில் பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்பட்ட ஒரு ரிவால்வர். அதன் முனை அமைச்சரின் நெற்றிப் பொட்டில் பதிந்தது.

"இப்போது இந்த ஹெலிகொப்டர் கடத்தப்படுகிறது. யாராவது அசைந்தால் அமைச்சரின் மண்டையில் என் துப்பாக்கி வெடிக்கும்..."

"ஹா" என்று அலற ஆரம்பித்த அமைச்சரின் மனைவியைப் பார்த்து, "கத்தாதே பிணமே. கத்தினால் சுட்டுப் பொசுக்கி விடுவேன். எல்லோரும் துப்பாக்கிகளைக் கீழே போடுங்கள். ஆயுதம் எதுவும் கூடாது!" என்று உறுமினார் ஹேம்நாத்.

காவலர்களில் மூவர் துப்பாக்கிகளைக் கீழே கிடத்தினர். நான்காவது ஆள் ஹேம்நாத்தின் கட்சி. "அன்வர், பைலட்டை கவனி!" என்று அவர் சொன்னதும், அவன் துப்பாக்கியை பைலட்டின் பின்மண்டையில் பொருத்தினான்.

"அரவிந்த். ஹெலிகொப்டரைக் கிழக்குப் பக்கம் திருப்பு... நாம் ராமேஸ்வரத்திற்குப் போகிறோம். அங்கே காத்திருக்கும் படகில் பயணம் செய்யப்போகிறோம். அரவிந்த்! நான் சொல்வது காதில் விழவில்லையா?"

"ஒடக்கரையில்தான் ஹெலிகொப்டர் இறங்கும்!" என்று பைலட் இருக்கையிலிருந்து உறுதியான பதில் வந்தது.

"முட்டாள்... பிரகாஷ் குப்தாவின் உயிரே இங்கே ஊசலாடுகிறது. எத்தனை நாட்களாகத் திட்டமிட்டு இந்தத் தருணத்திற்காகக் காத்திருக்கிறேன். கெடுத்து விடாதே!"

"ஹேம்நாத்!" பிரகாஷ் குப்தா அதிர்ந்து போயிருந்தார். "என் செக்யூரிட்டி பற்றி தினம் தினம் கவலைப்படும் நீயா இப்படி? எங்கே என்னைக் கடத்திப் போகிறாய்? யாருக்காக? நான் இந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்பதை மறந்துவிட்டாய்!"

"அமைச்சர்! அமைச்சர்! என்று சொல்லிக்கொள்ள உங்களுக்கு வெட்கமாயில்லை? பணத்தை வாரி இறைத்து எதிர்க்கட்சிகளை உடைக்கிறீர்கள். புதிதாகப் பெயர் வாங்க ஆரம்பித்த கட்சியின் மாநிலத் தலைவரை ஆள் வைத்துக் கொன்றீர்கள். சுவிஸ் அக்கவுண்டில் பணம் சேர்த்தீர்கள். வெளிநாட்டு ஏஜென்ஸியிடம் பணம் வாங்கிக் கொண்டு இராணுவ இரகசியத்தையே தாரை வார்த்தீர்கள். எதிர்த்து எழுந்திருப்பவரை எல்லாம் அண்டர் கிரவுண்ட் லீடர் போல அடியாட்களை ஏவி தீர்த்துக் கட்டுகிறீர்கள். உங்கள் பிஸினஸிற்காக ஊரையே விலை பேசுகிறீர்கள்...!"

"பொய்!" அமைச்சர் உயிரில்லாத குரலில் மறுத்தார்.

"உங்கள் கூடவே இருக்கும் பர்ஸனல் செக்ரட்டரி நான். உங்கள் அந்தரங்கம் எல்லாம் எனக்குத் தெரியும், மினிஸ்டர் சார்... அரவிந்த்! நீ இன்னும் ஹெலிகொப்டரைத் திருப்பவில்லை... உனக்கு உயிர் மேல் ஆசை இல்லையா?"

"இல்லை!" அவன் பைலட் இருக்கையிலிருந்து எழுந்து, காவலனின் துப்பாக்கியைப் பறிக்க முட்டாள்தனமாய் முயற்சிக்க, "ஷூட் ஹிம்" என்று கத்தினார் ஹேம்நாத். காவலனின் துப்பாக்கி வெடித்தது. தோட்டாவை அவன் உடலுக்குள் துப்பியது.


"அரவிந்த்!" என்று பிரகாஷ் குப்தா பதறினார். அவன் பைலட் இருக்கையிலிருந்து துள்ளிக் கீழே விழுந்தான். அசைவற்றுக் கிடந்தான்.

ஹெலிகாப்டர் மலை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. துப்பாக்கி வெடித்து ஹேம்நாத்தின் கவனம் அதில் சிதறியிருந்த அந்தத் தங்கநொடி மோகனனுக்கு பெரும் வரமாக அமைந்தது. அவரது கை எப்போது மேலே எழும்பியது என்று புரியுமுன், அது முழு வேகத்துடன் ஹேம்நாத்தின் தோளில் இறங்கியது. இன்னொரு கையில் இருந்த துப்பாக்கி வெடித்து, பைலட் இருக்கையை அருகே நின்றிருந்த ஹேம்நாத்தின் கையாளான காவலனின் வயிற்றில் பாய்ந்தது. அவன் சுருண்டு விழுந்தான்.

மோகனனின் முதல் அசைவே மற்ற காவலர்களுக்குப் போதுமானதாயிருந்தது. பாதுகாப்புப் பயிற்சி பெற்றிருந்த அவர்கள் எழும்பிய வேகத்தில் ஹேம்நாத் திகைத்துப் போனார். அவர் கையிலிருந்து ரிவால்வர் எப்போது பிடுங்கப்பட்டது என்பது புரியுமுன், அவரை மடக்கி அழுத்தியிருந்தனர் மூவரும்.

"மைகாட்!" என்றார் அமைச்சர் பிரகாஷ் குப்தா, நெஞ்சில் கை வைத்து.

"ஏழு குண்டல வாடா..." என்று அலறி அவர் தெலுங்கு மனைவி அவரைப் பாய்ந்து அணைத்துக் கொண்டு அழ ஆரம்பிக்க, மோகனன் பைலட் இருக்கையில் உட்கார்ந்தார்.



"அரவிந்த்...அரவிந்த்..." அவனை காலால் புரட்டினார். தோளிலிருந்து குபுகுபுவென்று இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் மூச்சு நின்றுவிடவில்லை என்பதை ஏறி இறங்கிய நெஞ்சு அறிவித்துக் கொண்டிருந்தது.

மைக்கை அவன் தலையிலிருந்து உருவி அணிந்தார். "ஹலோ.. எமர்ஜென்ஸி... ஹெலிகொப்டர் இறங்கும் இடத்தில் ஆம்புலன்ஸ் தயாராயிருக்கட்டும்!" என்று உத்தரவிட்டார்.

மலையை வெகு சமீபித்து விட்ட ஹெலிகொப்டரை சாதுர்யமாக திசை திருப்பினார்.

•••

**தே**வேந்திரன் அதிர்ந்தான்.

மலையை மோதுவது போல அவ்வளவு அருகே சென்ற ஹெலிகாப்டர் மோதாமல் திடீரென்று ஏன் விலகி விட்டது? பைலட் இருக்கையில் யாரது? ஷிவா என்ன ஆனான்? மோகனன் எப்போது பைலட் ஆனார்? காவலர்கள் யாரையோ அழுத்திப் பிடிக்கிறார்களே, யாரை? ஷிவாவையா? ஐயோ, மாட்டிக்கொண்டு விட்டானா?

அவனுடைய இளைஞர்கள் ஒவ்வொருத்தராய் இப்படி விட்டில் பூச்சிகள் போல உபயோகமில்லாமல் போய்விடுகிறார்களே, என்ன அவலம் இது?

இனி முழுப்பொறுப்பும் அவனுடையதுதான். வேறு யாரையும் சார்ந்திருக்கப்போவதில்லை. அவனே செயல்படப் போகிறான்.

மிகவும் கடுமையான முகத்துடன் துப்பாக்கியை சரியான கோணத்தில் மண்டபத்தின் விளிம்புச் சுவரில் பொருத்தி மேடையைக் குறிபார்க்கலானான்.

(○—வரும்—○)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.** 03

# அரங்கம் அந்தரங்கம்



**வ**ரதராஜனுடைய கிண்ணத்தில் மூன்றாவது ரவுண்டை 'சர்' ரென்று ஊற்றினாள் மகாலட்சுமி.

"தாயே! மகாலட்சுமி! சர்வலோக நாயகி! இப்படி உட்கார்!" என்று அவளை இழுத்துப் பிடித்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டார் வரதராஜன்.

"அந்த மகாலட்சுமி சர்வலோக நாயகி. இந்த மகாலட்சுமி சர்வதேச நாயகி!" என்றார் மருதாசலம்.

"நமது புராண இதிகாசங்களில்கூட மது அருந்துவது வருகிறது...." என்று சொல்லிக்கொண்டே கிண்ணத்தோடு, தூரத்திலிருந்தவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார் ஜோசியர் சுப்பிரமணியம்.

"நான் சேலெஞ்ச் பண்ணுவேன். உலகம் தோன்றியபோதே மது தோன்றி விட்டது!" என்று கத்தினார் நாராயணசாமி.

"மது என்றும் நமது கிண்ணத்தைப் பார்த்து சுடும்; இந்தக் கிண்ணம் உமது" என்றார் வரதராஜன்.

"எல்லாமே எமது" என்று சொன்னபடியே, மூன்று பெண்களை ஒன்றாகக் கட்டிப்பிடித்தார் நாராயணசாமி.

கிண்ணம் ஏற ஏறத் தத்துவங்கள் ஆரம்பமாகிவிட்டன.

பகவத் கீதையிலிருந்து பர்மியப் பெண்கள் வரை, தத்துவ ஞானத்திலிருந்து தாய்லாந்துப் பெண்கள்வரை அவரவர் மனத்திற்குள் இருந்த எண்ணங்கள் எல்லாம் விசுவரூபமெடுத்து வெளியே வரத்தொடங்கின.

"தினசரி ஆட்டுக்கறியும், கோழிக்கறியும் சாப்பிட்டு அலுத்துவிட்டது. நான் இந்தோசீனாவுக்குப் போனபோது அங்கே குரங்கு மூளை சாப்பிட்டேன். மலேசியாவில் குயில் முட்டை சாப்பிட்டேன். குயில் முட்டையில்தான் 'வாய்வு' கிடையாது!" என்றார் நாராயணசாமி.

திடீரென்று என் ஞாபகம் வந்துவிட்டது வக்கீல் வரதராஜனுக்கு.

"என்ன கவிஞர்? நாங்கள் பாட்டுக்குப் பேசிக்கொண்டிருக்கிறோம், நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே? ஏதாவது பாடுங்கள்!"

**கவியரசு கண்ணதாசன்**

என்றார் என்னைப் பார்த்து.

"என் பாட்டைத்தான் நீங்கள் தினமும் கேட்கிறீர்களே? உங்கள் பாட்டைக் கேட்பதற்காகத்தான் நான் இங்கே வந்தேன்," என்றேன் நான்.

"பத்துப் பேர் குடித்துக் கொண்டிருக்கும் போது, குடிக்காதவர்களோ குறைவாகக் குடிப்பவர்களோ அங்கே இருக்கக் கூடாது. இருந்தால் மற்றவர்கள் உளறுவதையெல்லாம் அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள்!" என்றார் கமலநாதன்.

"நாம் என்ன பேசுகிறோம் என்பது நமக்கு நாளைக்கு ஞாபகம் இருக்கப்போவதில்லை. அதனால் தைரியமாகப் பேசுங்கள்!" என்றேன் நான்.

அதற்குள் மருதாசலத்திற்கு 'சுதி' ஏறி விட்டது.

'ராதா' என்ற இளம் பெண்ணை கையைப் பிடித்து இழுத்தபடியே, ஒரு அறைக்குள் நுழைந்தவர், திடீர் எனத் திரும்பி வெளியே வந்து, "மன்னிக்கணும், அது பெட்ரூம் இல்லை, பாத்ரூம். பெட்ரூம் எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.

வீட்டுச் சொந்தக்காரர் விவேகானந்தம். அப்பொழுதுதான் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்.

கறுப்புக் கணக்கு வெள்ளைக் கணக்கு எல்லாம் சரி பார்த்து அவர் வரத் தாமதமாகி விட்டது!

நெற்றியிலே விபூதி, சந்தனம், கழுத்தில் சிறிய நவண்டி மாலையோடு அவர் காட்சியளித்தார்.

சைவத் திருமேனியாகத் தோற்றமளித்தாலும்கூட, தீர்த்தம் சாப்பிடுவதில் அவரும் வல்லவர்தான்!

மருதாசலத்தையும் அந்தப் பெண்ணையும் மாடியிலே கொண்டுவிட்டு, விட்டு அவர் மீண்டும் கீழே வந்தார்.

அப்போதுதான் உள்ளே நுழைந்தார் தலைவர் தங்கசாமி.

எல்லோரும் அவரைப் பார்த்து 'லேட் லேட்' என்று கத்தினார்கள்.

"நான் கூட்டத்திற்கே லேட்டாகத்தான் போவேன். இங்கே எப்படி சீக்கிரம் வர முடியும்?" என்றார் அவர்.

தலைவர் தங்கசாமி பதினெட்டு வயதிலிருந்தே ஒரு அரசியல் வாதி.

'வீட்டிலே உருப்படாத பிள்ளையை அரசியலிலே விட்டுவிடு' என்ற பழமொழிப்படி அவரைச் சிறு வயதிலேயே அரசியலில் விட்டு விட்டார்கள் அவரது பெற்றோர்கள்.

மேடையில் அவர் ஒரு மணிநேரம், இரண்டு மணிநேரம் என்று பேசுவார்: பெரும்பாலும் அவருக்கே தான் என்ன பேசுகிறோம் என்பது தெரியாது.

ஆகவே ஜனங்களும் அவரது பேச்சு புரியாததைப் பற்றிக் கவலைப்படுவதில்லை!

வாரம் ஒருமுறையாவது அவர் டில்லிக்குப் போவார்.

அவரது அரசியலில் மிகவும் பிரதானமானது- டில்லியில் மந்திரிகளைச் சந்திப்பது. யாருக்காவது லைசென்ஸ் வாங்கிக் கொடுப்பது, அதற்காக ஐம்பதாயிரமோ, ஒரு இலட்சமோ பெற்றுக்கொள்வது.

அவருக்கு 'நாக்குச் செல்வன்' என்றொரு பட்டமும் உண்டு.

மூன்று முறை பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> –கவியரசு கண்ணதாசன்–

அவர் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றே தமிழ் மக்களின் அறிவுத் திறனை அளவிடுவதற்குச் சரியான அளவுகோலாகும்!

அவருக்குத் தனியாக எந்தத் தொழிலும் கிடையாது.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# காலம் செய்த கோலம்

"எதற்காகப் பிடித்தார்கள் என்பது எவருக்கும் தெரியாது."

பத்து வருடங்களை பயங்கர முகாம்களிலெல்லாம் கழித்து விட்டு, கடவுள் செயலால் வரதன் வெளியே வந்தான்.

பத்து வருடங்களும் அவன்பட்ட வேதனைகளையும், சோதனைகளையும் மனைவி, பிள்ளைகளுக்கு விடியவிடியச் சொன்னால் தான் அவனுடைய மனப்பாரம் குறையும் போல் இருந்தது.

மனைவி கமலத்தை எண்ணிப் பார்த்தான். பிள்ளைகள் இருவரையும் கட்டிப்பிடித்து முத்தமிடுவதைப்போல கற்பனை பண்ணிக்கொண்டான். அப்போது அவனுக்கு ஏற்பட்ட இன்பப் பூரிப்பை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.



தேநீர் கடையொன்றில் ரீமேக்கராகத் தொழில் புரிந்தபோதுதான் அவனைப் பிடித்தார்கள். அதைக் கேள்விப்பட்டதும் மனைவி கமலம் பதறியடித்துக்கொண்டு ஓடினாள். கணவன் வரதனை அவளால் பார்க்க முடியவில்லை.

ஏழைக்குடும்பம். ரீமேக்கராகத் தொழில் பார்த்து, ஏதோ கொடுப்பதை வாங்கி மனைவியின் கையில் கொடுப்பான். அதை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர்களால் எப்படிச் சீவிக்க முடியும்? கணவன் தொழில் புரியும் தேநீர் கடையில் கடையப்பம் சுட்டு வைத்தாள். அன்றாடச் சாப்பாட்டுப் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளவே இருவரது சம்பாத்தியமும் போதுமானதாகவிருந்தது.

இப்படி இவர்கள் வாழ்க்கை அல்லாடிக் கொண்டிருந்தபோதுதான் வரதன் பிடிபட்டான். ஏன் பிடித்தார்கள், எதற்காகப் பிடித்தார்கள்? என்ற எந்த விபரமும் எவருக்குமே தெரியாது.

கமலம் அழுதழுது ஓடாத இடமில்லை. பிடிக்காத பெரிய மனிதர்களின் கால் கையே இல்லை. எல்லோருமே கைகளை விரித்து விட்டார்கள். அப்படியான பெயருள்ள ஒருத்தரை நாம் பிடித்து வரவில்லையென்று எல்லாக் கேம்ப்காரர்களும் அரிச்சந்திரனானார்கள்.

காலம் மிக வேகமாக சோகங்களைச் சுமந்துகொண்டு ஓடிக்கொண்டேயிருந்தது.

கமலம், இரண்டு சின்னப் பிள்ளைகள் சீவியத்துக்கு வழியில்லை. சொந்தபந்தமென்று வாழ்ந்தவர்கள்கூட ஏழைகள்தான். கமலம் என்ன செய்வாள்! பிள்ளைகள் இருவரையும் கிணற்றினுள் தள்ளிவிட்டு, தானும் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாமா, என்று நல்லதங்காளின் பாணியில் சிந்தித்தாள், ஆனாலும் பெற்றபாசம் அவளை அப்படிச் செய்யவிடவில்லை.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி காலம் ஓடியது. தன் கணவன் வரதன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை அவளை விட்டு மெல்ல மெல்ல விலகிக் கொண்டது.

இந்த வேளையில்தான் கமலத்தின் உறவினர் ஒருவர் அவளுக்கு மறுதிருமணம் செய்து வைக்க முயற்சித்தார். "நல்ல பையன்- குடி., கூத்தி என்று எதுவும் இல்லை. வரதன் முன்பு வேலை பார்த்த அதே தேநீர் கடையில் அதே ரீமேக்கர் வேலை. உனக்குச் சம்மதமா?" என்று கேட்டார்.

"எனக்கு கலியாணமே வேண்டாம்!" என்று பல தடவைகள் கமலம் மறுத்தாலும் அவள் உறவுக்காரர் அவளை விடுவதாக இல்லை.

"இப்படி இருந்தால் எப்படி இந்தப் பிள்ளைகளை வளர்க்கப் போகிறாய்? எப்படியும் உனக்கு ஒரு ஆண்துணை கட்டாயம் வேண்டும். இல்லாவிட்டால் வீணாக உனக்கு கெட்டபெயர் ஊருக்குள் ஏற்படும். இப்படி எத்தனையோ பெண்களும், ஆண்களும் மறுமணம் செய்துகொண்டு வாழவில்லையா? இப்போது உனக்கு நான் பேசிவந்திருக்கிற பெடியனும் கலியாணம் செய்து மனைவியை இழநதவன்தான்! நீ வயசானவளில்லை. இளம் பெண்! என்னதான் இருந்தாலும் உன்னால் தனித்து இந்த உலகத்தில் எதிர்நீச்சல் போடமுடியாது. உன்னுடைய நன்மைக்காகவே இதைச் சொல்கிறேன். நன்றாக யோசித்துப் பார்த்து உன் முடிவைச் சொல்......" என்று உறவினர் கமலத்திற்கு 'வைன்' பண்ணிக்கொண்டேயிருந்தார்.

கமலம் யோசித்துப் பார்த்தாள். ஊரில் இரவு வேளைகளில் 'இவள் கணவன் இல்லாதவள்தானே!' என்ற நினைப்பில் எத்தனையோ பேர் கள்ளக்களவில் அவளை நெருங்கி வந்து சேஷ்டைகள் புரிய முயல்வதை அவள் எத்தனை நாளைக்குத்தான் தவிர்த்துக்கொள்ள முடியும்!

இந்த ஒரே காரணத்திற்காகவே கமலம் மறுமணம் செய்ய உடன்பட்டாள்.

தடபுடல் இல்லாமல் திருமணம் நடந்து, ஐந்து வருடங்களாகிவிட்டன. இப்போது அவள், பிள்ளைகள் ஏதோ கவலையின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திடீரென கணவன் என்றோ ஒருநாள் வருவான் என்று அவள் நினைக்கவில்லை! வரதனும், தன் மனைவி கமலம் மறுமணம் செய்திருப்பாள் என்று நம்பவில்லை. காலம் கமலத்தை மறுமணம் செய்வித்துவிட்டது.

**செ.குணரத்தினம்**

இதையெல்லாம் அறியாதவனாக வரதன் அந்தக் கிராமத்துக்கு வரும் ஒரேயொரு பஸ்ஸில் ஏறிக்கொண்டான். பக்கத்தில் இருந்த ஒரு முதியவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளாமல் மனைவி, பிள்ளைகளை சாடையாக விசாரித்தான்.

"ஐயோ தம்பி அந்தப் பிள்ளை கமலம் பாவம்- பிடிபட்டுப் போன கணவன் வருவான் வருவானென்று பல வருடங்களாகக் காத்துக் கொண்டிருந்தாள், பிடிபட்டவர்கள் மீண்டுவருவதாவது! அவன் வரவேயில்லை- அதனால் அவள் உறவினர்களின் விருப்பத்தின்பேரில் மறுமணம் செய்துகொண்டு நல்லபடி வாழ்கிறாள்."

வரதனுக்கு நெஞ்சு அடைத்து வருவது போலிருந்தது. சிந்தித்தான். 'வேண்டாம் சந்தோஷமாக வாழும் கமலத்தை குழப்பக் கூடாது. அவள், பிள்ளைகள் நல்லபடி வாழட்டும்.....' என்று ஆசாபாசங்களைக் கட்டுப் படுத்திக் கொண்டு பஸ்ஸைவிட்டு இறங்காமல் அப்படியே பயணித்துக் கொண்டிருந்தான்.

# கடன்

மெதுவாக உவர்மலை இறக்கத்தால் வந்து கொண்டிருந்தது, கந்தப்புவின் உடலைத் தாங்கிய அந்தப் பிண வண்டி.

'வீடியோ கமரா' வழிகாட்ட,

தேவாரப் பாடல்கள் அதைப் பின் தொடர,

சோளப் பொரிகள் பூவெனத் தூவ,

எதிலுமே நாட்டமற்றவர்கள் போல்- சிந்தனைகள் அனைத்தும், தத்தமது காரியங்களில் எண்ணம் கொண்டு,

'ஏனோ தானோ' என கடமைக்காய்- ஜனங்கள் இந்த இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அதே உணர்வுகளோடுதான் கடை முதலாளி வேலுவும் கலந்து கொண்டிருந்தாலும், மற்றவர்களோடு ஒப்பிடுகையில் சற்று அதிகமாகவே கந்தப்புவைப் பற்றி அறிந்திருந்தார் அவர்.

ஏன்? அவரையறியாத ஓர் உரிமையும் கூட கந்தப்புவில் சிறிதளவு கலந்திருந்தது.



காலம் காலமாய் சோறு போட்டுவந்த அந்த நீர்ப்பாய்ச்சல் காணிகளையெல்லாம் விற்று தனது மைந்தர்கள் இருவரையும் வெளிநாட்டிற்கு அனுப்பியிருந்தார் கந்தப்பு.

மனைவி இல்லா தனிமையும், புதல்வர்களின் கட்டாய தெண்டிப்பும், அவரை, இந்த உவர் மலையில்- அதுவும் வேலுவின் கடைக்கு முன்னால் உள்ள சிறிய அறையில் வாடகைக்கு குடியமர வைத்தது.

தனிமையிலேயே ஓர் இனிமை!

மைந்தர்களின் வெளிநாட்டுப் பணம்! ஆரம்பத்தில் கந்தப்புவை- அதுவும் இந்த வயதில், ஒருவகைக் கலகலப்பில் ஆழ்த்தியிருந்தது.

காலம் சொல்லாமல் நகர்ந்திருந்தது.

'பார்சலில் பெண்கள் அனுப்பப்பட்டு, புத்திரர்களுக்கு திருமணம் நடந்தேறியது.

இப்போ, கந்தப்புவிற்கு பணம் வருவதிலும் தாமதம்! தொகையிலும் மாற்றம்!

மகன்மாரின் தொடர்பிலும் தொய்வு!

'பசியையும் பஞ்சத்தையும் பார்ப்பவன் கூட பாவவாளி. என்ன செய்வது? முதலாளி வேலுவின் நேர்பார்வையிலல்லவோ கந்தப்பு இருக்கிறார்!

இவைகளெல்லாம் புதிதாக வேலுவுக்குப் படவில்லை.

எத்தனையோ வெளிநாட்டுக்காரர்களின் 'வாழ்க்கை வண்டவாளங்களை'க் கண்டவர் அவர்.

எப்படித்தான் இருந்தாலும் அவரது வயதிற்குள் அனுபவித்த 'அகதிகள்' வாழ்வு- அவரைப் புடம்படுத்தியிருந்தது.

இப்போது, கந்தப்புவின் பிரேதம் மயானத்தினூடாக புதைகுழியை அண்மித்து விட்டது.

இறுதிக் கடனாக வந்தவரெல்லாம், பிடி மண் போட்டுக் கொண்டிருந்தனர்.

வேலு முதலாளியும் கையில் மண்ணை அள்ளிக்கொண்டார்.

இதயத்தில் ஓர் குத்தல்! அநாதரவற்று இறக்கும் அகதிகளில் இதுவும் ஒரு 'ரகம்' கந்தப்பு மரணிக்க ஐந்து நாட்களுக்கு முன் பேசியவைகள் நெஞ்சில் நிழலாடியது! கண்கள் குளமாகியது!

"தம்பி வேலு! சொந்தங்களோட இருந்து கஞ்சித் தண்ணியும் குடிக்காமல், என்ர புள்ளைகளின்ர கதையக் கேட்டு வந்து, கேவலப்பட்டுப்போயிற்றன். தொடர்பில்லாத உன்னட்ட நான் பட்ட கடனை இந்த ஜென்மத்தில அடைக்க ஏலாது. இத 'அகதிகளுக்கு' செய்த கடனா நெனச்சிடு. ஒண்டு மட்டும் கேட்கிறன். நான் செத்தா என்ட சவத்தை நல்ல முறையில அடக்கி, அதின்ர 'வீடியோ கொப்பி'யை புள்ளைகளுக்கு அனுப்பிடு! அப்பா அகதிதான்- ஆனால் அநாதையில்ல எண்டு நெனைக்கட்டும்!"

**கனகசபை தேவகடாட்சம்**

# குழந்தை

வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம் கேட்டது. சங்கர் ஜன்னல் வழியாகப் பார்த்தான். ஆனந்தி தான் ஆட்டோவிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள்!

அவள் முகத்தில் சிரிப்பு!

அப்படி என்றால் அவள் போன காரியம் பழமா?

சங்கர்-ஆனந்தி தம்பதியினருக்கு கல்யாணமாகி பல வருடங்களாகியும் குழந்தை பிறக்கவில்லை. ஆனந்தியை குழந்தை ஆசை மிகவும் வருத்தியது. அதனால் கணவரிடம் ஒரு யோசனை கூறினாள்.

அவள் அக்கா பவானிக்கு இரண்டு பெண் குழந்தைகள். அவர்களில் ஒரு குழந்தையை தத்தெடுத்து தான் வளர்க்க விரும்புவதாகச் சொன்னாள். "யார், தான் பெற்ற குழந்தையை மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள்?" என்றான் சங்கர்.

அக்காவிடம் சென்று கேட்டு விட்டு இதோ சிரிப்பு முகத்துடன் வந்து கொண்டிருக்கிறாள் ஆனந்தி!

"என்ன சொன்னா உன் அக்கா?" என்று கேட்டான் சங்கர்.

"ஒரு குழந்தையைக் கூட தர மாட்டாளாம்!" என்றாள் ஆனந்தி.

"அப்போ எப்படி சிரிச்சுக்கொண்டே வாறியே?"

"சந்தோஷத்துலே மட்டும்தான் சிரிக்க வேணுமா என்ன? விரக்தி ஏமாற்றத்துலே கூடச் சிரிக்கலாமே!" என்றாள்.

அப்போது....

"ஆனந்தி!" என்று அழைத்தபடி வந்தாள் அவள் அக்கா பவானி. அவளுடன் அவள் கணவன் கண்ணன். இரு குழந்தைகள் உமா, உஷா!

"ஆனந்தி இப்போ உனக்கு என் ரெண்டு குழந்தைகளுமே கிடைக்கப் போறது!" என்றாள் பவானி.

தொடர்ந்து "என் கணவருக்கு அமெரிக்காவுலே வேலை கிடைச்சிருக்கு- ஆனந்தி... நாங்க உடனே புறப்பட்டு போயாகவேணும்.. குழந்தைகள் படிப்பு தடைப்படாம இருக்க உஷாவையும், உமாவையும் உன்னிடமே விட்டுட்டுப் போகப் போறோம்!". ஆசையுடன் குழந்தைகளைக் கட்டிக் கொண்டாள் ஆனந்தி.

"இந்த வருஷ் படிப்பு முடிந்ததும் குழந்தைகளை அமெரிக்காவுக்கு நாங்க கூட்டிக்கிட்டுப் போயிடுவோம்!" என்றாள் பவானி.

சிறிது ஆசைதான் நிறைவேறியிருக்கிறதா?

குழந்தை உஷா "சித்தி" என்று அழைத்தபடி ஆனந்தியிடம் வந்தாள்.

"சித்தி கவலைப்படாதே!" என்றாள் உஷா. அவள் பேச்சில் ஒரு உறுதி தெரிந்தது.

பவானியும் அவள் கணவனும் அமெரிக்கா சென்று விட்டார்கள். அங்கேயே தங்கிவிடப் போகிறார்களாம்.

உஷாவும், உமாவும் 'சித்தி, சித்தி' என்று ஆனந்தியிடம் ஒட்டிக் கொண்டனர். குழநதைகள் இருவருக்கும் வேண்டியதை எல்லாம் வாங்கிக் கொடுத்தாள் ஆனந்தி.



**சுகந்தி**

அவர்களிடம் அன்பு மழை பொழிந்தாள்.

உஷா புத்திசாலி. அவள் பேச்சு ஒவ்வொன்றும் சின்னக் குழந்தை பேசுகிற பேச்சு மாதிரியே இருக்காது. அனுபவம் நிறைந்த ஒரு பெண்மணி பேசுவது போலவே இருக்கும்.

நாட்கள் ஓடிவிட்டன, வேகமாய். ஒரு நாள் அமெரிக்காவிலிருந்து கடிதம் வந்தது. பவானியும், கண்ணனும் வருகிறார்களாம். இங்கே வந்து திரும்பி அமெரிக்கா செல்லும் பொழுது குழந்தைகளைத் தங்களுடன் அழைத்துச் செல்லப் போகிறார்களாம்.

'ஏதாவது அற்புதம் நிகழ்ந்து குழந்தை உஷா தன்னுடனேயே இருக்கும்படி நடந்து விடக்கூடாதா?' என்றெண்ணினாள் ஆனந்தி.

அது நடந்தே விட்டது.

அமெரிக்காவிலிருந்து பவானியும் கண்ணனும் வந்துவிட்டார்கள். குழந்தைகளிடம் ஆனந்தி மிகவும் பிரியமாக இருப்பதைப் பார்த்தார்கள். குழந்தைகளை அவளிடமிருந்து எப்படிப் பிரிப்பது?

உஷா அவர்கள் எதிரே வந்து "அம்மா... அப்பா... நான் அமெரிக்கா வர விரும்பவில்லை. இங்கேயே இருக்கப் போகிறேன். நம் நாட்டு பண்பாடு, கலாசாரம் ஆகியவைகளோடு முழுக்க முழுக்க ஒரு தமிழ்ப் பெண்ணாகவே இருக்க நான் விரும்புகிறேன். அமெரிக்காவில் நம் நாட்டு பண்பாடு, கலாச்சாரத்தை நாம் எவ்வளவுதான் கட்டிக் காத்தாலும் சூழ்நிலை, பழக்க வழக்கம் எல்லாம் அமெரிக்க கலாசாரத்தை நம்மீது படியவே வைக்கும். அதையும் விட முடியாமல் இதையும் இழக்க முடியாமல் ஒரு கலப்படமான வாழ்க்கை வாழ்வதை விட தமிழ்ப் பெண்ணாகவே இருப்பது நல்லதல்லவா?" என்றாள்.

அவள் பேச்சில் ஓரளவு நியாயம் இருக்கவே பவானி உஷாவின் கையை தங்கை ஆனந்தியின் கையோடு இணைத்தாள். ஆனந்தி சிரித்தாள்.

"இதென்ன சிரிப்பு?" என்று கேட்டான் சங்கர்.

"இதுதான் உண்மையான சந்தோஷமான சிரிப்பு!" என்றாள் ஆனந்தி மகிழ்ச்சியாக.

# இரண்டாவது அம்மா

வாசலில் கார் வந்து நின்றது. கார் சத்தம் பெண் வீட்டார் கவனத்தைத் திருப்பியது. வீட்டிற்குள் இருந்த பெண்ணின் தந்தை குமரேசன் வெளியே வந்தார். அனைவரையும் அன்புடன் வரவேற்றார். மாப்பிள்ளை வீட்டாரும் குதூகலத்துடன் வீட்டிற்குள் சென்றனர்.

சேகர், ஏற்கனவே திருமணமானவன், திருமணமான இரண்டே வருடத்தில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றுவிட்டு கண்ணை மூடிவிட்டாள் சேகரின் மனைவி உமா.

ஊரே மெச்சிக் கொள்ளும் அளவிற்கு சேகரும் உமாவும் தாம்பத்தியம் நடத்தினர். இதைக் காணச் சகிக்காத ஆண்டவன் உமாவை தன்னிடம் சேர்த்துக்கொண்டான்; சேகர் தனிமரமானான்.

தனக்காக இல்லாவிட்டாலும் தன் குழந்தைக்காக வாழ்ந்து தானே தீர வேண்டும்! வாழத் தொடங்கினான் சேகர். நாளடைவில் அவன் குழந்தைக்கு தாய்ப்பாசம் தேவைப்பட்டது. அதற்குத்தான் இந்தக் கல்யாணப்படலம்.

சேகரின் மடிமீது உட்கார்ந்திருந்தாள் குழந்தை மஞ்சு. ரேவதி பார்த்ததும், மஞ்சு அவளை 'மம்மி...மம்மி' என்று கூறியவாறு கட்டியணைத்து முத்தமிட்டாள்.




"அம்மான்னு சொன்னவுடனே எப்படியொரு பாசம் பார்த்தீங்களா?" தன் பேத்தியை மெச்சிக்கொண்டாள் சேகரின் தாய்.

"மாப்பிள்ளைக்கு பொண்ணை பிடிச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கணும்". ஆவலுடன் கேட்டார் பெண்ணின் தகப்பனார்.

"மஞ்சுவுக்குப் பிடிச்சிப் போச்சென்றால், சேகருக்கு பிடிச்ச மாதிரிதானே! முகூர்த்த திகதியை பார்க்க ஆரம்பிக்க வேண்டியது தான் மிச்சம்!" ஒரே மூச்சில் பேசி முடித்தார் தரகர்.

அனைவரும் சேகரின் பதிலுக்காக காத்திருந்தனர்.

"நான் இந்த கல்யாணம் செய்துக்க காரணமே, எனக்கு மனைவி வேணுமுங்கற ஆசையில் இல்லே. என் குழந்தைக்கு ஒரு நல்ல தாய் வேணுமேன்னுதான். என்னால என் உமாவோட நினைவிலேயே வாழ்ந்துட முடியும். ஆனா என் பெண்ணால ஒரு தாய் இல்லாம வாழ முடியாது... அதனால..." என்று இழுக்கும்போது-

"உங்க மனசுப்படியும், உங்க குழந்தை மனசுப்படியும் நிச்சயம் என் பொண்ணு நடந்து கொள்வா... ஏன்னா என் பொண்ணும் ஒரு தாயில்லாதவதான். அதனால உங்க குழந்தையிட ஏக்கத்தை நிச்சயம் தீர்த்து வைப்பா..."

தாம்பூலங்கள் கைமாறின. கல்யாண திகதியும் நிச்சயிக்கப்பட்டது. பத்திரிகையும் அச்சடிக்கப்பட்டது. மஞ்சு ரேவதியுடனே இருந்தாள். கல்யாண நாளும் வந்தது.

வாசலில் அனைவரும் மாப்பிள்ளையின் வரவுக்காகக் காத்திருந்தனர். ஆனால் மாப்பிள்ளையோ வரவில்லை. அவர் லொறியில் அடிபட்டு இறந்த செய்தி மட்டும் வந்தது.

செய்வதறியாது அனைவரும் திகைத்து நின்றனர். மங்கள வாத்திய சத்தமும் நின்றது. எழும்பிய வேத ஒலிகளும் நின்றன. அனைவருக்கும் மூச்சு ஒரு கணம் நின்று திரும்பியது. மணக்கோலத்தில் இருந்த ரேவதியின் கண்ணில் கண்ணீர் துளிகள் ஆறாக ஓடின.

"ஏன் மம்மி அழறீங்க...? அழாதீங்க மம்மி. நீங்க அழுதா நானும் அழுவேன்." என்று ரேவதியைக் கட்டி பிடித்தபடியே அழ ஆரம்பித்தாள் மஞ்சு.

ரேவதி மஞ்சுவின் கண்ணீரைத் துடைத்தாள்.

மஞ்சு ரேவதியின் கண்ணீரைத் துடைத்தாள்.

மஞ்சுவைத் தூக்கி வைத்தபடி அனைவரையும் பார்த்தாள் ரேவதி. வந்திருந்தவர்கள் மஞ்சுவையும் ரேவதியையும் மாறி மாறிப்பார்த்தனர்.

"ஏன் நீங்க இப்படி அழறீங்கன்னு எனக்குத் தெரியலை... அவர் என்னை கல்யாணம் பண்ணிக்க காரணமே, அவர் பொண்ணுக்கு நான் தாயா இருக்கணும் எங்கிறதுதான். அந்த ஆண்டவனால என்னை அவருக்கு தாரமா இல்லாதபடி செய்யலாம். ஆனா இந்தக் குழந்தைக்கு தாயா இல்லாதபடி செய்ய முடியாது. இனிமேல் நான் இந்தக் குழந்தைக்குத் தாய். தாயாகவே வாழப்போறேன்." என்று கூறியவளை துக்க கண்ணீரோடு பார்த்த அனைவரும் ஆனந்தக் கண்ணீரோடு பார்த்தனர்.

www.padippakam.com



# கண்ணீர் பூக்கள்

தருவது ரதிகன்

கூடிக் குலாவ
நேரமில்லை!

கொஞ்சி மகிழ
அவகாசமில்லை!

இதழ் தரு அமுதும்
இதம் தரு அணைப்பும்
உண்டும், உணர்ந்தும்
மகிழ்ந்திட நேரமில்லை!

வாளுக்கு வேலை
வந்திருக்கிறது!
தோளுக்கு கடமை
வந்திருக்கிறது!

சோழ மண்டலத்தில்
பல்லவர் படையெடுப்பு!

கோலத் தமிழ் மண்ணை
பறித்து ஆள வருகின்றார்.
மாள அஞ்சாத
வேழ நிகர் வீரர்
களம் காண விரைகின்றார்!

பெண்களும்
போருக்குத் தயார்தான்!
ஆனால் புறப்பட
அப்போது அனுமதியில்லை!

வீட்டுக்குள்
பெண்ணை பூட்டிவைத்து
வேடிக்கை பார்த்த
காலம் அது!

அப்போதும்
பெண்ணுக்குள் வீரம்
இருந்தது!
வெளிப்படுத்த வேளை
வரவில்லை!

களம் செல்லும்
காதலனுக்கு
கட்டி முத்தம்!
திரும்பி வரும்வரை
காவல் நித்தம்!

மாறனுக்கும்
அவன் காதலி
திலகமிட்டாள்!

போகத்தான் வேண்டுமா?
என்று கேட்கக்கூடாது.
போய்த்தான் தீரவேண்டும்!
ஆனாலும் மனம் கேட்குமா?

"இன்று போகத்தான்
வேண்டுமா?"
என்று கேட்டாள்.

"நாளைவரை நம் எதிரி
பொறுத்திருப்பானா?
மண் மாதா அழைக்கிறாள்
கண் கலங்கலாமா நீ?

கண்ணுக்கு நிகர்
நம் மண்!

உயிருக்கு நிகர்
நம் மானம்!
இரண்டையும் காக்க
திரண்டெழும் வீரர்
தாமதித்து நிற்கலாமா?"

அவளை ஆதரவாக
அணைத்துக் கொண்டான்!

மாலை மாற்றியது
இன்று மாலைதான்!

ஒருவருக்கொருவர்
பரிமாறிக்கொள்ளும்
முதலிரவை வரவேற்க
கனவுகளுடன் காத்திருந்தனர்!

பகல் இரவு
பாராத போர் முழக்கம்
முன்னிரவில் ஒலித்ததனால்
முதலிரவு
முறிந்த இரவாகியது!

பஞ்சாமிர்தத்தை
பாதியிலே பறித்தது போல்
வஞ்சகரின் படையெடுப்பால்
நெஞ்சகத்து ஆசைகள்
நிறைவேறாது நின்றன!

அவள் இதழ்கள்
அவன் முகம் எதிரே
மலரத்துடிக்கும் மொட்டுகளாக
துடித்தன!

முத்தமிட அவன்
உதடுகளுக்கும் மோகம்தான்!

ஆனால், அவனுக்கோ
முன்னுரையை மட்டும்
எழுதிவிட்டு செல்ல
இஷ்டமில்லை!

சுவைக்கப்பட்ட
இதழ்கள்
மீதிக் கதையறிய
சொக்கி நிற்கும்!

தூண்டப்பட்ட
மோகத்தீ
பற்றிப்படர
பஞ்சு தேடும்!

ஆசைக்கு
ஆப்பு வைத்தான்!

விடை பெற்று
கிளம்பிச் சென்றான்!

தனிமையில் அவள்
தணலில் இட்ட
புழுவானாள்!

புயலில் சிக்கிய
தனிமரமானாள்!

முதலிரவுக்கு முன்பே
முதல் பிரிவு!

அந்த சோகத்திலும்
எதிரிகள்மீதே
அவள் கோபம்
திரும்பியது!

சாம்ராஜ்ய கனவில்
படை எடுக்கிறார்கள்!

நம் வரலாற்றை
அடிமைகளின் வரலாறாக
மாற்றப்பார்க்கிறார்கள்!

நம் பாச பூமியை
பணிந்தவர்களது பூமியாக
கட்டியாள நினைக்கிறார்கள்!

நாடு முக்கியம்
வீடு இரண்டாமிடம்!

நாடு நலம்பெற
வீடு வளம் பெறும்!

அந்நியர் இங்கு
கோலோச்சினால்
எம்மவர் தலை நிமிர்ந்து
வாழ்வது எப்படி?"

அவள் மனதை
தேற்றிக் கொண்டாள்!

காயப்பட்ட மனதுக்கு
மனம் சொன்ன நியாயம்
வலி தணித்தது!

போர் முழக்கம்
அவள் செவியில்
வந்து விழுந்தது!

அவள் தூங்கவில்லை.
பொழுது புலரும்
போர் முடியும்
என்று காத்திருந்தாள்!
கண் பூத்திருந்தாள்!

பொழுது புலர
மறுத்தது!
வற்றாது இரத்தம்
பாய்ந்ததால்
வானம் கூட
சோகம் அனுஷ்டித்தது!

பூமியின்
மேனியை போர்
களங்கம் செய்கிறது!
இரத்தத்தாலும், சிதறிய
அங்கங்களாலும்
பூமித்தாயை
புலம்ப வைக்கிறது!

பூமியின் சோகத்தை
வானமும்
பகிர்ந்து கொண்டது!

இருண்ட வானம்
போருக்கு எதிராக
பூமி தூக்கிப் பிடித்த
கறுப்புக் கொடி
போன்று காட்சியளித்து!

"போரை திணித்தவர்களையே
பூமி வெறுக்கும்!

பொறுத்துப் பார்த்து
பொங்கியவர்களை
பூமி மதிக்கும்!"
அவள் மனதுக்குள்
ஆறுதல்பட்டாள்.

மாலையில்தான்
மலையைவிட பாரமான
செய்தி வந்தது!

களமாடியபோது
மாறனை
மரணம் தழுவிக்கொண்டது!

களத்து மேட்டிலே
கௌரவப் பிரஜையாக
உன் துணைவன்
கண்மூடி விட்டான்!

இடியை அவள்
இதயம் தாங்கியது
பேராச்சரியம்!

உடலைக் காண
களம் தேடி போனாள்!

அங்கே அவள் கண்ட
காட்சியால்
சோகத்தின் மத்தியிலும்
பெருமை பொங்கியது!

மாறன் உடல் மீது
சோழ மன்னன்
கண்ணீர் சொரிந்து
கலங்கி நின்றான்!

எதற்கும் அஞ்சாத
வீரமன்னன்
அழுது நிற்பதானால்
அதற்கு காரணமானவன்
எத்தனை பெரிய வீரன்?

அந்தப் பாக்கியம்
என் துணைவனுக்கா?

தலைவன் கண்கள்
கண்ணீர் பூ சொரிய
தன்னுயிர் பிரிந்தவனின்
மரணம் பெருமைமிக்கது!

அவள் சோகத்தில்
பாதி குறைந்துபோனது!

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் -சாக்காடு
இரந்து கோள் தக்கது உடைத்து"

அதிகாரம் 78 குறள்: 780

இலக்கிய நயம்

# சிந்தியா பதில்கள்



பூஜா பத்ரா

★ சிந்தியா! யாழ் குடாநாட்டில் தமிழர் காணிகள் பறிபோக உள்ளதாக தெரிந்தும் தமிழ்க் கட்சிகளுக்கு அது ஒரு அவசரப் பிரச்சனையாகத் தெரியவில்லையே?

சி.தர்மரத்தினம், கொழும்பு-06.

அவர்களது பிரச்சனையெல்லாம் அடுத்து வரும் தேர்தல்களில் யாரை யார் வெட்டி ஓடலாம் என்பதுதான்! அறிக்கைகளோடு நிறுத்திக் கொள்ளுவார்கள்!

✦✧

★ சர்வமதத் தூதுக்குழு என்ன செய்கிறது?

கே.ரகுநேசன், வவுனியா.

'யுத்தகோஷ' படை நடவடிக்கையால் பல்லாயிரம் மக்கள் அகதிகளானதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது! சமாதானம் கேட்டு புலிகளிடம் போனார்கள். புலிகள் "தயார்" என்றனர். ஆனால் அரசு படை அனுப்பியிருக்கிறது. இந்த மதகுருமார் குழு ஏன் மௌனமாக இருக்கிறது?

✦✧

★ கடும் குற்றம் புரிந்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுவது நியாயம்தானே?

எம்.தரன., அவிசாவளை.

நியாயம்தான்! ஆனால் இப்போது குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவது பற்றித்தானே தீர்மானித்துள்ளனர்! ஏற்கனவே 'சமாதான யுத்தத்தில்,' வடக்கு-கிழக்கில் குற்றமற்றவர்களுக்கு மரண தண்டனை வழங்கிக்கொண்டுதானே இருக்கிறார்கள்?

✦✧

★ மலேசியாவில் புலிகளுக்குத் தடை போடப்படுமா?

கா.கமலேஸ்வரன், திருமலை.

மாட்டாது! சமீபகாலமாக மலேசியாவில் புலிகளுக்கு ஆதரவு வளர்ந்து வருகிறது. வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் அங்கு விரைந்தாலும் விரையலாம்!

✦✧

★ மனித வாழ்க்கையின் ஆதாரம் எது சிந்தியா?

மா.அருந்ததி, அட்டன்.

நம்பிக்கை!

நடுக்கடலில் பாய்மரக் கப்பல் ஒன்று சென்று கொண்டிருக்கிறது.

திடீர் என்று சூறாவளி, பேய்க்காற்று, கப்பல் தடுமாறுகிறது. திசை தவறுகிறது.

கடைசியில் ஒரு பாறைமீது மோதி நொறுங்குகிறது. ஒரே ஒருவன் மட்டும் உயிர் தப்பினான். ஒரு மரத்துண்டைப் பற்றிக் கொண்டு நீந்திச் சென்றான்.

ஒரு சின்னத்தீவு கண்ணில் படுகிறது. 'பரவாயில்லை கடவுள் காப்பாற்றிவிட்டார்.' என்று நினைக்கிறான்.

அந்தத் தீவில் கரையேறுகிறான். அங்கு வேறு மனிதர்களே கிடையாது.

கிடைத்த இலை, தழைகளைப் பொறுக்கி ஒரு சிறு குடிசையை உண்டு பண்ணினான்.

அங்கே கிடைத்ததை உண்டான். கடவுளைத் திட்டினான். "என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டாயே!"

ஒருநாள் அவன் வெளியே சென்றிருந்த போது, அந்தக் குடிசை தீப்பற்றி எரிந்தது.

மூங்கில்களின் உராய்வினால் ஏற்பட்ட தீ விபத்து அது.

"அடப்பாவி கடவுளே! இந்தக் குடிசை கூட உன் கண்ணை உறுத்தியதா? இதையும் எரித்துவிட்டாயே!" என்று புலம்பினான்.

சற்று நேரத்தில் நாலைந்து பேர் அங்கு வந்தனர்.

"நாங்கள் இந்தப் பக்கமாக மீன்பிடிப் படகில் வந்தோம். இந்தத் தீவிலே புகை தெரிந்தது. யாரோ இருக்கிறார்கள், உதவி கோருகிறார்கள் என்று பார்க்க வந்தோம்!" என்றனர்.

அவன் அப்போது கூறினான், "கடவுளுக்கு நன்றி!"

✦✧

★ சமீபத்திய படங்களில் தமாஷ் காட்சிகளில் உங்களைக் கவர்ந்தது யார்?

எ..ஹசன், கொழும்பு-13.

'நினைவிருக்கும்வரை' படத்தில் ஜானி வீட்டுக்கு வழி கேட்டு தர்ம அடி வாங்கும் விவேக்!

✦✧

★ பிரசாந்த் மளமளவென்று முன்னேறி வருகிறாரே?

கி.உ.ருத்திரன், தெகிவளை.

பிரசாந்தின் ராசியை ஜீபி. ஜீமு என்று இரண்டாக பிரிக்கலாம். ஜீபி.தான் வசந்த காலம். (ஜீபி.- ஜீன்சுக்குப் பின்னர்)

✦✧

✦✧

★ தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டால் அமைச்சர்கள், எம்.பி.களது குடியுரிமை பறிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளாரே?

எல்.தேவராஜ், கொழும்பு-09.

குண்டர்களை மிரட்டுவதுபோல அமைச்சர்களைக்கூட எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது என்பதற்கு அந்த மிரட்டலே சாட்சி! இப்படியெல்லாம் மிரட்டாவிட்டால் மோசடியில் ஈடுபடுவார்கள் போல் அல்லவா இருக்கிறது!

✦✧

★ ஞாபக மறதியைப் போக்க என்ன வழி?

எஸ்.சுமதி, கம்பளை.

ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்வதுதான் வழி.

ஒரு தம்பதி படம் பார்க்க திரையரங்குக்குப் போயிருந்தனர்.

திடீரென்று கணவன் கூறினார், "நீ படம் பார்த்துக் கொண்டிரு. நான் வீட்டுக்குச் சென்று பார்த்துவிட்டு வருகிறேன். திருடர் தொல்லை அதிகமான காலம் இது!"

அதற்கு மனைவி கூறினார்:

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். பொக்கட்டில் சாவி பத்திரமாக இருக்கிறதா என்று பாருங்கள், அது போதும்!"

"பார்த்தேன், இருக்கிறது, அதுதான் பயமாக இருக்கிறது!" என்றார் கணவர்.

மனைவிக்கு ஆச்சரியம். "இருக்கும்போது என்ன பயம்? தைரியமாக இருங்கள்:"

அதற்கு கணவர் சொன்னார்:

"எப்படித் தைரியமாக இருக்க முடியும்? இங்கே பத்திரமாக இருப்பது சாவி அல்ல..."

"பின்னே?"

"பூட்டு!"

✦✧

★ சகோதரர்களுக்குள்கூட சொத்துப் பத்து தகராறு ஏற்படுகிறதே? ஆசைதானே காரணம்?

ஆர்.மணிமேகலை, மட்டக்களப்பு.

சட்டத்தரணிக்கு உதவுவதும் காரணமாக இருக்கலாம். எப்படி என்கிறீர்களா?

"என்ன தனியாக அமர்ந்து சிரிக்கிறீர்கள்?"

"சிந்தித்துப் பார்த்தால் சிரிப்பு வருகிறது!"

"ஏன் அப்படி, எனக்கும் சொன்னால் சிரிக்கலாமே?"

"ஒரு அண்ணன், தம்பி இரண்டு பேருக்குள் சொத்து தகராறு. உண்மையிலேயே அந்தச் சொத்து பூராவும் எனக்கு வந்து சேரவேண்டியது. ஆனால் அவர்கள் இரண்டுபேரும் அடித்துக் கொள்கிறார்கள்."

"அப்படியானால் நீங்கள்?"

"சட்டத்தரணி!"

✦✧

★ சர்வமத தூதுக் குழுவின் விஜயத்தில் அரசின் பங்கு என்ன? அரச தூண்டுதலில் ஆழம் பார்க்கப் போனதாக இராஜதந்திரி கூறியுள்ளாரே?

ஆர்.வில்வராஜன், மன்னார்.

சர்வமத தூதுக்குழுவில் அங்கம் வகித்த அனைவரையும் இராஜதந்திரி குறை கூறவில்லை. ஒரு சிலர் அரச பின்னணியில் சர்வமத தூதுக்குழுவில் இடம்பெற்றனர். சமாதானத்தில் உண்மையாகவே அக்கறை கொண்ட மதகுருமார்களை தமது நலன்களுக்காக அவர்களே அறியாதவாறு பயன்படுத்த அரச சார்பு சக்திகள் திட்டமிட்டன. ஆனால் அக் குழுவில் சென்ற மதகுருமாரில் சிலர் வெளியிடும் கருத்துக்கள் அரச சார்பு சக்திகள் எதிர்பார்த்ததுக்கு மாறான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. எனினும் சென்று வந்த குழுவில் ஒரு சிலர் வாயே திறக்கவில்லை என்பதையும் கவனிக்க!

✦✧

★ 'ஒருவன்' படத்தில் சரத்குமாருடன் நடிக்கும் பூஜாபத்ரா, பூஜாபட்டின் சகோதரியா?

கிரவிச்சந்திரன், கொழும்பு-08.

சகோதரியல்ல, சக நடிகை என்று வேண்டுமானால் கூறலாம்.

✦✧

★ கண்டு கொண்டேன் படத்தின் நாயகி யார் தபுவா, ஐஸ்வர்யா ராயா?

பி.சிறீவாசன், திருமலை.

ஐம்பதுக்கு ஐம்பது!

✦✧



தபு

ஸ்போர்ட்ஸ்

# இது மூன்றாவது தடவை

ஏழாவது உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு இந்திய அணிக்கு தலைமை வகிக்க முஹமட் அஸாருதீன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். உலகக் கோப்பை போட்டிக்கு அஸாருதீன் இத்துடன் மூன்றாவது தடவையாக தலைமை தாங்குகிறார்.



உலகக் கோப்பைக்கு முன்னர் இந்தியா பங்குபற்றும் இரண்டு (இந்தியா, ஷார்ஜா) முத்தரப்பு ஒரு நாள் போட்டிகளுக்கும் அஸாருதீனே தலைமைத் தாங்குகிறார்.

இந்திய அணியின் துணைத் தலைவராக சுழல்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே பொறுப்பேற்கிறார். முதலில் துணைத் தலைவர் பதவிக்கு சச்சின் டெண்டுல்கரின் பெயரை இந்திய கிரிக்கெட் அணித் தேர்வுக் குழு பரிந்துரைத்தது. ஆனால் டெண்டுல்கர் இப்பதவியை ஏற்க மறுத்து விட்டார்.

தற்போது முதுகுவலிக்காக இங்கிலாந்து சென்று சிகிச்சை பெற்று வருகிறார் டெண்டுல்கர். இம்மாதம் 19ம் திகதி இந்தியாவில் இலங்கை, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் முத்தரப்புப் போட்டிகளில் இவர் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிகிறது.

இலங்கை, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் பங்குபற்றும் முத்தரப்புப் போட்டிகள் பற்றிய விவரங்கள் இதோ:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் | 19 | இலங்கை | எதிர் | பாகிஸ்தான் | ஜம்ஷெட்பூர் |
| மார்ச் | 22 | இலங்கை | எதிர் | இந்தியா | நாக்பூர் |
| மார்ச் | 24 | இந்தியா | எதிர் | பாகிஸ்தான் | ஜெய்ப்பூர் |
| மார்ச் | 27 | இலங்கை | எதிர் | பாகிஸ்தான் | விசாகப்பட்டினம் |
| மார்ச் | 30 | இலங்கை | எதிர் | இந்தியா | புனே |
| ஏப்ரல் | 01 | இந்தியா | எதிர் | பாகிஸ்தான் | மொஹாலி |
| ஏப்ரல் | 04 | இறுதிப்போட்டி | | (பகலிரவு) | பெங்களூர் |

# அக்ரம் சாதனை

**பா**கிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான வாஸிம் அக்ரம் டெஸ்ட் போட்டிகளில் 2 முறை 'ஹட்ரிக்' சாதனை புரிந்துள்ளார். அடுத்தடுத்து 3 பந்துகளில் 3 விக்கெட்டுக்களை வீழ்த்துவதுதான் 'ஹட்ரிக்' (HAT-TRICK)



ஆசிய டெஸ்ட் சாம்பியன் கோப்பைப் போட்டிக்காக இலங்கையுடன் நடந்த லீக் போட்டியிலும், இறுதிப்போட்டியிலும் அக்ரம் 'ஹட்ரிக்' சாதனை புரிந்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 22 வீரர்கள் 25 தடவைகள் 'ஹட்ரிக்' சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் மூவர் இரு தடவைகள் 'ஹட்ரிக்' எடுத்துள்ளனர்.

இருமுறை 'ஹட்ரிக்' எடுத்த வீரர்கள் வரிசையில் மூன்றாவதாக அக்ரம் சேர்ந்துள்ளார். இதற்கு முன் மத்தியூ மற்றும் ட்ரம்பிள் ஆகிய இரு அவுஸ்திரேலிய வீரர்கள் இருமுறை 'ஹட்ரிக்' சாதனை புரிந்துள்ளனர்.

டெஸ்ட் போட்டிகளில் அக்ரமைத் தவிர எந்தவொரு ஆசியநாட்டு வீரரும் 'ஹட்ரிக்' சாதனை செய்யவில்லை. எனவே டெஸ்ட் போட்டிகளில் 'ஹட்ரிக்' எடுத்த முதலாவது ஆசிய வீரர் என்ற சாதனைக் குரியவர் வாசிம் அக்ரம்.

இதுமட்டுமன்றி அக்ரம் ஒருநாள் போட்டிகளிலும் இருமுறை 'ஹட்ரிக்' சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் இருமுறை 'ஹட்ரிக்' எடுத்த ஒரே வீரர் என்ற சாதனைக்குரியவரும் அக்ரம்தான்.

உலகில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் 300க்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள ஒரே ஒரு பந்துவீச்சாளர் என்ற சாதனைக் குரியவராக இருக்கும் அக்ரம், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் இருமுறை 'ஹட்ரிக்' எடுத்த ஒரே ஒரு வீரர் என்ற உலக சாதனையையும் படைத்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 53

**ஆ**ண்டவருடைய புனித ஆவியால் நிரப்பப்பெற்ற புனிதராகிய தானியேல், அதிகாரிகளால் மன்னர் பெல்சாட்சர் முன் கொண்டு வரப்பட்டார். மன்னர் பெல்சாட்சரின் தந்தையாரான நெபுகட்நேசருக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த தானியேலை பெல்சாட்சர் உரிய முறையில் அதுவரை அறிந்திருக்கவில்லை. தானியேலும் சற்று ஒதுங்கியே வாழ்ந்து வந்தார்.

பாபிலோனிய நாட்டுப் பிரமுகர்கள் ஆயிரம் பேருக்கு மன்னர் விருந்து நடத்திக் கொண்டிருந்தபோது, சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு கை மட்டும் தோன்றி சில வார்த்தைகளை சுவரில் எழுதிவிட்டு மறைந்து விட்டது. இதனால் திகிலடைந்த மன்னரும் மண்டபத்தில் இருந்த பிரமுகர்களும் அச்சங் கொண்டிருந்தனர். மாயமாக வந்த கை எழுதிய எழுத்துக்களைப் படித்து விளக்கம் சொல்ல எவராலும் முடியாததனால், தானியேல் அழைத்து வரப்பட்டார்.

### தானியேல் தந்த விளக்கம்

சுவரில் எழுதப்பட்டிருந்த வாக்கியங்களை தானியேல் வாசித்துவிட்டு மன்னர் பெல்சாட்சரைப் பரிதாபமாகப் பார்த்தார்.

"மன்னவரே! மக்களை வழி நடத்திச் சென்று அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து, நீதி, நேர்மை தவறாது வாழ வழி காட்டுவதுதான் ஒரு சிறந்த மன்னரின் பிரதானமான கடமை. ஆண்டவர் இதற்காகவே மக்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து மன்னராக்குகிறார். கடவுளால் உயர்த்தப்படும் எவனும், தானே சகலவற்றுக்கும் பெரியவன் என்று இறுமாப்படையலாகாது. உண்மையில் ஆண்டவரே உலகம் அனைத்துக்கும் பாதுகாவலன்; அவருடைய பெருமைக்கு ஈடும் இணையும் கிடையாது.

உமது தந்தையாரான நெபுகத்நேசருக்கு இறைவன் சகல வல்லமையையும் கொடுத்தார். மக்களை வழி நடத்துவதற்கான வழி முறைகளையும் வகுத்துக்கொடுத்தார். ஆனால் மன்னரோ மமதை மேலீட்டால் ஆண்டவரையே மறந்தவராய்- ஆண்டவரை மதியாமல்- நடந்தார். இதனால் அவர் மிருகங்களுக்கும் கேவலமான நிலையை அடைந்தார். ஆண்டவரே அனைத்துக்கும் கர்த்தா என்பதனை உணர்ந்த பின்னரே அவர் மீண்டும் மனித உருவம் பெற்றார்.

மன்னவரே! நீர் மன்னர் என்ற நிலையை அடைந்ததும் உமக்கும் மமதை கூடி விட்டது. இல்லாவிட்டால், எருசலேத்தில் ஆண்டவரின் திருக்கோவிலிருந்து கொண்டுவரப்பட்ட புனிதப் பொருட்களை உமது விருந்தினர்கள் மது குடிக்கவும் மாமிசம் புசிக்கவும் பயன்படுத்தியிருப்பீரா? உமது அகங்காரத்துக்கு முடிவு காலம் நெருங்கிவிட்டது. இதனையே அதோ அச்சுவரில் எழுதப்பட்டுள்ள வாக்கியங்கள் உணர்த்துகின்றன!"

இவ்வாறு தானியேல் படபடவென்று பேசியதும் மன்னரும் விருந்தினரும் திகிலடைந்து தடுமாறினார்:

தானியேல் சுவரிலுள்ள வாசகங்களைப் பலமாகப் படித்தார். தொடர்ந்து வாசகத்தில் காணப்பட்ட வார்த்தைகளுக்குரிய விளக்கத்தையும் கூறினார்.

*"மேன மேனே,*
*தேகேல், பார்சின்..."*

*★ 'மேனே': ஆண்டவர் உமது ஆட்சிக்காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார்.*

*★ 'தேகேல்': தராசில் நீர் ஏற்றப்பட்டீர் உமது எடை நன்றாகக் குறைந்து விட்டது.*

*★ பர்சின்: உமது நாடான பாபிலோன் ஆட்சி இரு கூறாக்கப்பட்டு மேதியருக்கும் பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டுவிட்டது.*

இவ்வாறு தானியேல் விளக்கம் கொடுத்த அன்றிரவே மன்னர் பெல்சாட்சர் கொலை செய்யப்பட்டார்.

### தண்டல்காரர்

பாபிலோன் ஒரு பகுதியில் மேதிய இனத்தைச் சேர்ந்த தாரியு என்பவர் அரசரானார். இவருக்கு அப்போது அறுபத்திரண்டு வயதாகிவிட்டது.

அரசுக்குரிய வரியை வசூலிப்பதற்காக நாடெங்கும் நூற்றிருபது வரி அறவிடும் தண்டல்காரர்கள் நியமிக்கப்பட்டனர். பணம் அறவிட்டுவரும் தண்டல்காரர்களிடமிருந்து ஆட்சிக்கு வேண்டிய பணத்தைப் பெற்று அதற்கான கணக்கு வழக்குகளைக் கவனிப்பதற்காக மூன்று அதிகாரிகளை மன்னர் தாரியு நியமித்திருந்தார். இவர்களில் தானியேலும் ஒருவராவார்.

சிறந்த ஞானியும் உத்தமரும் நேர்மையான போக்கும் கொண்டவரான தானியேல், தண்டல்காரரின் கணக்கு வழக்குளை மிகவும் கறாராகக் கண்காணித்தார். எவ்வித மோசடியும் இடம் பெறாமல் கவனமாக இருந்தார். இதனால் அவர் மீது தண்டல்காரர்கள் கடும் கோபம் கொண்டவர்களாக இருந்தனர். இதனால் தண்டல்காரர்களோ அரச நிதியுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களோ நிதியைக் கையாட முடியவில்லை. இதனால் தானியேலை எப்படியாவது தீர்த்துக் கட்டிவிடத் தீர்மானித்தனர்.

தானியேலிடம் எவரும் எத்தகைய பிழைகளையோ தவறுகளையோ கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே ஏதவாது ஒரு தந்திரத்தைக் கையாண்டு அவருக்குத் தீங்கு

# தானியேல் செய்த குற்றம்

விளைவிக்கத் திட்டம் தீட்டினார்கள். தானியேலின் தெய்வ வழிபாட்டை அடிப்படையாக வைத்துப் பழி தீர்த்துவிடலாம் என்று முடிவெடுத்தனர்.

தானியேல் மீது பொறாமை



## இராஜகுமாரன்

கொண்டிருந்த பாபிலோனிய மந்திரவாதிகள், மாயவித்தைக்காரர்கள் மற்றும் குருமார் ஆகியோருடன் தண்டல் காரர்களும் இணைந்து சதியாலோசனை செய்து கொண்டு தாரியு மன்னரை அணுகினர். தலைமைக் குருவே இக்குழுவுக்குத் தலைமை தாங்கிச்சென்றார்.

"மாமன்னவரே! எமது தெய்வத்தை நிந்தனை செய்பவர்கள் நாட்டில் மலிந்து விட்டனர். ஆகவே உடனடியாகவே தாங்கள் ஒரு சட்டம் இயற்றி, அதனை அரச ஆணையாக ஒப்பமிட்டுப் பிரகடனப்படுத்தவேண்டும். தாங்களே எமது தெய்வத்தின் பிரதிநிதியாக விருந்து ஆட்சி செலுத்துகின்றீர்கள். ஆகவே, தங்களைத் தவிர-இந்த நாட்டில் வாழும் எவரும், முப்பது நாட்களுக்கு வேறு எந்தத் தெய்வத்தையும் வழிபடலாகாது. அப்படி எவராவது வேறு தெய்வங்களை வணங்குவது கண்டு பிடிக்கப்பட்டால், அவர், உடனடியாக சிங்கங்கள் வாழும் குகைக்குள் தள்ளப்பட்டு அம்மிருகங்களுக்கு இரையாக்கப்படுவார்.

மேதியரின் சட்டங்களும் பாரசீகரின் சட்டங்களும், போன்று அரசரினதும் அதிகாரிகளினதும் அங்கீகாரம் பெற்று சட்டமாக்கப்பட்டால் அதனை மீறுவதற்கு எவருக்கும் உரிமையில்லை. முப்பது நாட்களுக்கு மட்டும் இச்சட்டத்தினை அமுல் நடத்துமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறோம்!"

இத்தகைய ஒரு நிலைப்பாட்டை பிரதம குருவும் ஏனைய பிரமுகர்களும் திடீரென எடுத்தமைக்கான உண்மைக் காரணத்தினை அறிந்திராத மன்னர், சட்டத்தை இயற்றி ஒப்பமிட்டார்.

### குற்றமும் தண்டனையும்

இத்தகைய புதுமையானதொரு சட்டம் இயற்றப்பட்டதை தானியேல் அறிந்து கொண்டார். தனது இல்லம் சென்று மாடியிலிருந்த தனது பூஜை அறைக்குச் சென்றார். எருசலேம் திருக்கோவிலிருக்கும் திசை நோக்கி இருந்த சாளரத்தைத் திறந்து ஆண்டவரைத் துதித்தார். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த குருமாரும் ஏனைய அதிகாரிகளும் அவ்வில்லத்துள் புகுந்தனர். கூடவே அழைத்து வந்திருந்த காவலர்களை, தானியேலைக் கைது செய்யும்படி கட்டளையிட்டனர்.

அரசருடைய முன்னிலையில் தானியேல் நிறுத்தப்பட்டார். அரச ஆணைக்கு மாறாக வேறு தெய்வத்தை வணங்குகையில் கையும் களவுமாக தானியேல் பிடிபட்டார் என்று வாதாடினார்கள். அவரை உடனடியாக சிங்கக் குகைக்குள் போட்டு, அச்சிங்கங்களுக்கு இரையாக்கிவிட வேண்டும், என்று குருமாரும் தண்டல்காரர்களும் அதிகாரிகளும் மன்னரிடம் கேட்டுக் கொண்டனர்.

மன்னருக்கு இது பெரும் தர்மசங்கடமான நிலையினை ஏற்படுத்தியது. தனது ஆண்டவரைத் துதிப்பதைத் தவிர வேறு எக்குறையும் தானியேலிடம் இல்லை. அவர் தனது ஆண்டவரைத் துதிப்பதை தாரியு மன்னர் எப்போதே அறிந்தவர். அதனை ஒரு குற்றமாக எப்போதுமே மன்னர் கருதியதில்லை. தானியேல் மீது பொறாமை கொண்டவர்கள், அவரை ஒழித்துக் கட்டுவதற்காகவே இத்தகைய சூது செய்துள்ளனர் என்பதை மன்னர் அப்போது தான் கண்டார். இத்தகைய மோசடிக்குத் தானும் உடந்தையாக இருந்துவிட்டதை உணர்ந்து மிகவும் வேதனைப்பட்டார்.

தானியேல் மீது பழி போட்டவர்கள் சட்டப்படி அவருக்குத் தண்டனை வழங்கியே ஆக வேண்டும் என்று மன்னரை வற்புறுத்தினர். எதுவுமே செய்ய முடியாத நிலையிலிருந்த மன்னர், தானியேலை-சட்டப்படி சிங்கங்கள் வாழும் குகைக்குள் போட்டு விடுமாறு தீர்ப்பு வழங்கினார். காவலர்கள் தானியேலை அழைத்துக் கொண்டு குகைக்குச் சென்றனர். அக்குகைக்குள் சில சிங்கங்கள் பசியுடன் காத்துக் கிடந்தன. குகையை மூடியிருந்த பெரும் கல்லைச் சிறிதளவு நகர்த்தி தானியேலை உள்ளே தள்ளி விட்டனர்.

மன்னர் மனம் வெதும்பியவராக ஆண்டவரிடம் முறையிட்டார். தானியேலுக்கு சிங்கங்களால் எதுவித தீங்கும் ஏற்படலாகாது என்று பிரார்த்தித்தார்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை (51) விடை** ☛ 'பெல்தசாச்சர்.

**பரிசு பெறுவோர்:**

| | |
|---|---|
| 1. பொ.வதனி, கணேச வித்தியாலயவீதி, வந்தாறுமூலை. | 3. எஸ்.செல்வராஜ், 42. K. நவகம்புர, கொழும்பு-14. |
| 2. ரா.ஜெயந்தி, தாண்டியடி, கோமாரி. | 4. ஜே.ஜெரோமியா, மாவல, பேராதனை. |

5. செல்வி யோ.ஜயந்தி, உதயபுரம் தமிழ் வித்தியாலயம், பெரியகல்லாறு-03.

**திருமறை 53 வினா:-** தானியேலுக்குத் தண்டனை தந்த மன்னரின் பெயர்- அவர் சார்ந்த இனம்- என்பவற்றைக் கூறுக.

மார்ச். 27க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 53- தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

---







## தும்மலை வரவேற்கிறோம்

**ஆ**ளும் கட்சி, எதிர்க்கட்சி தலைவர்கள் ஏதேச்சையாக சந்தித்தபோது ஒரே நேரத்தில் தும்மல் வந்து விட்டதாமே. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று எமது நிருபர் எழுப்பிய மிகப்பெரிய அரசியல் கேள்விக்கு, தமிழ்க்கட்சி ஒன்றின் தலைவர் பின்வருமாறு கூறினார்:

"அத்தகைய தும்மலை நாம் வரவேற்கிறோம். ஆனால் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காகவும் இவ்வாறு தும்மினால் என்ன என்பதே, மக்கள் நலனில் மட்டற்ற அக்கறையும், சனநாயகத்தில் சலிக்காத விருப்பமும் கொண்ட எமது கேள்வியாகும்.

இனப்பிரச்சனை தீர்வுக்கும் இதே போல தும்மி ஒத்துழைத்தால் எங்கள் மனம் குளிரும்.

ஒரே நேரத்தில் தும்மல் வருகிறது என்பதே, ஒற்றுமையாக வாய்ப்புண்டு என்பதற்கான அடையாளம்தான்.

தமிழ்க்கட்சிகளாகிய நாம் பாடுபட்டது வீண்போகவில்லை. எங்கள் இலட்சியம் வெற்றிபெறப் போகிறது.

ஆளும் கட்சி எதிர்க்கட்சி ஒற்றுமையை உருவாக்கும் வரை ஓயமாட்டோம். அடுத்த பொங்கலுக்குள் அந்த ஒற்றுமையை உருவாக்க இந்த தும்மலை நல்ல சகுனமாகக் கொள்வோம்" என்று அவர் உணர்ச்சிவசப்பட்டு கூறினார். ■






## பேச்சாளர் பொன்சேகா

**ம**திப்புக்குரிய தொண்டர்களே! மகாஜனம் பொருந்திய குண்டர்களே! நாம் உங்களை கள்ள வாக்குப் போடவேண்டாம் என்று கூறியதாக நினைத்து இந்தளவுக்கு வருத்தப்படுவீர்கள் என்று கனவிலும் நினைக்கவில்லை. கள்ள வாக்குப் போடுவதும், போடாதிருப்பதும் உங்கள் உரிமை, அதுபோல நீங்கள் கள்ளவாக்குப் போட்டு கையும் களவுமாக மாட்டிக்கொண்டால் உங்களைக் கைவிடுவதும், அன்போடு கண்டித்து பேசுவதும் தலைவர்களான எமது உரிமை என்பதையும் நீங்கள் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O. (QD/40/NEWS/99)



பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகளில் பேசுகின்றன.
கிளை: 105. காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# பொதிச்சுமை





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

➡ பொதி, பொதி என்று கூறிய அரசாங்கம், தமிழ் மக்களை ஏமாற்றவில்லை.

இடம் பெயரும் போது சுமக்கும் பொதி, அன்றாடப் பாவனைப் பொருட்களுக்காக அலைந்து சுமந்து வரும் பொதி என்று பல்வேறு பொதிகளை தமிழ் மக்களின் முதுகில் சுமத்தியுள்ளது.

இங்கு படத்தில் காணப்படுவது விறகுப் பொதி. எரி பொருள் தடையால் விறகு சுமந்து வருகிறார் ஒரு தமிழர்.

விறகை சைக்கிளில் கோபுரம்போல உயர அடுக்கிக் கட்டி, சைக்கிளை ஓட்டிச் செல்வதும் ஒரு கலை. வாழ்க்கையே போராட்டமாக மாறிய பின்னர் ஒடி ஒளியாமல், விரக்தியில் கருண்டு போகாமல் வாழ்வதற்காக போராடும் மானிடர்கள் இவர்கள். இது வன்னியில் எடுக்கப்பட்ட படம்.

# உச்ச விலை



➡ ஜேர்மன் நாட்டின் 'சூப்பர் மொடல்' அழகி கிளொடியா ஸ்கிஃபர் இந்த உலகப் புகழ் பெற்ற வலன்ரினோ உடையில் தோற்றமளிக்கிறார்.

வலன்ரினோ என்பவர் தனது பெயரிலேயே ஆடை வடிவமைக்கும் நிறுவனம் ஒன்றினை 39 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தார். அவருக்குத் துணையாக-பங்காளராக கியன்காலோ கியாம்மெட்டி என்பவரையும் சேர்த்துக் கொண்டார்.

வலன்ரினோ வடிவமைத்த ஆடைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. 38 வருடங்கள் மிக உன்னதமான விற்பனை நடைபெற்று வருடமொன்றுக்கு 10.8 மில்லியன் பவுண் இலாபம் கிடைத்து வந்தது. தம்நாட்டு மதிப்பில் 120 கோடியே 96 இலட்சம் ரூபாய்கள். ஆனால் என்ன காரணமோ தெரியாது: இந்த ஆடை வடிவமைப்பு நிறுவனத்தை 187.5 மில்லியன் பவுணுக்கு (2100 கோடி ரூபாய்கள்) விற்றுவிட்டனர். உலகிலேயே மிக உச்ச விலைக்கு போன ஆடை வடிவமைப்பு நிறுவனம் இதுதான்.

இன்னொரு மேலதிக ஆச்சரிய தகவல். ஆடை விற்பனையில் உலக சாதனை படைத்தவர் பெயர் வெர்சசே.

⬆ இலண்டனிலுள்ள வெர்சசேயின் கடையில் தான் அரச குடும்பத்தினரும் பிரமுகர்களும் துணிகளை வாங்குவார்கள்-வேண்டிய ஆடைகளையும் வடிவமைத்து விடுவார்கள். 1993ல் இவருடைய துணி மற்றும் ஆடைவடிவமைப்பு நிறுவனங்களின் வருமானம் 46 கோடி 39 இலட்சம் பவுண் ஆகவிருந்தது. நம்நாட்டு பணமதிப்பில் சொன்னால் மூச்சுத் திணறும். 5195 கோடியே 68 இலட்சம் ரூபாய்கள். உலகிலேயே மிகக் கூடுதலான வருமானம் பெற்ற ஆடை வடிவமைப்பு நிறுவனம் இதுதான்.

அமெரிக்காவின் புளோரிடா மாநில மியாமி நகரில், தனது இல்லத்தில் 1997ம் ஆண்டு, வெர்சசே எவனோ ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவருடைய இறுதிச் சடங்கில் வேல்ஸ் இளவரசி டயானா, டயானாவின் இறுதிச் சடங்கின் போது பாடிய எல்ரன் ஜோன் மற்றும் பல நாட்டு ஆடை வடிவமைப்பாளர்களும் பிரமுர்களும் பங்கேற்றனர்.

⬇ மனிதர்கள் எத்தனையோ வகையான பிராணிகளை தத்தமது வீடுகளில் வைத்து வளர்க்கிறார்கள். ஆடு, மாடு, கோழி, கிளி, பூனை, நாய் ஆகியவை செல்லப் பிராணிகளாகி விடுகின்றன. இவற்றில் மனிதனுக்கு மிகவும் பயன்தரும் பிராணி நாய் மட்டும் தான்.

நாய்களுக்கு சாகச விளையாட்டுக்களைப் பழக்குவது மிகவும் சுலபம். படத்தைப் பாருங்கள் உயரப் பாய்வதில் சாதனை புரிகிறது 'ஒலிவ் ஒயில்' என்ற பெயருடைய வளர்ப்பு நாய்.

# தடைதாண்டி




அமெரிக்காவில் இல்லி நொயில் மாநிலத்திலுள்ள ஆர்லிங்டன் ஹைற்ஸ் என்ற இடத்தில் 1996 மார்ச் 22ம் திகதி நடைபெற்ற வீட்டு வளர்ப்பு நாய்களுக்கான காட்சியின்போது 'ஒலிவ் ஒயில்' உயரப் பாய்ந்து உலகச் சாதனை புரிகிறது. 1.5 மீட்டர் (4 அடி 11 அங்குலம்) உயரம் பாய்வதை இப்படங்களில் காணலாம்.

இதே ஆண்டு (1996 அக்டோபர் 5ம் திகதி கனக்டிக்கட் மாநிலத்தில்-மாஞ்செஸ்டர் வில்ஹாம் பார்க் எனுமிடத்தில் வளர்ப்பு நாய்களுக்கான 3 மைல் நீள 'நடை பவனி' இடம் பெற்றது. இதில் மொத்தம் 1086 நாய்கள் பங்கு பற்றின. இவற்றை வளர்ப்பவர்களும் நாய்களுடன் சேர்ந்து நடந்தனர். இந்த நடை பவனி தொடர்பான படமும் 291 வது முரசில், தகவல் பெட்டியில் இடம் பிடித்திருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் அர்கவின்
28.03.1999

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அருண் தவச்செல்வன்-சுகுணா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அர்கவின் தனது இரண்டாவது பிறந்ததினத்தை 28.03.99 அன்று சுவிஸ் ஓசேர்ன் நகரில் உள்ள தனது இல்லத்தில் எளிமையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் இருக்கும் அம்மப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார் அண்ணாமார், மாமாமார், அத்தைமார், சுவிஸில் இருக்கும்:- சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார், தம்பி, அத்தான். ஜேர்மனியில் இருக்கும்:- மாமாமார், அத்தை, மச்சான், தாத்தா. இலண்டனில் இருக்கும்:- மாமா, சித்தப்பா. சுவீடனில் இருக்கும்:- சித்தப்பா. கனடாவில் இருக்கும்:- பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், அக்கா. கொலன்டில் இருக்கும்:- சித்தப்பா, சித்தி, அண்ணா, தங்கை மற்றும் ஓசேர்ன் மான்ரவில் இருக்கும்:- மாமாமார், அன்ரிமார், அக்காமார், அண்ணாமார், உற்றார் உறவினர் அனைவரும் ஐங்கரன் அருளால் நீடூழிகாலம் வாழ்க என இனிய மகன் அர்கவினை வாழ்த்துகின்றார்கள்.

தகவல் அருண் (சுவிஸ்)

# நம்பிக்கை



இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர்தான் மேற்கு வங்கத்தின் சிங்கம் செளரவ் கங்குலி. ஒரு நாள் போட்டிகளில் அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கரோடு களமிறங்கும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்.

ஒரு நாள் போட்டிகளில் சிறந்த ஆரம்ப துடுப்பாட்ட ஜோடியாக வெற்றி உலா வந்தவர்கள் மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்மண் ஹெய்ன்ஸ்-கோர்டன் கிறீனிட்ஜ். இவர்களுக்குப் பின் கங்குலி-டெண்டுல்கர் ஜோடி சிறப்பாக வலம் வருவார்கள் என்பது பலரது கணிப்பு.

இந்தக் கணிப்பை இவர்கள் பொய்யாக்கவில்லை. இதற்குச் சான்றாக சென்ற வருடம் இலங்கைக்கெதிராக கொழும்பில் 252 ஓட்டங்களை முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாகப் பெற்று உலக சாதனை படைத்தனர்.

சென்ற வருடம் ஒருநாள் போட்டிகளில் டெண்டுல்கருக்கு அடுத்தபடியாக, அதிக ஓட்டங்களைக் குவித்தவர் கங்குலி. இவர் சென்றவருடம் 36 போட்டிகளில் கலந்து கொண்டு 1328 ஓட்டங்களைக் குவித்தார். இதில் 4 சதங்களும் 7 அரைச்சதங்களும் அடித்தார். இவரது சராசரி 41.50

சென்ற வருட இறுதிவரை கங்குலி 87 ஒரு நாள் போட்டிகளில் 3036 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 5 சதங்களும் 20 அரைச் சதங்களும் அடங்கும். சராசரி 40.48 அதிகபட்சம் பாகிஸ்தானுக்கு எதிராக 124 ஓட்டங்கள்.

சென்ற வருட இறுதி வரை 23 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கங்குலி 1731 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 6 சதங்கள், 5 அரைச்சதங்கள் அடங்கும். அதிக பட்சமாக இலங்கைக்கெதிராக 173 ஓட்டங்கள். டெஸ்டில் இவரது சராசரி 5.91.


படிப்பகம்